தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 392.

திருப்புல்வயல்

குமரேச சதகம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

1998 விலை: ரூ. 65-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 392.

குருபாததாசர்

இயற்றிய

திருப்புல்வயல்

குமரேச சதகம்

பதிப்பாசிரியர் :

ய. மணிகண்டன், எம். ஏ., எம்.ஃபில்.,

தமிழ்ப்பண்டிதர், தமிழ்த்துறை,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

1998 விலை : ரூ. 65-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	குமரேச சதகம்
பதிப்பாசிரியர்	:	திரு. ய. மணிகண்டன்.
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	392
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	நவம்பர், 1998
தாள்	:	16 கி. கி. டி. என். பி. எல்.
நூல் அளவு	:	21 x 14 செ. மீ.
பக்கங்கள்	:	332
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் அச்சகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	நீதி இலக்கியம்
விலை	:	ரூ. 65—00

வெளியீட்டாளர் முகவுரை

அரிய பன்மொழிச் சுவடிகளின் கருவூலமாகவும், நூற் களஞ்சியமாகவும் திகழ்ந்து, அறிவுத்துறையினர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துவரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும்.

இந்நூலகம், பன்மொழிகளின் மேம்பாட்டுக்கும் அருமை வாய்ந்த பல நூல்களை ஓலைச்சுவடிகளிலிருந்து பதிப்பித்து வெளியிட்டு அருந்தொண்டாற்றி வருகின்றது.

இவ்வரும்பணியின் தொடர்ச்சியாக, தமிழின் நீதி சதக இலக்கியங்களுள் ஒன்றான 'குமரேச சதகம்' தற்போது ஆய்வுப்பதிப்பு நூலாக இங்குப் பதிப்பித்து வெளியிடப் படுகின்றது.

'சதகம்' என்னும் சிற்றிலக்கிய வகை நூல்கள், இறைமை, நீதி, வரலாறு முதலான பொருண்மைகளில் ஒன்றைப் பாடுபொருளாகக் கொண்டிலங்கும்; பெரும்பாலும் 'இரட்டை ஆசிரிய விருத்த' யாப்பு வடிவிலான நூறு பாடல்களைக் கொண்டிருக்கும்.

இங்குப் பதிப்பித்து வெளியிடப் பெறுகின்ற 'குமரேச சதகம்' நீதிகூறும் பொருண்மையிலான நூறுபாடல்களைக் கொண்ட நூலாகும். இந்நூல், 'குருபாத தாசர்' என்னும் புலவர்பெருமகனாரால் இயற்றப்பெற்றதாகும். இந்நூல், அரிய பல நீதிகளை அழகிய உவமைகள், பழமொழிகளின் மூலம் சிறப்பாக எடுத்துரைக்கும் சீர்மை வாய்ந்ததாகும்.

சங்க இலக்கியங்கள் போன்ற முன்னை நூல்கள் ஒப்புமைப் பகுதிகள், பாடவேறுபாடுகள் முதலிய பதிப்பு நுட்பங்கள் அமைய வெளியிடப்பெற்றமைபோலப் பிற்காலத்

தமிழிலக்கியங்களும் பதிப்பித்து வெளியிடப்பெற வேண்டு மென்னும் அறிஞர்தம் விழைவு கருத்தில் கொள்ளப்பெற்று, இந்நூல் விரிவான நிலையில் ஒப்புமைப் பகுதிகள், பாட வேறுபாடுகள், பல்வகை அகரநிரல்கள் அமைய ஆய்வுப் பதிப்பாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

இந்நூலை அரிதின்முயன்று சிறப்புறப் பதிப்பித்துள்ள இந்நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. ய. மணிகண்டன் அவர் களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் நன்முறையில் வெளிவரத் தேவையான நிதி யுதவி நல்கிய மைய அரசுக்கும், இந்த நூலகத்தைச் செவ்வனே பராமரித்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும், பள்ளிக்கல்வித்துறைச் செயலாளர் திரு. எம். ஏ. கௌரிசங்கர், இ. ஆ. ப., அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நூலை நுண்ணாய்வுசெய்து வெளியிடப் பரிந் துரைத்த முனைவர் பா. மதிவாணன் அவர்களுக்கு எனது நன்றியையும், இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு. நா. தியாகராஜன், எம்.ஏ.,பி.எல்., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழிலக்கிய ஆர்வலர்களும், சுவடியியல்—பதிப்பியல் துறையினரும் இந்நூற்பதிப்பை ஈடுபாட்டோடு வரவேற்பர் என நம்புகின்றேன்.

து. நா. இராமநாதன், இ. ஆ. ப.,

தஞ்சாவூர்.
28—11—98.

மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

பதிப்பாசிரியர் முகவுரை

நீதி சதக இலக்கியங்களுள் நேர்த்திமிக்கனவான அறப்பளீசுர சதகமும், குமரேச சதகமும் தம் கருத்தழகாலும் கவியழகாலும் இலக்கியச்சுவையில் தலைப்படுவோரை ஈர்த்துவருவனவாகும். இவை என்னையும் ஈர்த்தன.

பதினெண்கீழ்க்கணக்கில் இடம்பெற்றுள்ள நீதி நூல்கள் தொடங்கி இக்காலத்தில் தோன்றியுள்ள நீதி நூல்கள் வரை பார்வையைச் செலுத்தியபோது நீதிநூல்களின் பல தனித்த இயல்புகள் என் கவனத்தைக் கவர்ந்தன.

அழகிய உவமைகள், பழமொழிகள், அடுக்கிச் சொல்லும் அருமை வாய்ந்த உத்திகள், புராணக்கதைக் குறிப்புக்கள், இரட்டையாசிரிய விருத்தத்தின் அற்புதமான ஓட்டம், நீதிக்கருத்துக்களோடு இணைந்து இடம்பெறும் பொது அறிவுக்கருத்துக்கள் முதலிய நீதிநூல்களின் தனித்த சிறப்புக்கள், அருமையான இலக்கியங்களை ஆழ்ந்து சுவைப்போரை வசப்படுத்துவதில் வியப்புண்டோ? நானும் வசப்பட்டேன்.

நீதிசதகங்களுள் சிறுபருவம் முதல் சில பாடலடிகளால் என் சிந்தையில் பதிந்திருந்த 'குமரேச சதகத்தைப்' பதிப்பிக்கக் குறிக்கொண்டேன். முன்னமே பல பதிப்புக்களைப் பெற்றுள்ள 'குமரேச சதகத்'தை முன்னைப் பதிப்பினும் சிறப்புறப் பதிப்பிக்கும் 'ஆசைபற்றிப் பதிப்பிக்கலுற்றேன்!'

பதிப்பு நுட்பங்களமையக் 'குமரேச சதகத்'தைப் பதிப்பிக்க முனைந்த என் ஆசை பெரிது!

'கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது' என்னும் திருக்குறளும்,

'தஞ்சமொரு முயலையடு வென்றிதனில் யானையொடு
சமர்செய்து தோற்றல்நன்று' என்னும் குமரேச

சதக அடிகளும், 'உயர்வுள்ளி' இப்பதிப்பினை ஆய்வுப் பதிப்பாய் அமைக்க என்னை ஊக்கின! இம்முயற்சியில் எத்துணையளவு வெற்றிபெற்றேனோ? நூலைப் பயில் வோரின் தீர்ப்புக்கு இப்பதிப்பைப் படைக்கின்றேன்.

இப்பதிப்பின் இரு தனித்த சிறப்புக்களாக ஒப்புமைப் பகுதிகளையும், பாடவேறுபாட்டுப் பகுதிகளையும் அமைத் திருக்கின்றேன். விரிவான நிலையில் அமைந்திருப்பினும் இப்பகுதிகள் முன்னைக் குமரேச சதகப் பதிப்புக்களில் (பல நீதி நூற்பதிப்புக்களிலும்) இடம்பெறாதனவாகும்; இலக்கிய ஆய்வாளர் கண்படவேண்டிய பகுதிகளாகும். இப்பகுதிகள் 'நீதிநூல்களுக்கு இடையே இத்துணை ஒப்புமையா? சில அச்சுநூற் பதிப்புக்கள்—சில சுவடிகளுக்கிடையிலேயே இத்துணை பாடவேறுபாடுகளா?' எனக் கற்போரை வியக்க வும் மலைக்கவும் வைக்கும்; தொடர்சிந்தனைகளுக்கும் தொடர் ஆய்வுகளுக்கும் வித்தூன்றும் என நம்புகின்றேன்.

இக்'குமரேச சதகத்'தினைப் பதிப்பிக்க ஒப்புதல் அளித்த நூலக ஆளுநமைக் குழுவிற்கும், அதனை நான் பதிப்பித்தளிக்க இசைவளித்த அப்போதைய தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் அவர்களுக்கும், பதிப்பு வெளியாகிவரும் இந்நாளில் இப் பதிப்புக்கு வெளியீட்டாளர் முகவுரை வழங்கிய தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் பெரு மதிப்பிற்குரிய உயர்திரு து. நா. இராமநாதன், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் விரைந்துவெளிவர ஆவன செய்த மதிப்பிற்குரிய நிருவாக அலுவலர் திரு. நா. தியாகராசன், எம். ஏ., பி. எல்., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர்

மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன் எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களுக்கும், நூலின் கையெழுத்துப் பிரதியை நுண்ணாய்வு செய்து வெளியிடக் கருத்துரைத்த கரந்தை த. உ. கலைக்கல்லூரி முதுநிலை விரிவுரையாளர் முனைவர் பா. மதிவாணன் அவர்களுக்கும்,

இப்பதிப்பிற்குத் தேவையான நூல்களைப் பார்வையிட உதவிய சென்னை மறைமலையடிகள் நூலகம், உ. வே. சா. நூலகம், அரசுக் கீழ்த்திசைச் சுவடி நூலகம் ஆகியவற்றின் பொறுப்பாளர்களுக்கும், தம்முடைய அரிய நூற்களஞ்சியத் திலிருந்து தேவையான நூல்களை அன்போடு வழங்கி யுதவிய உயர்திரு சேக்கிழார் அடிப்பொடி தி. ந. இராமச் சந்திரன் அவர்களுக்கும்,

இந்நூலினை நன்முறையில் அச்சிட்டளித்த நூலக அச்சகத்தாருக்கும், நூற்கட்டுமானப் பிரிவினருக்கும் என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்கூறு நல்லுலகம் இப்பதிப்பின் குறைபொறுத்து நிறைபோற்றி வரவேற்குமென நம்புகின்றேன்.

தஞ்சை,
28—11—98.

ய. மணிகண்டன்,
பதிப்பாசிரியர்.

உள்ளுறை

*வெளியீட்டாளர் முகவுரை

*பதிப்பாசிரியர் முகவுரை

நூலாராய்ச்சி ... i—xxiv

காப்பு ... 2

அவையடக்கம் ... 3

நூல் ... 4—163

அருஞ்சொற் குறிப்புரை ... 164—187

பாடவேறுபாடுகள்—அட்டவணை ... 188—285

இருசுவடிகளில் புதிதாக இடம்பெற்றுள்ள பாடல்கள் ... 286, 287

கடவுளர், புராணமாந்தர் பெயர் முதலான இன்றியமையாச் சிறப்புப் பெயர் அகரநிரல் ... 288—290

நீதிசதகங்களின் அகரநிரல் ... 291, 292

பாடல் தலைப்பு அகரநிரல் ... 293—295

பாடல் முதற்குறிப்பு அகரநிரல் ... 296, 297

துணை நூற்பட்டியல் ... 298—300

நூலாராய்ச்சி

தமிழில் நீதி இலக்கியங்கள்

மனிதவாழ்வை வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நெறி முறைகள் 'அறம்', 'நீதி', 'தர்மம்' எனும் பெயர்களால் குறிக்கப்படுகின்றன.

தமிழில் நீதிக்கருத்துக்கள் சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்றைய இலக்கியங்கள்வரை இலக்கியங்களில் ஆங்காங்கு இடம்பெற்றும், தனித்த நூல்களாக உருப் பெற்றும் வழங்குகின்றன.

தமிழிலுள்ள நீதி இலக்கியங்களின் வரலாறு தனித்து வரையத்தகு பெற்றிவாய்ந்தது.

பதினெண்மேற்கணக்காம் சங்க இலக்கியங்களில் அறக் கருத்துக்கள் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன.

"ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே." —புறநானூறு 34

என்னும் செய்யுட்பகுதி போன்றவை அறக்கருத்துக்களையும் அறநூல் பற்றிய குறிப்புக்களையும் கொண்டுள்ளன.

பதினெண்கீழ்க்கணக்கில் பதினொரு நீதி இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளமை விதந்து குறிப்பிடத்தக்கது. அவற்றுள் நிகரில்லா நீதி இலக்கியமாகத் திருக்குறள் திகழ்கிறது.

ஔவையார், அதிவீரராமபாண்டியர் முதலானோரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, வெற்றி வேற்கை முதலிய, சிறார் நெஞ்சிலும் பதியும் சிறந்த நீதி இலக்கியங்கள் பிற்காலத்தில் தோன்றின.

பின்னர்ச் 'சதகம்' என்னும் சிற்றிலக்கிய வடிவின் பாடு பொருள்களுள் ஒன்றாக நீதிகூறல் இடம்பெற, நீதிசதகங்கள் பல்கின.

குமரகுருபரரின் நீதிநெறிவிளக்கம், சிவப்பிரகாசரின் நன்னெறி, முனைப்பாடியாரின் அறநெறிச்சாரம், நீதி வெண்பா, உலகநாதபண்டிதரின் உலகநீதி முதலியனவும் நேர்த்திமிகு நீதிநூல்களாகப் பிற்காலத்தில் தோன்றித் துலங்குகின்றன.

மாயூரம் வேதநாயகரின் நீதிநூல் போன்றவை நற்காலக் கொடையாய், நீதி இலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சி இடையறவுபடாமல் விளங்கத் தோன்றியுள்ளன.

வடமொழி, தெலுங்கு முதலான மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நீதி இலக்கியங்களும் செய்யுள் வடிவிலும், உரை நடை வடிவிலும் தமிழில் வழங்குகின்றன.

சதக இலக்கியங்கள்

தமிழில் பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கிய வடிவங்களுள் ஒன்று 'சதகம்' என்பதாகும். வடமொழி, தெலுங்கு, தமிழ் முதலானவற்றில் சதக இலக்கிய வடிவம் இடம்பெற்றுள்ளது. இறைமை, நீதி, வரலாறு முதலிய பாடு பொருள்களை முதன்மையாகக்கொண்டு தமிழில் சதக நூல்கள் அமைந்துள்ளன.

சதகநூல்கள் நூறுபாடல்களைக்கொண்ட, பெரும்பாலும் இரட்டையாசிரிய விருத்தயாப்பில் அமைந்த, பாடல்தோறும் ஒரே மகுட அடியைக்கொண்ட இலக்கிய வடிவமாகத் தமிழில் அமைந்துள்ளன. சில சதகங்கள் வேறு சில யாப்பு வடிவங்களில் அமைந்துள்ளன.

அவையாம்பிகை சதகம், இராகவ சதகம், இராமாயண சதகம், எம்பிரான் சதகம், வடவேங்கட நாராயண சதகம், அருணாசல சதகம், கந்தபுராண சதகம் முதலியன குறிப்பிடத்தக்க பக்தி சதகங்களாகவும்,

அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், தண்டலையார் சதகம், திருவேங்கட சதகம். கோவிந்த சதகம், கயிலாச நாதர்சதகம் முதலியன குறிப்பிடத்தக்கநீதிசதகங்களாகவும்,

ஈழமண்டல சதகம், காந்தி சதகம், கார்மண்டல சதகம். கானாட்டுச் சதகம், கொங்குமண்டல சதகம், சோழமண்டல சதகம், சேர மண்டல சதகம். தொண்டை மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் முதலியன குறிப்பிடத்தக்க வரலாறு கூறும் சதகங்களாகவும்,

அமைந்து தமிழை அணிசெய்கின்றன.

மருத்துவம், சிருங்காரம், தத்துவம் முதலிய பாடு பொருள்களிலும் சில சதக நூல்கள் தோன்றியுள்ளன.

சதக இலக்கியங்கள் குறித்த ஆய்வு நூல்கள்

முனைவர் ந. வீ. செயராமன் எழுதிய 'சதக இலக்கியங்கள்' எனும் நூல் சதக இலக்கியங்களை ஆய்வுக் கண்ணோட்டத்தில் அறிமுகம் செய்கிறது. முனைவர் ச. சிவகாமி எழுதிய 'தமிழ்ச் சதக இலக்கியம்' எனும் நூல் சதக இலக்கியங்களைச் சற்று விரிவாக ஆராய்கிறது. இவ்விரு நூல்களும் சதக இலக்கியங்குறித்து அறியப்புகுவார்க்கும் ஆராயப்புகுவார்க்கும் துணை செய்வனவாகும்.

நீதி சதக இலக்கியங்கள்

'பத்ருக்ரி நீதி சதகம்' வடமொழியில் பெருஞ்சிறப்புப் பெற்றது. தமிழிலும் செய்யுள் வடிவில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. 'சுமதி சதகம்' தெலுங்கில் புகழ்பெற்ற நீதி சதகமாகும். தமிழிலும் செய்யுள் வடிவில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

தமிழில் அறப்பளீசுர சதகம், குமரேசசதகம், தண்டலை யார் சதகம், திருவேங்கட சதகம், கோவிந்த சதகம் முதலியன புகழ்பெற்ற நீதிசதகங்களாகும். நம்பி சதகம் போன்ற பல ராலும் அறியப்படாத அருமையான நீதிசதகங்களும் தமிழி லுள்ளன.

தமிழிலுள்ள நீதிசதகங்கள், நீதிகளைமட்டும்கூறுவன, நீதிகளோடு பொது அறிவுச்செய்திகளையும் இணைத்துத் தருவன எனும் இருநிலைகளில் காணப்படுகின்றன. உடல் நலம் பேணல், நிமித்தம், ஊழ் போன்ற நம்பிக்கைகள், புலவர்கள், இலக்கியம், வழிபாடு, சோதிடம், புராணம், தலம் முதலிய பிற பொது அறிவுச் செய்திகளும் நீதிநூல் களுள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நீதிநூல்கள், புராணக்கதைகள், பழமொழிகள், அழகிய உவமைகள், அடுக்கிச்சொல்லும் உத்திகள் முத லானவற்றின் வாயிலாக நீதிகளை அழுத்தமுறக் கூறு கின்றன.

குமரேச சதகம்

'திருப்புல்வயல்' எனும் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானை-குமரேசனை முன்னிலைப்படுத்தி, நூறு செய்யுள்களில் நீதிகூறும் நூல் இக்'குமரேசசதக'மாகும்.

நூலமைப்பு

நூலின் தொடக்கத்தில் காப்புப் பாடல் ஒன்றும், அவையடக்கப்பாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளன. நூறாவது பாடல் நூற்பயன்கூறும் பாடலாக அமைந்துள்ளது.

காப்புப் பாடல் வெண்பா யாப்பிலும், பிற பாடல்கள் அனைத்தும் பன்னிருசீர் ஆசிரிய விருத்த யாப்பிலும் அமைந்துள்ளன.

இந்நூற் பாடல்கள் அனைத்தின் மகுட அடிகளும்,

'மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே'

எனும் தொடர்களைக் கொண்டு, புதுக்கோட்டையை அடுத்துள்ள 'புல்லை' எனும் 'திருப்புல்வயல்' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள குமரேசனைப் பராவுகின்றன; முன்னிலைப்படுத்தி நீதி கூறுகின்றன. 'திருப்புல்வயல்' எனும் தலம் சோழநாட்டைச் சார்ந்தது என்பதைப் பின்வரும் இந்நூற்பாடலடிகள்,

'மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
வாழவந் திடுமுதல்வனே' (51) —எனக்

காட்டி நிற்கின்றன.

நூலாசிரியர்

இக்குமரேச சதகத்தினை இயற்றிய புலவர் பெருமகனார் **குருபாததாசர்** ஆவார்.

இந்நூலின் இறுதிப்பாடலின் அடிகள், நூலின் ஆசிரியர்பற்றி,

'பன்னரிய புல்வயலில் வாலகும ரேசர்மேல்
பரிந்துகுரு **பாததாசன்**

பாங்கான தமிழாசி ரியவிருத் தத்தின்அறை
பாடலொரு நூறும்நாடி'

எனக் குறிப்பிடல் நோக்கத்தக்கது.

குருபாததாசரது இயற்பெயர் முத்துமீனாட்சிக் கவிராயர் எனக்கூறுவர். இந்நூல் இன்றைக்கு 225 ஆண்டுகளுக்கு முன் குருபாததாசரால் இயற்றப்பட்டது என்பர் இலக்கிய வரலாற்றாசிரியர்.

நூலாசிரியா ஆழமான சைவசமயப் பற்றும் முருக பக்தியும் உடையவர் என்பதனை

'வல்லமையினால்,
எண்ணத்தி னாலொன்றும் வாராது பரமசிவன்
எத்தனைப்படி முடியுமாம்' (44)

'வாடாம லிவையெலாஞ் சிவன்செயல்க ளல்லாது
மனச்செயலி னாலும்வருமோ' (85)

'முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினந்தவர்கள்' (18) முதலிய பாடலடிகளும்,

'எற்கு மாறாதுன் (முருகப்பெருமான்)மீது நினைவு' (9) முதலிய பாடலடிகளும், எடுத்துரைக்கும்.

நூலாசிரியரின் தமிழன்பு

இந்நூலின் ஆசிரியர், நூற்பாடல்களில் பல இடங்களில் முன்னைத் தமிழ்ப்புலவர் பெருமைபோற்றியும், தமிழ்ச் செய்யுள் இலக்கணத்தின் ஏற்றம் இசைத்தும் உள்ளதோடு, தமிழென்னும் சொல்லை மிக்க ஈடுபாட்டுடன் அமைத்துள்ளமை குறிக்கத்தக்கது.

அவ்வாறான சொல்லாட்சிகள் :

1 செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாம்
செந்தமிழ்க் கவிதுரும்பாம் 13

2	சிறிய தமிழ்ப்புலவர் வாக்கில் எழுகவியையும்	64
3	மங்காத செந்தமிழ்	15
4	தமிழினில் அகத்தியம்	24
5	மங்காத செந்தமிழ் கொண்டுநக் கீரர்க்கு வந்ததுயர் தீர்த்தமுருகா	46
6	தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயென்று தமிழிலா ராய்வர்கண்டாய்	
7	தமிழ்சொன்ன நக்கீரன்	96
8	பாங்கான தமிழ் ஆசிரிய விருத்தம்	100

மேலும் தமிழ்நூல்களான குறள் (86), அகத்தியம் (24), கந்தர் அனுபூதி (62) ஆகியவற்றை நூலாசிரியர் பெயர் சுட்டிக் குறித்திருப்பதுடன், தமிழ்ப்புலவர்களான ஔவையார் (70), நக்கீரர் (46,66,96), அருணகிரி (62), சம்பந்தர் [குறிப்பால்] (59) ஆகியோரைப் பெயர்சுட்டிப் போற்றியிருப்பதையும் நூற்பாடல்களில் காணலாம்.

முன்னை இலக்கியத் தாக்கம்

புறநானூறு, திருக்குறள், நாலடியார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, வடமொழி நீதிநூல்கள் முதலியவற்றின் தாக்கத்தை இந்நூலின் பல பாடலடிகள் கொண்டிலங்குகின்றன.

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'

என்னும் புறநானூற்றுப் பாடலடிகளின் கருத்தையும்,

'வையம் மன்னுயி ராகவும் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னவன்'

என்னும் கம்பராமாயணப் பாடலடிகளின் கருத்தையும் தாங்கியதாக இந்நூலின் பின்வரும் பாடலடிகள் அமைந்துள்ளன.

'பல்லுயிர் எலாந்தன் உயிர்க்குநிக ரென்றே
பரித்தல்' (3)

குமரேச சதகப் பாடல்கள் பலவும் திருக்குறளின் தாக்கத்தைக் கொண்டிருப்பினும், சில பாடல்கள் குறளின் தொடர்களை, கருத்தை அப்படியே கொண்டுள்ளன. 'குடி படையில் அபிமானம்' எனத்தொடங்கும் 'அரசர் இயல்பு' எனும் குமரேசசதகப்பாடல்,

'படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையார் அரசருள் ஏறு'

எனும் திருக்குறளின் தாக்கத்தையும், 'இறைமாட்சி' அதிகாரக் குறள்களின் தாக்கத்தையும் கொண்டுள்ளது.

'குறிப்பறிதல்' எனும் குமரேச சதகப்பாடலில் இடம் பெற்றுள்ள,

'மனதிற் கடும்பகை முகத்தினால் அறியலாம்'
'தனதகம் அடுத்தது பளிங்கினால் அறியலாம்' (38)

எனும் பாடலடிகள்.

'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்' (குறிப்பறிதல் 6)

எனும் திருக்குறளின் தாக்கத்தில் முகிழ்த்தனவாக முகங் காட்டுகின்றன.

'காலமறிதல்' எனும் குமரேச சதகப் பாடலில் இடம் பெற்றுள்ள,

'காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக்
கனகமுடி யரசர்தாமும்
கருதுசய காலமது கண்டந்த வேளையில்
காரிய முடித்துவிடுவார்' (69)

எனும் பாடற்பகுதி,

'பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது' (காலமறிதல் 1)

எனும் குறளை உட்கொண்டுள்ளமை காணலாம்.

'இதனினுமிது நன்றெனல்' எனும் குமரேசசதகப் பாடலில் (81) இடம்பெற்றுள்ள,

'தஞ்சவொரு முயலையடு வென்றிதனின் யானையொடு
சமர்செய்து தோற்றல் நன்று.'

எனும் பாடலடிகள்,

'கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவே லேந்தல் இனிது.'

எனும் குறளின் தாக்கத்தில் அமைந்துள்ளன.

'இடமறிதல்' எனும் குமரேசசதகப் பாடலில் இடம் பெற்றுள்ள.

'தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ
சலதிமிசை யோடுகப்பல்
தரைமீதி லோடுமோ தண்ணீரி லுறுமுதலை
தன்முனே கரிநிற்குமோ' (70)

எனும் பாடற்பகுதி,

'நெடும்புனலுள் வெல்லும் முதலை'(495), 'கடலோடா கால்வல் நெடுந்தேர்'(496), 'காலாழ் களரில் நரியடும்' (500) எனத்தொடங்கும் திருக்குறள்களின் தாக்கத்தில் தோன்றியுள்ளது.

இவ்வாறு இந்நூல் திருக்குறளின் தாக்கத்தைக் கொண்டிருப்பதோடு, பிற்காலத்தில் தோன்றிய பல நீதி நூற் பாடல்களின் தாக்கத்தையும் கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. தாக்கத்தை ஏற்படுத்திய பிற நீதிநூற் பாடல்கள் இப்பதிப்பில் ஆங்காங்கு ஒப்புமையாகக் காட்டப்பெற்றுள்ளன.

முருகப்பெருமான் குறித்த புராணக்கதைக் குறிப்புக்கள்

நூலின் தலைப்பே 'குமரேச சதகம்'. முதன்மையான நுவல்பொருள் நீதிகூறலாயினும், பாடல்தோறும் நூலின் தலைப்பிற்கியையக் குறிப்பிடத்தக்க அளவுக்கு முருகப் பெருமானின் சிறப்புக்களும், திருவிளையாடல்களும், அருட் செயல்களும் கூறப்பட்டுள்ளன.

நூலுள் கூறப்பட்டுள்ள முருகப்பெருமான் குறித்த பல புராணச் செய்திகளையும் கீழே தொகுத்துக் காணலாம்.

1 சரவணத்தான் (காப்பு)

2 ஆறு தலையாய்த் தோன்றியவன் (1)

3 சரவணப் பொய்கையில் விளையாடியவன் (1)

4 புனிதற்கு மந்த்ரவுபதேசமொழி சொல்லியமை (1), (42)

5 போதனைச் சிறையில் வைத்தமை (1), (42)

6 அரிகரப் பிரமாதிகட்கும் செயிக்கமுடியா அசுரனைத் தேகம்கிழித்து வேலினால் இருகூறு செய்தமை (1)

7 அமரர் சிறைதவிர்த்தமை (1), (82)

8 வள்ளிகணவன் (1) (55) (87)

9 மவுலிதனில் மதியரவு புனைவிமலர் உதவுசிறு மதலை (6)

10 வானவர்க்குத் தெய்வம் (8)

11 தெய்வயானையொடு வள்ளிக்கிசைந்த அழகன் (10), (12), (13), (50), (58), (76), (83), (98).

12 மாயவர் சகோதரி மனோன்மணிக்கு அன்பான வரபுத்ரன் (11)

13 மங்காத செந்தமிழ் குறுமுனிக்கு உபதேசம் வைத்தமெய்ஞ் ஞானகுரு (15)

14 வாசவனும் உம்பர் அனைவரும் விசய சய என்று வந்துதொழுது ஏத்தும் சரணன் (20)

15 கடல்கடைந்த அரியின் மருகன். (43)

16 வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில் வேடிச்சியைச் சேர்ந்ததென்ன ? (44)

17 தும்பிமுகன் துணைவன் (45)

18 செந்தமிழ்கொண்டு நக்கீரர்க்கு வந்ததுயர் தீர்த்தமுருகன் (46)

19 சிவன் தந்த வரபுத்ரன் (47)

20 யானைமுகனுக்கு இளையவன் (48)

21 மால்மருகன் (52), (64), (80), (88)

22 வாரணக்கொடி ஒரு கரத்திற் பிடித்தவன், மறுகரத்தில் வடிவேல் அணிந்தவன் (53)

23 குறவள்ளி தொடரும் அழகன் (54)

24 குற வள்ளிக்குகந்தகணவன் (55)

25 மாவடிவு கொண்டே ஒளித்தஒரு சூரனை வதைத்த வடிவேலாயுதன் ! (56)

26 முருகன் சம்பந்தராய் அவதரித்தார் எனும் குறிப்பு (59)

27 உமைமுலைப்பால் அருந்திவளர்ந்த குழந்தை (61)

28 அருணகிரிநாதருக்கு அனுபூதி வைத்தெழுதி அருள் குருபரன் (62)

29 அடைக்கலமென்ற கீரற்கு வன்சிறை தவிர்த்த முருகன் (66)

30 சூரசங்காரம் (79), (89), (92)

31 மாங்கனிக்கா அரனை வலமது புரிந்துவளர் மதகரிக் கிளைய முருகன் (84)

32 கங்காளனருள் மைந்தன் (86)

33 சிவன்மைந்தன் (90)

34 அரனிடத்திற் கனிகொண்ட மதயானை தன்சோதரன் (91)

35 மலைமங்கை தரும் வண்ணக்குழந்தை (93)

36 அயிலும் சேவலும் செங்கைமலர் வைத்த சரவணபூபன் (94)

37 கடப்பமலர் மாலையன் (95)

38 வாடி மனம்நொந்து தமிழ்சொன்ன நக்கீரன்முன் வந்துதவிசெய்த முருகன் (96)

39 வஞ்ச கிரவுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன் வளர்சூரன் உடல்கீண்டவன் (97)

40 வன்னமயில் மேல்இவர்ந்து இவ்வுலகை ஒருநொடியில் வலமாக வந்த முருகன் (99)

41 மலைமேல் உகந்த முருகன் (100)

42 வானவர்கள் சேனாபதி (100)

43 கங்கைபெற்றருள் புத்திரன் (100)

44 ஆவிநன்குடியினான் (100)

45 புல்வயலில் வாலகுமரேசர் (100)

பிற புராணக் கதைக்குறிப்புக்கள்

புராணக் கதைக் குறிப்புக்களை எடுத்துரைத்து அவற்றின்மூலம் நீதிகளை உணர்த்துதல், இந்நூலின் இயல்பு

களுள் ஒன்றாகும். இராமாயண, மகாபாரத, பிற புராணக் கதை மாந்தர்களையும், அவர்தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் இந்நூலின் பாக்கள் எடுத்துரைத்து நீதிகளைக் கற்போர் நெஞ்சில் அழுத்தமுறப் பதிக்கின்றன. இந்நூலின் பாக்களில் இடம்பெற்றுள்ள பிற புராணக் கதைக் குறிப்புக்களை இனித் தொகுத்துக் காணலாம்.

1 முடிசூடும் நாளில் இராமன் காடுசென்றமை (44)

2 பரமன் ஆலம் உண்டமை (44)

3 அயனுக்கு ஒருசிரம்போய்ச் சிறைப்பட்டமை (44)

4 பொய்சொலா மன்னவன் விலைபோனது (44)

5 இராமன், தருமனுக்கிளைய நால்வர், அரிச்சந்திரன், கன்னன், அநுமான், தக்கன். (45)

6 சூரபத்மன், இராவணன், கஞ்சன், இரணியன், வாலி, துரியோதனாதி நூற்றுவர், மதுகைடவர், மாவலி, சோமுகன், கீசகன், தக்கன். (47)

7 மாரனைக் கண்ணால் எரித்தருள் சிவன் (47)

8 மடுவினில் கரி ஓலம் என்ன வந்தருள் செய்த மால் [கஜேந்திர மோட்சம்] (52)

9 மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர வைத்த மெய்ஞ்ஞான முதல் (59)

10 முனைவிமன் உடல்பாதி மிருகந் தனக்கென்று முன் தருமர் சொன்னதலவோ! (61)

11 வரையூது மாபனை அடுததலாற் பஞ்சவர்கள் வன்போர் செயித்ததன்றோ! (70)

12 மனு, மாந்தாதா. (71)

13 வாலிமேல் அஸ்திரம் விடுத்த நெடுமால் (80)

14 மேரு மத்தாக அமுது கடைந்தமை [மால்] (88)

15 மேருவைச் சிலையென வளைத்த சிவன் (90)

16 நாயினுடல் தருமன் சுமந்து ஆற்றைக் கடத்துவித்தமை (97)

17 கயலுக்காக அருச்சுனன் நெடுமாலுடன் சமர்செய்தமை (97)

18 புறாவுக்காகச் சிபி சரீரம் தந்தமை (97)

19 ததீசி முதுகு என்பளித்தமை (97)

வேறுகதைகள், பழமொழிகள் பற்றிய குறிப்புக்கள்

இந்நூலுள், புராணக்கதையல்லாத வேறுசில கதைகளும் பழமொழிகளும் இடம்பெற்று நீதிக்கருத்துக்களை அழகுற விளக்குகின்றன.

அவ்வாறான பாடற்பகுதிகளைக் கீழே காணலாம்.

மிகுசெட்டி சொன்ன கதை

'விரகறிந் தேபிள்ளை சோறுகறி தினுமளவில்
வெகுபணஞ் செலவாகலால்
விளையாடு கிழவனாம் பிள்ளையே பிள்ளையென
மிகுசெட்டி சொன்னகதைபோல்' (34)

பழமொழிகள் சில

1 'பச்சைமயில் ஆடுதற்கு இணையென்று வான்கோழி
பாரிலாடுதல் போலவும்' (அவை.)

2 'வானேறி உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி
வணைப் பருந்தாகுமோ?' (46)

3 'காலைகல் மாலைபுல் எனும்உலக
வாடிக்கை நிசமல்லவோ' (69)

4 'பனியதனை நம்பியே ஏர்பூட்டு கதையென' (71)

5 'உளவனில் லாமல்ஊர் அழியா தெனச்சொல்லும்
உலகமொழி நிசமல்லவோ' (91)

6 'கரிபாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
கடக்கின்ற மரியாதை' (95)

முன்னை இலக்கியத் தொடர், இலக்கிய ஆசிரியர் பெயருடன் மேற்கோள் காட்டல்

'சேரிடம் அறிந்துசேர்' என்று ஔவை
சொன்னமொழி பொய்யல்லவே' (70)

தமிழ்ப்புலவர் வாழ்க்கைக் கதைக்குறிப்புக்கள்

தமிழ்ப்புலவர்பெருமக்களான அகத்தியர், நக்கீரர், ஞானசம்பந்தர், அருணகிரிநாதர் ஆகியோரின் வாழ்வில் நிகழ்ந்த சில அற்புதங்களை இந்நூற்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அவை வருமாறு :

அகத்தியர் வாழ்க்கைக் கதை

'மங்காத செந்தமிழ் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞானகுருவே' (15)

நக்கீரர் வாழ்க்கைக் கதை

'மங்காத செந்தமிழ் கொண்டுநக் கீரர்க்கு
வந்ததுயர் தீர்த்தமுருகா' (46)
'மனதார உனதடைக் கலமென்ற கீரற்கு
வண்சிறை தவிர்த்தமுருகா' (66)
'வாடிமனம் நொந்துதமிழ் சொன்னநக் கீரன்முன்
வந்துதவி செய்தமுருகா' (96)

ஞானசம்பந்தர் வாழ்க்கைக் கதை

'மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞானமுதலே' (59)

அருணகிரிநாதர் வாழ்க்கைக் கதை

'வாரமுடன் அருணகிரி நாதருக் கனுபூதி
வைத்தெழுதி யருள்குருபரா' (62)

கவிஞர்களைப் போற்றல்

நூலாசிரியரே ஒரு கவிஞர். அவர் கவிஞர்பெருமக்களின் சிறப்பை விதந்துரைத்தல் இயல்பன்றோ? நூலின் பாடல்களில் ஆங்காங்கு 'கவிவாணர்' இடம்பெறுகின்றனர். 'கவி', 'கவிவாணர்' இடம்பெறும் இடங்களில் சில:

காவியஞ் செய்த கவிஞர் (31)
புலவரைக் கண்டவுடன் ஓடிப் பதுங்குவார் (34)
கவிக்குறுதி பொருளடக்கம் (76)
உரமருவு கவிவாணர் (22)

'சோணாடு' எனும் குறிப்பு

நூலில் முன்னிலைப்படுத்திக் கூறப்பட்டுள்ள 'குமரேசக்' கடவுள் எழுந்தருளியுள்ள 'திருப்புல்வயல்' தலம், சோழநாட்டில் உள்ளமையைக் குறிக்கும் சில பாடல் தொடர்களில் சோழநாடு சித்திரிக்கப்பட்டுள்ள நிலையினைக் கீழே காணலாம்,

'மாடமிசை அன்னக்கொடித்திரள்கொள் சோணாடு'(51)
'வானாடு புகழுமொரு சோணாடு' (60)
'மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவு சோணாடு' (68)

நூலின் பொருளமைப்பில் சில பாடல்களின் தனித்த போக்குகள்

நீதி கூறுதலைத் தலையாய நோக்கமாகக்கொண்டுள்ள இந்நூலின் சில பாடல்கள், தனித்துக் குறிக்கத்தக்க சில போக்குகளைக் கொண்டுள்ளன. அவையாவன :

1 குமரக்கடவுளின் பெருமை போற்றும் வகையில் 'குமரேசர் மகிமை' எனும் தலைப்பில் ஒரு பாடல் உள்ளது. (1)

2. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் இயல்பு, பெருமை கூறும் நான்கு பாடல்கள் உள்ளன. (2,3,4.5)

3. 'சரீர சுகத்திற்கு ஏதுவானவைகள்' எனும் பாடலும், 'வியாதிக்கு மூலங்கள்' எனும் பாடலும் உடல்நலம்பேணும் கருத்துக்களைத் தருகின்றன. (19,30)

4. இவர் இவர் பேய், இவர் இவர் பதர், இவர் இவர் இன்ன கிரகம், இவர் இவர் இன்ன விலங்கு என இழிவுறு பண்புடையோரைப் பட்டியலிடுவனவாகச் சில பாடல்கள் உள்ளன. (23, 28, 40, 42)

5. ஒவ்வொரு வகைப் பொருளிலும் உயர்ந்தவற்றை நிரல்படச் சொல்கிறது ஒருபாடல், (24)

6. திருமகள் வதியும் இடங்களை ஒரு பாடலும் மூதேவி இருக்கும் இடங்களை ஒரு பாடலும் சொல்கின்றன. (35, 36)

7. ஒருபாடல் முழுதும் ஒருகதை விவரிக்கப் பட்டுள்ளது. (85)

8. விபூதி வாங்கும் முறைமை, விபூதி தரிக்கும் முறைமை ஆகிய இருபாடல்கள் நூலாசிரியரின் சமயச்சார்பான விபூதி குறித்த நியமங்களை மட்டுமே உரைக்கின்றன. (87, 88)

9. உடல் உறுப்புக்களின் பயன், இறை தொடர்பான ஒழுகலாறுகளை மேற்கொள்ளலே என்கிறது ஒருபாடல்—அங்கமாலை உத்தியில். *(89)*

10. நூற்பயன், நூலாசிரியர் பெயர் முதலியன கூறுகிறது ஒருபாடல் *(100)*

நமது குமரேச சதகப் பதிப்பு

புகழ்பெற்ற நீதிசதகமான 'குமரேச சதகம்' முன்னரே பல பதிப்புக்களைக் கண்டது. மலிவுப் பதிப்புக்களையும், அறிஞர் தம் கைப்பட்ட பொலிவுப் பதிப்புக்களையும் கண்டுள்ள 'குமரேச சதகம்', முதன்முறையாகப் பாடவேறு பாட்டுப் பகுதியையும் ஒப்புமைப் பகுதியையும் தாங்கிய பதிப்பாக இங்கு மலர்கின்றது.

பயன்படுத்தப்பெற்ற சுவடிகள்

சரசுவதி மகால் நூலகத் தமிழ்த்துறையில் 'குமரேச சதகம்' எனும் பெயரில் ஐந்து ஓலைச் சுவடிகள் உள்ளன. அவற்றின் எண்கள் வருமாறு: *805, 908 1024, 1238,1670.*

இவ்வைந்து சுவடிகளுள் *805*ஆம் எண் சுவடியில் குமரேச சதகத்தின் நூறுபாடல்களும் இடம்பெற்றுள்ளன. சுவடியும் பெரிதும் நல்லநிலையிலும் எழுத்துத் தெளிவாகவும் உள்ளது. இச்சுவடியே இந்நூற் பதிப்புக்குப் பெரிதும் அடிப்படையாகக் கொள்ளப்பெற்றது.

இச்சுவடி, " *1080* விசுவாவசு சித்திரை *19* சோமவாரம், உத்திரட்டாதி நட்சத்திரமுங் கூடிய சுபதினத்தில் சுடலை மூத்தம்மாள் வாசித்து முடித்தது " எனும் குறிப்பைச் சுவடியீற்றில் தாங்கியுள்ளது.

908ஆம் எண் சுவடியிலும் நூறு பாடல்கள் முழுமை யாக இடம்பெற்றுள்ளன. வழக்கமான பதிப்புக்களில் காணப்படும் பாடல்களுக்கும் இச்சுவடியின் பாடல்களுக்கு மிடையே மிகுந்த பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன. கொச்சை வழக்குகளும் பிழைவடிவங்களும் இடம் பெற்றுள்ளன.

1024ஆம் எண் சுவடியில் 'குமரேச சதகத்'தின் 49 பாடல்கள் மட்டுமே உள்ளன. 908ஆம் எண்ணுள்ள சுவடி யில் உள்ளவற்றைப் போலவே, இச்சுவடியிலும் மிகுந்த பாடவேறுபாடுகளும் கொச்சை வழக்குகளும் பிழை வடிவங் களும் இடம்பெற்றுள்ளன.

பிற சுவடிகளிலும் பிற பதிப்புக்களிலும் இல்லாத இரு பாடல்கள் 908, 1024 ஆகிய இரு சுவடிகளில் மட்டும் புதி தாக இடம்பெற்றுள்ளன. (பாடவேறுபாட்டுப் பகுதியின் முன்னுரை, பிற்சேர்க்கைப் பகுதியில் விளக்கம் காணலாம்) வழக்கமாக இடம்பெறும் இருபாடல்கள் இடம்பெறவில்லை.

1238ஆம் எண் சுவடியில் குமரேச சதகத்தின் நான்கு பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன. (பாடல் எண்: 18, 26, 27, 37)

1670ஆம் எண் சுவடியின் ஏடுகள் ஒடிந்து மிகவும் சிதைந்தும் பூச்சிகள் உழுது அரித்தும் ஒப்பிடத்தக்கதா யில்லை.

1670ஆம் எண் சுவடியைத் தவிரப் பிற சுவடிகள் ஒப்பு நோக்கப்பெற்றுக் குறிப்பிடத்தக்க பாடவேறுபாடுகள் தேர்ந்து இப்பதிப்பின் ஈற்றில் பட்டியலாகத் தரப் பட்டுள்ளன.

பயன்படுத்தப்பெற்ற அச்சுநூற்பதிப்புக்கள்

இரத்தின நாயகர் சன்ஸ் வெளியிட்ட "பன்னிரு சதகத் திரட்டு" நூலில் இடம்பெற்றுள்ள 'குமரேச சதக' நூலும், தமிழ்க்கடல் வெளியீடான கா. நமச்சிவாய முதலியாரால் பதிப்பிக்கப்பெற்ற 'குமரேச சதக' ('அறப்பளீசுர சதகமும்' இணைந்தது.) நூலும், வாவிள்ள இராமசாமி சாஸ்த்ருலு அண்ட் சன்ஸ் வெளியீடான மணி. திருநாவுக்கரசு முதலி யாரால் பதிப்பிக்கப்பெற்ற நூலும் ஆக மூன்று அச்சுநூற் பதிப்புக்கள் இப்பதிப்பிற்காக ஒப்புநோக்கப்பெற்றன. ஒப்பு நோக்கிப் பெற்ற பாடவேறுபாடுகள் சுவடிகளை ஒப்பு நோக்கிப் பெற்ற பாடவேறுபாடுகளுடன் இணைத்துப் பட்டியலில் தரப்பெற்றுள்ளன

இம்மூன்று அச்சுநூற் பதிப்புக்களுள் கா. நமச்சிவாய முதலியாரால் பதிப்பிக்கப்பெற்ற நூலே புலமைப் பதிப்புப் போலவும், வெளிவந்துள்ள பதிப்புக்களுள் செழுமை யானதாகவும் திகழ்வதால் அப்பதிப்பையே முதல்நிலை யிலும் அதற்கடுத்த நிலையில் 805ஆம் எண் சுவடியையும் அடிப்படையாகக்கொண்டு இப்பதிப்பு உருவாக்கப்பெற்றுள் ளது. அப்பதிப்பில் அருஞ்சொற்களுக்குக் கூறப்பட்டுள்ள பொருளையும் கருத்தில்கொண்டு இப்பதிப்பின் அருஞ்சொற் பொருளுரைப்பகுதி அமைக்கப்பெற்றுள்ளது.

இருபாக்கள் முன்பின்னாக மாறியுள்ளமை

குமரேச சதகத்தின் இரு பாக்கள் (87,88) சுவடிகளிலும், பதிப்புக்களிலும் முன்பின்னாக வைப்புமுறை மாறி அமைந் துள்ளன.

'விபூதி தரிக்கும் முறைமை', 'விபூதி வாங்கும் முறைமை' எனும் பா வைப்புமுறை 805, 908ஆம் எண்ணிட்ட சுவடி

கள் மற்றும் இரத்தின நாயகர் பதிப்பிலும், விபூதி வாங்கும் முறைமை, விபூதி தரிக்கும் முறைமை எனும் பா வைப்பு முறை கா. நமச்சிவாயர், மணி. திருநாவுக்கரசு பதிப்பிலும் காணப்படுகின்றன.

பாடல்களின் தலைப்புக்கள் வேறுபடுதல்

இப்பதிப்பிற்குப் பயன்படுத்தப்பெற்ற சுவடிகளுள் 805ஆம் எண்ணிட்ட சுவடியில் மட்டுமே பாடல்களுக்குத் தலைப்புக்கள் காணப்படுகின்றன. அச்சுநூற்பதிப்புக்களில் பாடல்களுக்குத் தலைப்புக்கள் தரப்பட்டுள்ளன. இத்தலைப்புக்களில் பல ஒத்தமைந்தும் சில வேறுபட்டும் அமைந்துள்ளன. வேறுபடுவனவற்றுள் சான்றுக்குச் சில தலைப்புக்களைக் காணலாம்.

பாடல் எண்.	தலைப்பு	பதிப்பு/சுவடிஎண்.
1	குமரேசர் மகிமை	இரத்தின நாயகர்
	,,	கா. நமச்சிவாயர்
	குமரேசர் பெருமை	மணி. திருநாவுக்கரசு
15	நல்லிடஞ் சேரினுங் கெட்டவை நல்லவை யாகா வெனல்	இரத்தின.
	பிறப்பிட நன்மையால் நன்மை பெறாமை	கா. ந.
	,,	மணி. திரு.
	,,	805
18	நரகில் வீழ்வோர் இன்னவர் எனல்	இரத்தின.
	,,	கா. ந.
	நரகில் வீழ்வோர்	மணி. திரு.
	,,	805

29	தமக்குரியவற்றைக் காணாவிடில் துயரப்படுபவை	இரத்தின.
	,,	கா. ந.
	காணாவிடில் துயரப்படுமவை	மணி. திரு.
	,,	805
56	வேசையர் இழிவு	இரத்தின.
	,,	கா. ந.
	கணிகையர் இழிவு	மணி. திரு.
	,,	805
65	பிறர்மனை நயப்பார்க்கு உறுபயன்	இரத்தின.
	,,	கா, ந.
	பிறர்மனை நயத்தல்	மணி. திரு.
	,,	805
91	இனத்தை அழிப்பவை	இரத்தின.
	,,	கா. ந.
	தன் இனத்தால் அழிவு	மணி. திரு.
	,,	805

இப்பதிப்பின் சிறப்பியல்புகள்

பலநீதிநூல்களிலும், குறிப்பிட்ட நீதிகளும் அவற்றை உணர்த்தவரும் உவமைகளும் ஒன்றாகவே காணப்படுகின்றன. அவ்வகையில் குமரேச சதகத்தில் இடம்பெற்றுள்ள பல நீதிகளும் உவமைகளும் பிற நீதி நூல்களிலும் காணப்படுகின்றன. நீதிநூல்களின் யாப்பு வடிவங்கள் வேறுபடுகின்றனவேயன்றி, அவற்றிலுள்ள பல நீதிகள்-உவமைகள் ஒரே அமைந்திருக்கின்றன என்பதை நீதிநூல்களின் பொதுப்பண்பாகக் கருதலாம் என்று காட்டும் வகையில்

இந்நூலில் பாடல்தோறும் ஒப்புமைப்பகுதிகள் அமைக்கப் பட்டுள்ளன. இப்பதிப்பின் சிறப்பியல்புகளுள் ஒன்றாக இது திகழ்கிறது.

பதிப்பான சதகம் போன்ற பிற்கால நூல்களுக்கு, சுவடி களையும் அச்சு நூல்களையும் ஒருசேர ஒப்பிட்டுப் பாடவேறு பாடு கண்டு குறிப்பதில் பலரும் கவனம் செலுத்துவதில்லை. ஆயினும் இத்தகைய இலக்கியங்களுக்கு ஏராளமான பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்வகையில் கவனம் செலுத்தும் சிறுமுயற்சியாகக் 'குமரேச சதகத்' திற்குச் சரசுவதி மகால் நூலக அளவில் கிடைக்கும் சுவடிகளையும். பதிப்பாசிரியனுக்குக் கிட்டிய மூன்று அச்சு நூல்களையும் ஒப்பிட்டுப் பாடவேறுபாடுகளைக் கண்டு தொகுத்துப் பட்டியலாக நூலில் தந்துள்ளமை இப்பதிப்பின் மற்றுமொரு சிறப்பியல்பாகும்.

ஒப்புமைப் பகுதிகள், அருஞ்சொற்குறிப்புரை, பாட வேறுபாட்டு அட்டவணை, பிற்சேர்க்கை, புராணமாந்தர் முதலான சிறப்புப்பெயர் அகரநிரல், நீதி சதகப் பட்டியல், தலைப்பு அகரநிரல், செய்யுள் முதற்குறிப்பு அகரநிரல், துணைநூற்பட்டியல் ஆகியன இப்பதிப்பில் அமைந்து இப் பதிப்பை வளப்படுத்துகின்றன.

ஒப்புமைப் பகுதிகளில், குமரேச சதகத்திற்கு முந்தைய நீதி நூல்களிலிருந்தும் பிந்தைய நீதி நூல்களிலிருந்தும். வடமொழி, தெலுங்கு மொழிகளைச் சார்ந்த சில நீதிநூல் களிலிருந்தும் ஒத்த பாடல்கள், ஒத்த பகுதிகள் இனங்கண்டு தேர்ந்து தொகுத்துப் பாடல்தோறும் அடியில் அளிக்கப் பெற்றுள்ளன.

இந் நூலாராய்ச்சிப் பகுதியில் பாடலடிகளை அடுத்துக் குறிக்கப்பெற்றுள்ள எண்கள் குமரேச சதகப் பாடல் எண் களாகும்.

நிறைவுரை

வெறுமனே நீதிகளை மட்டும் புகட்டும் நூலாகவன்றி, அழகிய உவமைகளாலும் பழமொழிகளாலும் புராணக்கதைகளாலும் இனிய செய்யுள் நடையாலும் நேர்த்தியுற நீதி கூறும் இந்நூல் தனிசிறந்த நீதி இலக்கியமாகத் திகழுகின்றது.

முந்துநூல்களான திருக்குறள் முதலாய நீதி இலக்கியங்களின் சொல்லையும், பொருளையும், தொடரையும் ஏற்றுப் போற்றும் ஏற்றமிகு நீதிசதகமாக இந்நூல் விளங்குகின்றது.

சரசுவதி மகால் நூலகச் சுவடிகளையும், மூன்று முந்தைய பதிப்புக்களையும் பயன்படுத்திப் பிற நீதி இலக்கிய ஒப்புமைப் பகுதிகளோடு உருவாக்கப்பெற்றுள்ள 'குமரேச சதகத்'தின் இப்பதிப்பு, தமிழ் நீதி இலக்கிய வரலாற்றில் 'குமரேச சதகத்'தின் இடத்தையும் ஏற்றத்தையும் அங்கை நெல்லிக்கனியாய்த் தெளிவுறக் காட்டும்.

திருப்புல்வயல்

குருபாத தாசர்

இயற்றிய

குமரேச சதகம்

கும்

காப்பு

நேரிசை வெண்பா

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமே வியசதகம் செப்பவே—கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

அவையடக்கம்

[இரட்டை யாசிரிய விருத்தம்]

மாரிக்கு நிகரென்று பனிசொரிதல் போலவும்
மனைக்குநிக ரென்றுசிறுபெண்
மணல்வீடு கட்டுவது போலவும் சந்த்ரன்முன்
மருவுமின் மினிபோலவும்

பாருக்குள் நல்லோர்மு னேபித்தர் பலமொழி
பகர்ந்திடுஞ் செயல்போலவும்
பச்சைமயி லாடுதற் கிணையென்று வான்கோழி
பாரிலா டுதல்போலவும்

பூரிக்கும் இனியகா வேரிக்கு நிகரென்று
போதுவாய்க் கால்போலவும்
புகல்சிப்பி மூத்துக்கு நிகராப் பளிங்கைப்
பொருந்தவைத் ததுபோலவும்

வாரிக்கு முன்வாவி பெருகல்போ லவும்இன்சொல்
வாணர்முன் உகந்துபுல்லை
வாலகும ரேசர்மேற் சதகம் புகன்றனன்
மனம்பொறுத் தருள்புரியவே.

ஒப்புமை :

கான மயில்ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

—ஒளவையாரின் 'வாக்குண்டாம்' — 14

நூல்

[இரட்டை யாசிரிய விருத்தங்கள்]

1. குமரேசர் மகிமை

பூமிக்கோ ராறுதலை யாய்வந்து சரவணப்
பொய்கைதனில் விளையாடியும்
புனிதற்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில்வைத்தும்

தேமிக்க அரிகரப் பிரமாதி கட்கும்
செகுக்கமுடி யாவசுரனைத்
தேகங் கிழித்துவடி வேலினால் இருகூறு
செய்தமரர் சிறைதவிர்த்தும்

நேமிக்குள் அன்பரிடர் உற்றசம யந்தனில்
நினைக்குமுன் வந்துதவியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலால் உலகிலுனை
நிகரான தெய்வமுண்டோ

மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
மார்பனே வள்ளிகணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே !

2. அந்தணர் இயல்பு

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையும்
கூறுசுரு திப்பெருமையும்
கோதிலா ஆகமபு ராணத்தின் வளமையும்
குலவுயா காதிபலவும்

முறையாய் நடத்தலால் சகலதீ வினைகளையும்
முளரிபோ லேதகிப்பார்
முதன்மைபெறு சிலைசெம்பு பிரிதிவி களிற்றெய்வ
மூர்த்தமுண் டாக்குவிப்பார்

நிறையாக நீதிநெறி வழுவார்கள் ஆகையால்
நீள்மழை பொழிந்திடுவதும்
நிலமது செழிப்பதும் அரசர்செங் கோல்புரியும்
நிலையும்மா தவர்செய்தவமும்

மறையோர்க ளாலே விளங்குமிவ் வுலகத்தில்
மானிடத் தெய்வமிவர்காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

காண்க. அறப்பளீசுர சதகம்—பாடல் எண்: 81

கயிலாசநாதர் சதகம்—பாடல் எண்: 3

அண்ணாமலை சதகம்—பாடல் எண்: 9

திருவேங்கட சதகம்—பாடல் எண்: 2

3. அரசர் இயல்பு

குடிபடையில் அபிமானம் மந்திரா லோசனை
குறிப்பறிதல் சத்யவசனம்
கொடைநித்தம் அவரவர்க் கேற்றமரி யாதைபொறை
கோடாத சதுருபாயம்

படிவிசா ரணையொடு ப்ரதானிகள கர்த்தரைப்
பண்பறிந் தேயமைத்தல்
பல்லுயி ரெலாந்தன் உயிர்க்குநிக ரென்றே
பரித்தல்குற் றங்கள்களைதல்

துடிபெறு தனக்குறுதி யானநட் பகமின்மை
சுகுணமொடு கல்வியறிவு
தோலாத காலமிடம் அறிதல்வினை வலிகண்டு
துஷ்டநிக் ரகசௌரியம்

வடிவுபெறு செங்கோல் நடத்திவரும் அரசர்க்கு
வழுவாத முறைமையிவைகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை.

காண்க: அறப்பளீசுர சதகம்—பாடல் எண்: 82

கயிலாசநாதர் சதகம்—பாடல் எண்: 4

அண்ணாமலை சதகம்—பாடல் எண்: 13

திருவேங்கட சதகம்—பாடல் எண்: 3

4. வணிகர் இயல்பு

கொண்டபடி போலும்விலை பேசிலா பஞ்சிறிது
கூடிவர நயமுரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம் வராதபடி
குறுகவே செலவுசெய்வார்

வண்டப் புரட்டர்தாம் முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்திடார்
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையி லெலாங்கொடுப்பார்

கண்டெழுது பற்றுவர வினில்மயிர் பிளந்தே
கணக்கிலணு வாகிலும்விடார்
காசுவீ ணிற்செலவி டாருசித மானதிற்
கனதிரவி யங்கள்விடுவார்

மண்டலத் தூடுகன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமையிவைகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

காண்க. அறப்பளீசுர சதகம் —பாடல் எண்: 83

கயிலாசநாதர் சதகம்—பாடல் எண்: 5

அண்ணாமலை சதகம்—பாடல் எண்: 28

திருவேங்கட சதகம்—பாடல் எண்: 4

5. வேளாளர் இயல்பு

நல்லதே வாலயம் பூசனை நடப்பதும்
நாடோறும் மழைபொழிவதும்
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்
நவில்வேத வேதியரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்
தொல்புவி செழிக்குநலமும்
சுபசோ பனங்களும் கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமனு நெறிமுறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையும் அதிகபுகழும்
மிக்கவதி காரமும் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூரர்வலியும்
எல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவவன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

காண்க. அறப்பளீசுர சதகம்—பாடல் எண்: 84
கயிலாசநாதர் சதகம்—பாடல் எண்: 6
அண்ணாமலை சதகம்—பாடல் எண்: 27
திருவேங்கட சதகம்—பாடல் எண்: 5

6. பிதாக்கள்

தவமதுசெய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த் தவனொருபிதா
தயையாக வித்தையைச் சாற்றினவன் ஒருபிதா
சார்ந்தசற் குருவொருபிதா

அவமறுத் தாள்கின்ற அரசொரு பிதாநல்ல
ஆபத்து வேளைதன்னில்
அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோன் ஒருபிதா
அன்புள முனோன்ஒருபிதா

கவளமிடு மனைவியைப் பெற்றுளோன் ஒருபிதா
கலிதவிர்த் தவனொருபிதா
காசினியில் இவரைநித் தம்பிதா என்றுளங்
கருதுவது நீதியாகும்

மவுலிதனில் மதியரவு புனைவிமலர் உதவுசிறு
மதலையென வருகுருபரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பினுப தேசஞ் செய்தோன்—அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகர்ந்தோன் பயந்தீர்த்தோன்
எஞ்சாப் பிதாக்களென எண்.

—பல வித்துவான்கள் பாடிய பாடல்களுள் ஒன்று 38
தனிப்பாடற்றிரட்டு--இரண்டாம் பாகம்

தன்னையே ஈன்றோன், வித்தை
சாற்றினோன், உபதே சங்கள்
பன்னினோன், பயந்த போது
பயந்தவிர்த் திட்டோன், பஞ்சம்

முன்னியே வந்த காலத்
துகந்தனங் கொடுத்தோன் ஐவர்
நன்மையாம் பிதாக்கள் ஆவர்
நல்லறி வோர்க்குத் தானே.

—நீதி சாரம் 77

மன்னவன், தன்தமையன், மாமன், குரு,வளர்த்தோன்,
பன்னுகலி தீர்த்தோன், பயம்தீர்த்தோன்,-துன்னுகலை
தந்தான்,இவ் வெண்மரும்பி தாவாகும். எற்கினிய
கந்தா!நீ யேதந்தை காண்.

—நீதிபோதவெண்பா 62

அரசன் தலைவன் தந்தை முன்னோன்
குரவனோ டைவருங் குறிப்பினிற் றந்தை.

—பிங்கல நிகண்டு 391

வடமொழியில் இடம்பெற்றுள்ளவை.

जनिता चोपनीता च यश्च विद्यां प्रयच्छति ।
अन्नदाता भयत्राता पञ्चैते पितरःस्मृताः ॥

(இதன் பொருள் :

தன்னைப் பெற்றவனும், உபநயனம் செய்வித்தவனும், படிப்பித்தவனும், அன்னமிட்டுக் காப்பாற்றினவனும் பயத்தையொழித்தவனும் ஆகிய இவ்வைவரும் பிதாக்களாவார்.)

—நீதிசாஸ்திரம் 80

7. ஒன்றையொன்று பற்றியிருப்பன

சத்தியந் தவறா திருப்பவ ரிடத்தினிற்
சார்ந்துதிரு மாதிருக்கும்
சந்ததந் திருமா திருக்குமவி டந்தனில்
தனதுபாக் கியமிருக்கும்

மெய்த்துவரு பாக்கியம் இருக்குமவி டந்தனில்
விண்டுவின் களையிருக்கும்
விண்டுவின் களைபூண் டிருக்குமவி டந்தனில்
மிக்கான தயையிருக்கும்

பத்தியுடன் இனியதயை யுள்ளவ ரிடந்தனில்
பகர்தருமம் மிகவிருக்கும்
பகர்தருமம் உள்ளவ ரிடந்தனிற் சத்துரு
பலாயனத் திறலிருக்கும்

வைத்திசை மிகுந்ததிறல் உள்ளவ ரிடத்தில்வெகு
மன்னுயிர் சிறக்குமன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

8. இவர்க்கு இவர் தெய்வம் எனல்

ஆதுலர்க் கன்னம் கொடுத்தவர்க ளேதெய்வம்
அன்பான மாணாக்கருக்(கு)
அரியகுரு வேதெய்வம் அஞ்சினோர்க் காபத்(து)
அகற்றினோ னேதெய்வமாம்

காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாம்
கணவனே மிக்கதெய்வம்
காசினியில் மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு
காக்குமன் னன்தெய்வமாம்

ஓதரிய பிள்ளைகட் கன்னைதந் தையர்தெய்வம்
உயர்சாதி மாந்தர்யார்க்கும்
உறவின்முறை யார்தெய்வம் விசுவாச முள்ளபேர்க்(கு)
உற்றசிவ பத்தர்தெய்வம்

மாதயையி னாற்சூத் திரர்க்குமறை யோர்தெய்வம்
வானவர்க் குத்தெய்வம்நீ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

குலமகட் குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்(கு)
அடிகளே தெய்வம் அனைவோர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை.

—நீதிநெறி விளக்கம் 27

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

—கொன்றைவேந்தன் 1

தீதுபுரி லோபியர் தமக்குப் பணங்களே
தெய்வமாம் காமுகர்க்குத்
தெரிவையர்கள் தெய்வமாம் துஷ்டருக் கென்னிலோ
தீமையே தெய்வமாகும்

நீதியுடை யோர்க்குப் பயந்தீர்த் திரக்ஷித்த
நேயரே தெய்வமாகும்
நீங்காத் தரித்திரர் தமக்குக் கொடுத்தபேர்
நித்தமுந் துதிதெய்வமாம்

சாதியனை வர்க்குமறை யோர்தெய்வம் அம்புவி
தனக்கரச னேதெய்வமாம்
சகலர்க்கு மாசாரி யன்தெய்வம் நாரியர்
தமக்குநா தன்தெய்வமாம்

மாதவம் புரிஞானி யர்க்குநீ தெய்வமாம்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே.

—திருவேங்கட சதகம் 24

மேதினிக்கு மன்னவர்;கா மிக்குமின்னார்; தங்கணவர்
மாதருக்கு; நீங்கா வறுமையர்க்குத்—தாதா;தன்
மானிக் கது;வேசை மாதர்க்குப் பொய்;நீதி
மானுக் கழியாவாய் மை. 66

சிட்ருக்கா சான்;உ தவாச் சிந்தையுலோ பிக்குநிதி
நாடுதெய்வம் என்பர்;குக நாத;என்றும்—பீடுபெறும்
எத்தேவ ருக்குநீயே தெய்வம்என் பர்பத்தி
வித்தே கருணைவிளை வே.

—நீதிபோத வெண்பா 67

9. இவர்க்கு இதில் நினைவு எனல்

ஞானநெறி யாளர்க்கு மோட்சத்தி லேநினைவு
நல்லறிவு ளோர்தமக்கு
நாடொறுந் தருமத்தி லேநினைவு மன்னர்க்கு
ராச்சியந் தன்னில்நினைவு

ஆனகா முகருக்கு மாதர்மே லேநினைவுள்
அஞ்சாத திருடருக்கிங்(கு)
அனுதினங் களவிலே நினைவுதன வணிகருக்(கு)
ஆதாய மீதுநினைவு

தானமிகு குடியாள ருக்கெலாம் வேளாண்மை
தான்நினைவு கற்பவர்க்குத்
தகுகல்வி மேல்நினைவு வேசியர்க் கினியபொருள்
தருவோர்கள் மீதுநினைவு

மானபர னுக்குமரி யாதைமேல் நினைவெற்கு
மாறாதுன் மீதுநினைவு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

வேந்தருக் கரசில் சிந்தை;
மிகுந்தகா முகருக் கெல்லாம்
போந்தகா மத்திற் சிந்தை;
பொருந்துயோ கர்க்கு முத்தி
வாய்ந்திடு வழிமேற் சிந்தை;
வறிஞருக் களவி லாத
நீந்தொணாச் சிந்தை என்றும்
நிதியத்தி லாகும் தானே.

—நீதிசாரம் 67

10. இன்னவர்க்கு இன்னது இல்லை எனல்

வேசைக்கு நிசமில்லை திருடனுக் குறவில்லை
    வேந்தற்கு நன்றியில்லை
  மிடியற்கு விலைமாதர் மீதுவங் கணமிலை
    மிலேச்சற்கு நிறையதில்லை

ஆசைக்கு வெட்கமிலை ஞானியா னவனுக்குள்
    அகமில்லை மூர்க்கன் றனக்(கு)
  அன்பில்லை காமிக்கு முறையில்லை குணமிலோற்(கு)
    அழகில்லை சித்தசுத்தன்

பூசைக்கு நவிலங்க சுத்தியிலை யாவுமுணர்
    புலவனுக் கயலோரிலை
  புல்லனுக் கென்றுமுசி தானுசித மில்லைவரு
    புலையர்க் கிரக்கமில்லை

மாசைத் தவிர்த்தமதி முகதெய்வ யானையொடு
    வள்ளிக் கிசைந்தஅழகா
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
    மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
    கயவர்க்கு மேன்மையில்லை
  கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
    கன்னியர்க் காணையில்லை

தாமெனு மயக்கறுத் தோங்குபெரி யோர்க்குவரு
    ஜாதிகுல மென்பதில்லை
  தாக்ஷிணிய முடையபேர்க் கிகலில்லை யெங்குமொரு
    சார்பிலார்க் கிடமதில்லை

பூமிக்கு ளியாத லோபர்க்கு வளமான
புகழென்ப தென்றுமில்லை
புலையர்க்கு நிசமில்லை கைப்பொரு ளிலாததோர்
புருடருக் கொன்றுமில்லை,

—அறப்பளீசுர சதகம் 18

காதன்மிகு காமுகர் தமக்குமுறை யிலைவஞ்ச
கர்க்குமரி யாதையில்லை
கட்டுண்ட கள்வருக் குறவின்முறை யாரில்லை
கசடர்க்கு ஞானமில்லை

வேதமறி பூசுரர் தமக்கருள்செ யாரிலை
விரோதிக்கு நேயரில்லை
மெய்ஞ்ஞானி யர்க்குவரு சாதிகுல மொன்றில்லை
வீரர்க்கு மனபயமிலை

போதமிகு யோகிக்கு வினைசெய்கு வாரில்லை
பொய்யர்முன் சாட்சியில்லை
புலவர்க்கு நேயமில் லாரில்லை செல்வரைப்
போற்றிலா ரொருவரில்லை

மாதரெழில் கண்டுமன மகிழாத பேரில்லை.

—திருவேங்கட சதகம் 22

ஆசைக்கு வெட்கம்;வீ ரற்குப் பயம்;வஞ்ச
வேசைக்குச் சற்றும் விசுவாசம்;—வாசிக்கும்
நற்குணம்இல் லாற்கழகு; ஞானிக்குச் சாதி;பொய்
யற்குக் கரி;மூர்க்கற் கன்பு. 69

திருடருக்குற் றார்;விரோ திக்குச் சிநேகர்;
வருகா மிகட்கு வரம்பு;—பெருங்கவிக்கூர்
வேற்றுமைசற் றேனுமில்லை வேலா! நின் தாள்மலரைப்
போற்றுமவர்க் கில்லையொப் பு.

--நீதிபோத வெண்பா 70

11. இப்படிப்பட்டவர் இவர் எனல்

ஞாயநெறி தவறாமல் உலகபரி பாலனம்
நடத்துமவ னேயரசனாம்
ராசயோ சனைதெரிந் துறுதியா கியசெய்தி
நவிலுமவ னேமந்திரி

நேயமுட னேதன் சரீரத்தை யெண்ணாத
நிர்வாகி யேசூரனாம்
நிலைபெறும் இலக்கணம் இலக்கியம் அறிந்துசொலும்
நிபுணகவி யேகவிஞனாம்

ஆயதொரு வாகடம் தாதுவின் நிதானமும்
அறியுமுதி யோன்வைத்தியன்
அகமின்றி மெய்யுணர்ந் தைம்புலன் ஒழித்துவிட்
டவனேமெய்ஞ் ஞானியெனலாம்

மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான
வரபுத்ர வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

12. விரைந்து அடக்கத்தகுவன இவை எனல்

அக்கினியை வாய்முந்து துர்ச்சனரை வஞ்சமனை
யாளைவளர் பயிர்கொல்களையை
அஞ்சா விரோதிகளை அனியாய முடையோரை
அகிருத்யப் பெண்கள்ஆர்ப்பைக்

கைக்கினிய தொழிலாளி யைக்கொண்ட அடிமையைக்
களவுசெய் யுந்திருடரைக்
கருதிய விசாரத்தை அடக்கமில் பசிதையைக்
கடிதான கோபந்தனை

மெய்க்கினித லாப்பிணியை அவையுதா சீனத்தை
வினைமூண்டி டுஞ்சண்டையை
விஷமேறு கோபத்தை அன்றடக் குவதலால்
மிஞ்சவிட லாகாதுகாண்

மைக்கினிய கண்ணிகுற வள்ளிதெய் வானையை
மணஞ்செய்த பேரழகனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

வட்டிக் கடனும் வளர்நெருப்பும் வெம்பிணியுங்
கட்டழித்தல் வேண்டுங் களைந்துதறை—
விட்டதுண்டேல்
சும்மா விடுமோ தொடர்ந்து முழுதழிக்கும்
அம்மா தடுத்தல் அரிது.

—சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்
மொழிபெயர்த்தியற்றிய
சாணக்கிய நீதிவெண்பாப் பாடல்

13. இவர்க்கு இது துரும்பு எனல்

தாராள மாகக் கொடுக்குந் தியாகிகள்
தமக்குநற் பொருள் துரும்பு
தன்னுயிரை யெண்ணாத சூரனுக் கெதிராளி
தளமெலாம் ஒருதுரும்பு

பேரான பெரியருக் கற்பரது கையினிற்
பிரயோச னந்துரும்பு
பெரிதான மோக்ஷசிந் தனையுள்ள வர்க்கெலாம்
பெண்போகம் ஒருதுரும்பு

தீராத சகலமும் வெறுத்ததுற விக்குவிறல்
சேர்வேந்தன் ஒருதுரும்பு
செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாம்
செந்தமிழ்க் கவிதுரும்பாம்

வாராரு மணிகொள்முலை வள்ளிதெய் வானையை
மணம்புணரும் வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை:

போந்த உதாரனுக்குப் பொன் துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு—ஆய்ந்த
அறிவோற்கு நாரி யருந்துரும்பாம் இல்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு.

தனிப்பாடற்றிரட்டு—ஔவையார் பாடல் 65

கனயோக மார்க்கத்தில் நின்றதுற விக்குநற்
காவலர்க ளோர்துரும்பு
கசடறக் கற்குமுணர் வுடையோர்க்கு முத்தமிழ்க்
கடலெலா மோர்துரும்பு

தினமுங் கொடுக்கின்ற கொடையாள ருக்கதிக
திரவியமு மோர்துரும்பு
திவ்வியசுந் தரமுள வரம்பையா கினுமவள்
தெளிந்தவர்க் கோர்துரும்பு

மனமிக வருந்தியே பசியிலார்க் குக்கருப்
பதுவுமோர் சிறுதுரும்பா
மதிகரண வீரருக் குயிரொரு துரும்புபா
வலர்க்குமதி யார்துரும்பாம்.

—கயிலாசநாதர் சதகம் 19

சிறுபிறைதுன் னியசடையார் தண்டலைசூழ்
பொன்னிவளஞ் செழித்த நாட்டில்
குறையகலும் பெருவாழ்வு மனைவியுமக்
களும்பொருளாக் குறித்தி டாமல்
மறைபயில்பத் திரகிரியும் பட்டினத்துப்
பிள்ளையுஞ்சேர் மகிமை யாலே
துறவறமே பெரிதாகுந் துறவிக்கு
வேந்தனொரு துரும்பு தானே!

—தண்டலையார் சதகம் 35

ஈவார்க்குப் பொன்;துறவிக் கேந்தல்;பெரி யோர்க்கற்பர்;
ஆவார் துணைவீரர்க்(கு) ஆஞ்சேனை;—பாவாய்
கவிக்குக் கவிதுரும்புன் கண்ணருள்பெற் றோர்க்குற்
பவிக்கும்வினை போக்கல்துரும் பாம்.

—நீதிபோதவெண்பா 59

—அன்றேட

"போந்த வுதாரனுக்குப் பொன்துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு—ஆய்ந்த
அறவனுக்கு நாரி யறத்துரும்பு நெஞ்சில்
துறவனுக்கு வேந்தன் துரும்பு"—முறைமையாய்
ஆய்ந்தவரே! இக்கவிதை யாதியிலே சொன்னதெல்லாம்
ஏந்திழையே! கேட்டிருப்ப தில்லையோ?

—சங்கரமூர்த்தி ஐயரவர்கள்
விறலிவிடு தூது. கண்ணி எண். 281—284

14. இதனை விளக்குவது இது எனல்

பகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவதுமதி
பார்விளக் குவதுமேகம்
பதிவிளக் குவதுபெண் குடிவிளக் குவதரசு
பரிவிளக் குவதுவேகம்

இகல்விளக் குவதுவலி நிறைவிளக் குவதுநலம்
இசைவிளக் குவதுசுதிஊர்
இடம்விளக் குவதுகுடி உடல்விளக் குவதுண்டி
இனியசொல் விளக்குவதருள்

புகழ்விளக் குவதுகொடை தவம்விளக் குவதறிவு
பூவிளக் குவதுவாசம்
பொருள்விளக் குவதுதிரு முகம்விளக் குவதுநகை
புத்தியை விளக்குவதுநூல்

மகம்விளக் குவதுமறை சொல்விளக் குவதுநிசம்
வாவியை விளக்குவதுநீர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

கங்குலும் மதியி னாலே;
கடும்பகல் காலம் தானும்
செங்கதிர் தன்னால், இங்குச்
சிறந்திடும் உலகம் மூன்றும்
பொங்கிய தன்மத் தாலே
பொலிவுற விளங்கும் என்றும்
வங்கிசம் விளங்கும் நல்ல
மகவினால் தானும் அன்றே.

—நீதிசாரம் 9

மதகரி மதத்தி னாலும்,
வாசிவே கத்தி னாலும்,
பதிமனை வதுவை யாலும்,
பாவைதன் குணத்தி னாலும்,
அதிபகல் பருதி யாலும்,
அரசன்தன் நீதி யாலும்,
விதரணன் கீர்த்தி யாலும்,
விளங்குவ இவைகள் ஆமே.

—நீதிசாரம் 12

15. பிறப்பிட நன்மையால் நன்மை பெறாமை

சிங்கார வனமதில் உதிப்பினும் காகமது
தீஞ்சொல்புகல் குயிலாகுமோ?
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
செங்கஞ்ச மலராகுமோ?

அங்கான கத்திற் பிறந்தாலும் முயலான(து)
ஆனையின் கன்றாகுமோ?
ஆண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலும்
அசடர்பெரி யோராவரோ?

சங்காடு பாற்கடல் பிறந்தாலும் நத்தைதான்
சாலக்கி ராமமாமோ?
தடமேவு கடல்நீரி லேயுப்பு விளையினும்
சாரசர்க் கரையாகுமோ?

மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞானகுருவே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

16 பலர்க்கும் பயன்படுவன

கொண்டல்பொழி மாரியும் உதாரசற் குணமுடைய
கோவும்ஊ ருணியின்நீரும்
கூட்டமிடும் அம்பலத் துறுதருவின் நீழலும்
குடியாளர் விவசாயமும்

கண்டவர்க ளெல்லாம் வரும்பெருஞ் சந்தியில்
கனிபல பழுத்தமரமும்
கருணையுட னேவைத் திடுந்தணீர்ப் பந்தலும்
காவேரி போலுாற்றமும்

விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
வீசுமா ருதசீதமும்
விவேகியெனும் நல்லோ ரிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க் குபகாரமாம்

வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே !

ஒப்புமை :

ஆறு குளந்தோப்பு மணிநியமஞ் சத்திரமும்
கூறுவழித் தாறுநிழற் கோட்டமுடன்—மாறுமன
வேசிசபை நீர்ப்பந்தல் வேந்தன் மடமயிலே
காசினிக்கு ளேபொதுவாங் காண்.

—சந்தர கவிராயர் பாடல் 10
தனிப்பாடற்றிரட்டு—இரண்டாம் பாகம்

வாவிநீர், தென்றல், மதி, இரவி, பெய்யுமழை
மேவுநீர்ச் சாலை, விவேகிநிதி,—யாவருஞ்செல்
சந்தி பழுத்தமரம், தாம்பொதுவாம் கந்த! நின்தாள்
சிந்திப் பவர்க்குரிய தே.

—நீதிபோத வெண்பா 42

17. தாம் அழியினும் தம்குணம் அழியாதவை

தங்கமா னதுதழலி லின்றுருகி மறுகினும்
தன்னொளி மழுங்கிடாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமே
தன்மணம் குன்றிடாது

பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமே
பொலிவெண்மை குறைவுறாது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்துசுவை போய்விடாது

துங்கமணி சாணையில் தேய்ந்துவிட் டாலும்
துலங்குகுணம் ஒழியாதுபின்
தொன்மைதரு பெரியோர் மடிந்தாலும் அவர்களது
தூயநிறை தவறாகுமோ

மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புயவரசனே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

தறிபட்ட சந்தனக் கட்டை பழு தாயினும்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
சாரமது ரம்குறையுமோ

நிறைபட்ட கதிர்மணி அழுக்கடைந் தாலும் அதின்
நீள்குணம் மழுங்கிவிடுமோ
நெருப்பிடை உருக்கினும் அடிக்கினும் தங்கத்தின்
நிறையுமாற் றுக்குறையுமோ

... ...

... ...

கற்றபெரி யோர்மகிமை அற்பரறி கிலரேனும்

காசினி தனிற்போகுமோ?

—அறப்பளீசுர சதகம் 23

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.

சுடினும் செம்பொன் தன்ஒளி கெடாது.

அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது.

—வெற்றிவேற்கை 23, 24, 25

அட்டாலும் பால்சுவையின் குன்றாது; அளவளாய்

நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்;

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளே;சங்கு

சுட்டாலும் வெண்மை தரும். 4

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்

கந்தம் குறைபடா தாதலால்—தம்தம்

தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்

மனம்சிறியர் ஆவரோ மற்று?

—வாக்குண்டாம் 28

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்

சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த

நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்

நற்குணமே தோன்றும் நயந்து.

— நீதிவெண்பா 64

கன்னலும் பாலும் கனகமும் சந்தனமும்

என்னகண்டித் தாலும் இயல்பகலா—அன்னவைபோல்

வேலவ!சான் றோரை மிகவருத்தி னும்தமது

சீலநலங் குன்றிவிடா தே,

—நீதிபோதவெண்பா 45

18. நரகில் வீழ்வோர் இன்னவர் எனல்

மன்னரைச் சமரில்விட் டோடினவர் குருமொழி
மறந்தவர் கொலைப்பாதகர்
மாதா பிதாவைநிந் தித்தவர்கள் பரதார
மருவித் திரிந்தபேர்கள்

அன்னங் கொடுத்தபே ருக்கழிவை யெண்ணினோர்
அரசடக் கியஅமைச்சர்
ஆலயம் இகழ்ந்தவர்கள் விசுவாச காதகர்
அருந்தவர் தமைப்பழித்தோர்

முன்னுதவி யாய்ச்செய்த நன்றியை மறந்தவர்
முகஸ்துதி வழக்குரைப்போர்
முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினந்தவர்கள்
முழுதும்பொய் யுரைசொல்லுவோர்

மன்னொருவர் வைத்தபொருள் அபகரித் தோரிவர்கள்
மாநரகில் வீழ்வரன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

……… ஒருவன் செய்த
உதவியில் கருத்தி லானும்,
மெய்அற நெறியின் நோக்கி,
மாமறை நெறியில் நின்ற
மெய்யினைப் பொய்என் றானும்,
மீள்கிலா நரகில் வீழ்வார்.

—வீடணன் அடைக்கலப் படலம் 114,
யுத்தகாண்டம், கம்பராமாயணம்

மனையாள் தன்னோ
டொன்றியுடன் வாழாதே யோராதே பிறன்தார
முவந்துள் ளோரும்

……… .. ….. கோட்சொல்லித் திரிவோருங்
கோலிச் செய்த
நன்றிதனை மறந்தோரும் நரகத்தின் இடைக்கிடந்து
நடுங்கக் கண்டான். 382

……… ……..
அமரில் ஆண்ட
கொற்றவனை விட்டோடுங் கொடியோருங் கும்பியிடைக்
கொதிப்பக் கண்டான்.

—திக்குவிசயப்படலம் 383,
உத்தரகாண்டம், இராமாயணம்.

வடமொழியில் இடம்பெற்றுள்ளவை

……… பிறர் பாரியையினிடம் புத்திரனைப் பெற்றவன் அல்லது பிறருடைய நிலத்தில் விதை விதைத்தவன் ……… உபகாரத்தைப் பெற்றுக்கொண்டு மறப்பவன், ……… அயோக்கியனை யோக்கியனென்றும் பொய்யை நிஜமென்றுஞ் சொல்லுகிறவன் என்ற இவர்களாவர். இந்தப் பதினேழு பேர்களையும் யமதூதர்கள் கயிற்றைக் கட்டி நரகத்துக்குக் கொண்டுபோகிறார்கள்.

விதுரநீதி, பக். 74, 75
(தமிழ் மொழிபெயர்ப்புநூல்)

19. சரீர சுகத்திற்கு ஏதுவானவை

மாதத் திரண்டுவிசை மாதரைப் புல்குவது
மறுவறு விரோசனந்தான்
வருஷத் திரண்டுவிசை தைலம் தலைக்கிடுதல்
வாரத் திரண்டுவிசையாம்

மூதறிவி னொடுதனது வயதினுக் கிளைபவொரு
மொய்குழ லுடன்சையோகம்
முற்றுதயிர் காய்ச்சுபால் நீர்மோர் உருக்குநெய்
முதிரா வழுக்கையிளநீர்

சாதத்தி லெவளவா னாலும் புசித்தபின்
தாகந் தனக்குவாங்கல்
தயையாக உண்டபின் உலாவல்இவை மேலவர்
சரீரசுக மாமென்பர்காண்

மாதவகு மாரிசா ரங்கத் துதித்தகுற
வள்ளிக் குகந்தசரசா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

சனிபுதன் தனிலெண்ணெய் வெந்நீரில் மூழ்குவார்
... ...
தம்வயதின் மேலான மங்கை யைச்சேரார்
காய்ச்சுபா லுண்பர்நீர் மோர்கூட்டு வார்.

—திருவேங்கட சதகம் 74

எட்டுநா ளைக்கிரு முழுக்காடொவ் வோர்பட்ச
மிருகண் கலிக்கமிடுவோர்
எத்தாக மதிதொறும் பித்தநீ ரெல்லா
மெடுத்திட மருந்துகொள்வோர்

திட்டமா யெண்ணான்கு நாளினுக் கொருகாற்
றிருந்திழை புணர்ச்சிசெய்வோர்
செப்புமொரு மூன்றுமா தத்திலகு நகியமது
சீருடன் செய்துகொள்வோர்

வட்டமா மூவிரு மதிக்கொரு விரேசனம்
வாங்காம லேவாங்குவோர்
வயிறுபசி கண்டுண்ணு வோர்களுக் கொருநோயும்
வாராது.

—அண்ணாமலைச் சதகம் 91

மெல்லியாள் தோள்சேர்.

—ஆத்திசூடி 93

போதவே நற்குணங்கள் போந்துந் தனைமூத்த
மாதரின்பந் தீதே மனுநெறிபார்—ஆதலினால்
துய்யபுகழ் புன்னைவனச் சோமா இளையளாஞ்
செய்யகுண மெல்லியாடோள் சேர்.

-- ஆத்திசூடி வெண்பா

பசியின்றி யுண்ணார், பழங்கறியோர் நாளும்
பொசியார்,தன் மூத்தாள் புணர்தற்(கு)—இசையார்,
உருக்காநெய் காய்ச்சாப்பால் உண்ணார், பெருக்கா
சுருக்காமோர் நீர்பருகா தோர். 51

உண்டபின் நீருண்பார், உலாவி மலசலத்தைக்
கொண்டடக்கார், தம்பெயரைக் கூறிடினும்—
பண்டுதொடர்
எவ்விதநோ யும்புறம்போம் என்பார்,எந் தாய்வள்ளி
செவ்விதழ்த்தேன் உண்டஅரசே!

--நீதிபோத வெண்பா 52

வடமொழியில் இடம்பெற்றுள்ளவை

वृद्धार्को होमधूमश्च बालस्त्री निर्मलोदकम् ।
रात्रौ क्षीरान्नभुक्तिश्च आयुर्वृद्धिर्दिने दिने ॥

(இதன் பொருள்:

ஸாயங்காலத்தில் ஸூர்யனைத் தர்சித்தலும், ஹோமப் புகைபடுதலும், தன்னிற் சிறியாளோடு புணர்தலும், சுத்தமான நீரைப் பருகுவதும், இரவிற் பாலும்சோறுண்ணலும் ஆகிய இவைகள் நாளுக்குநாள் ஆயுளை வளர்க்கும்.)

—நீதிசாஸ்திரம் 25

20. யார்க்கும் அனுபோகம் விடாமை

தேசுபெறு மேருப்ர தக்ஷணஞ் செய்துமதி
தேகவடு நீங்கவில்லை
திருமா லுறங்கிடும் சேட னுக் குவணன்
செறும்பகை யொழிந்ததில்லை

ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கிரைவே
றிலாமலே வாயுவாகும்
இனியகண் ணாகிவரு பருதியா னவனுக்(கு)
இராகுவோ கனவிரோதி

ஆசிலாப் பெரியோ ரிடத்தினில் அடுக்கினும்
அமைத்தபடி யன்றிவருமோ
அவரவர்க ளனுபோகம் அனுபவித் திடல்வேண்டும்
அல்லால் வெறுப்பதெவரை?

வாசவனும் உம்பரனை வரும்விசய சயவென்று
வந்துதொழு தேத்துசரணா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

21. இது இன்றி இது சிறவாது எனல்

குருவிலா வித்தைகூர் அறிவிலா வாணிபம்
குணமிலா மனைவியாசை
குடிநலம் இலாநாடு நீதியில் லாஅரசு
குஞ்சரம் இலாதவெம்போர்

திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவம்
தியானமில் லாதநிஷ்டை
தீபமில் லாதமனை சோதரம் இலாதஉடல்
சேகரம் இலாதசென்னி

உருவிலா மெய்வளமை பசியிலா உண்டிபுகல்
உண்மையில் லாதவசனம்
யோசனையி லாமந்த்ரி தைரிய மிலாவீரம்
உதவியில் லாதநட்பு

மருவிலா வண்ணமலர் பெரியோர் இலாதசபை
வையத் திருந்தென்பயன்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

மாறில்
உடன்பிறப் பில்லா உடம்புபாழ்.

—*நல்வழி 24*

மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபம்நல்
நாடில்லான் செங்கோல் நடத்துவதுங்—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லா வீடும் விழல்.

ஔவையார் தனிப்பாடல் 58
தனிப்பாடற்றிரட்டு—முதற்பாகம்

குணமதில் லாவித்தை மணமதில் லாத்மலர்
குஞ்சரம் இலாதசேனை
... ... பாலரில் லாதமனை
கவிஞரில் லாதசபை... ... ...
இயமம்இல் லாதசெபம்

—அறப்பளீசுர சதகம் 10

கவிஞரில் லாதசபை ... ...
தியானமில் லாதசெபம் ... ...

—கயிலாசநாதர் சதகம் 34

கந்தமில் லாதமலர் சத்தியமி லாதவாய்

—திருவேங்கட சதகம் 62

பணமற்ற மானிடர் வாழ்வும், நதியற்ற பட்டணமும்,
குணமற்ற நாரியும், நெய்யற்ற உண்டியும், கூடவொரு
துணையற்ற மெய்யும், மனதற்றுச் செய்யுந்
தொழிலெவையும்,
மணமற்ற பூவென்ன லாமே, குறுங்கை மலைநம்பியே!

—நம்பி சதகம் 72

22. பகைக்கத் தகாதவர் இவர் எனல்

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையும்
அரியகரு ணிகர்பகையும்
அடுத்துக் கெடுப்போர் கொடும்பகையும் உட்பகையும்
அருளிலாக் கொலைஞர்பகையும்

விரகுமிகும் ஊரிலுள் ளோருடன் பகையுமிகு
விகடப்ர சங்கிபகையும்
வெகுசனப் பகையுமந் திரவாதி யின்பகையும்
விழைமருத் துவர்கள்பகையும்

உரமருவு கவிவாணர் பகையுமா சான்பகையும்
உறவின் முறை யார்கள்பகையும்
உற்றதிர வியமுளோர் பகையுமந் திரிபகையும்
ஒருசிறிதும் ஆகாதுகாண்.

வரநதியின் மதலையென இனியசர வணமிசையில்
வருதருண சிறுகுழவியே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

மன்னவர் அமைச்சர்துர்ச் சனர்கோளர் தூதரொடு
மாறாத மர்மமுடையோர்
வலுவர்கரு ணீகர்மிகு பாகஞ்செய் தன்னமிடு
மடையர் மந்திரவாதியர்

சொன்னமுடை யோர்புலையர் உபதேச மதுசெய்வோர்
சூழ்வயித் தியர்கவிதைகள்
சொற்றிடும் புலவர்இவர் பதினைந்து பேரோடும்
சொப்பனந் தனிலாகினும்

நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்கள்இந்
நானிலத் தென்பர்கண்டாய்.

—அறப்பளீசுர சதகம் 92

அற்றார் தமைத்தாங்கு வேந்தருப தேசிகர்
அமைச்சர்மிகு பொருள்படைத்தோர்
அரியமந் திரவாதி கபடர்நப வஞ்சகர்
அதிதுட்ட ரொடுகோளர்கள்

கற்றாய்ந்த பாவாணர் பிறர்கள்வர விடுதூதர்
கள்ளரமர் புரிசூரர்கள்
கருணிகர் வைத்தியர் தவத்தினு ளுயர்ந்துமெய்க்
காட்சிதரு சிவயோகியர்

சற்றாகி லும்மிந்த ஈரெண்ம ரோடுபகை
தான்கொளிற் றுன்பமுளதாம்.

—கயிலாசநாதர் சதகம் 33

மன்னவன் கணக்கன் பார்ப்பான்
வலுவுள்ளோன் மந்திர வாதி
பொன்னுள வன்கு ருக்கள்
புலவன்பண் டிதன மைச்சன்
அன்னஞ்செய் திடுவோ னெங்கும்
அடங்காத துட்ட னாமிப்
பன்னிரு பேரோ டென்றும்
பகைகன விலுங்கூ டாதே.

—பல வித்துவான்கள் பாடிய பாடல்களுள் ஒன்று 337
தனிப்பாடற்றிரட்டு—இரண்டாம்பாகம்

23. பேயெனப்படுவோர் இவர் எனல்

கடனுதவு பேர்வந்து கேட்கும்வே ளையில்முகங்
கடுகடுக் கின்றபேயும்
கனமருவு பெரியதனம் வந்தவுடன் இறுமாந்து
கண்விழிக் காதபேயும்

அடைவுடன் சத்துருவின் பேச்சைவிசு வாசித்
தகப்பட் டுழன்றபேயும்
ஆசைமனை யாளுக்கு நேசமா யுண்மைமொழி
யானதை யுரைத்தபேயும்

இடரிலா நல்லோர்கள் பெரியோர்க ளைச்சற்றும்
எண்ணா துரைத்தபேயும்
இனியபரி தானத்தில் ஆசைகொண் டொருவற்
கிடுக்கண்செய் திட்டபேயும்

மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்
வசைபெற்ற பேய்களன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

சுகமென்று பொதுமாத ரைக்கூடி மனைவியைத்
துயரமே செய்தபேயும்

—திருவேங்கட சதகம் 31

(இவர் இவரெல்லாம் பேய் எனச்சொல்லிச் செல்லும் பாடலாகவும் இது உள்ளது.)

கருத்தழிந்து
பெண்டுடன் உண்மை புகல்வோரும் ....
....
வண்டு துளைத்த மரங்காண்.

—நம்பி சதகம் 73

தன்னைப் புகழ்வானுஞ் சாட்சிசொல்லி நிற்பானும்
பொன்னைமிகத் தேடிப் புதைப்பானும்—ஒன்னலர்தம்
நண்புத்தி கேட்பானும் நாணமில் லாதானும்
பெண்புத்தி கேட்பானும் பேய்.

—பல வித்துவான்கள் பாடிய பாடல்களுள் ஒன்று 368,
தனிப்பாடற்றிரட்டு—இரண்டாம் பாகம்

24. அவ்வவ்வினத்தில் உயர்ந்தவை

தாருவில் சந்தானம் நதியினில் கங்கைவிர
 தத்தினில் சோமவாரம்
தகைபெறு நிலத்தினில் காஷ்மீர கண்டம்
 தலத்தில் சிதம்பரதலம்

சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசு விற்காம
 தேனுமுனி வரில்நாரதன்
செல்வநவ மணிகளில் திகழ்பதும ராகமணி
 தேமலரில் அம்போருகம்

பேருலவு கற்பினில் அருந்ததி கதித்திடு
 பெலத்தில்மா ருதம்யானையில்
பேசில்ஐ ராவதம் தமிழினில் அகத்தியம்
 பிரணவம் மந்திரத்தில்

வாரிதியி லேதிருப் பாற்கடல் குவட்டினில்
 மகாமேரு வாகுமன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு கும்பேசனே.

ஒப்புமை:

கனகமக

மேருவுக் கதிகமலையும்
வெண்டிரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக
 மேதினியி லோடுநதியும்
... ...
 ... ...
இல்லையென் று பலநூலெல்லாம்
 ஆராய்ந்தபேர் உரைசெய்வார்.

அறப்பளீசுர சதகம் 55

வடமொழியில் இடம்பெற்றுள்ளவை

"புஷ்பேஷு ஜாஜீ புருஷேஷு விஷ்ணு
நாரீஷு ரம்பா நகரீஷு காஞ்சி
நதீஷு கங்கா ந்ருபதீஷு ராம:
காவ்யேஷு மாக: கவிகாளி தாஸ:"

பூவினில் மல்லி மேலாம்
புருஷரிற் புண்ட ரீகன்
மேவுநன் னகரிற் காஞ்சி
மெல்லியர் தம்மில் ரம்பை
பாயுமா நதியிற் கங்கை
பார்த்திபர் தம்மில் ராமன்
காவியந் தம்மில் மாகம்
கவிகளிற் காளி தாசன்.

—காளிதாச மகாகவியின் சரித்திரம் என்னும்
'கவிரத்ன சிந்தாமணி' நூலின்
முகவுரையில் இடம்பெற்ற
மேற்கோட்பா

25. அவரவர்க்குப் பெலமாவன

அந்தணர்க் குயர்வேத மேபெலம் கொற்றவர்க்(கு)
அரியசௌ ரியமேபெலம்
ஆனவணி கர்க்குநிதி யேபெலம் சூத்திரர்க்
காயின்ஏ ருழவேபெலம்

மந்திரிக் குச்சது ருபாயமே பெலம்நீதி
மானுக்கு நடுவேபெலம்
மாதவர்க் குத்தவசு பெலம்மடவி யர்க்குநிறை
மானமிகு கற்பேபெலம்

தந்திர மிகுத்தகன சேவகர் தமக்கெலாம்
சாமிகா ரியமேபெலம்
சான்றவர்க் குப்பொறுமை யேபெலம் புலவோர்
தமக்குநிறை கல்விபெலமாம்

வந்தனை செயும்பூசை செய்பவர்க் கன்புபெலம்
வாலவடி வானவேலா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

வடமொழியில் இடம்பெற்றுள்ளவை

அரசருக்குச் சேனைகளை வளர்க்கிறதே பலம்; பர்த்தாவுக்குப் பணிவிடை செய்வதே ஸ்திரீகளுக்குப் பலம்; குணவான்களுக்குப் பொறுமைதான் பலம். (ப. 50)

தபஸ்விகளுக்குத் தபசுதான் வலிமை; பிராமணர்களுக்கு வேதந்தான் வலிமை. (ப. 93)

—விதுரநீதி
(தமிழ் மொழிபெயர்ப்பு நூல்.)

26. இருந்தும் பயன்படாதவை

தருணத்தில் உதவிசெய் யாதநட் பாளர்பின்
தந்தென தராமலென்ன
தராதரம் அறிந்துமுறை செய்யாத மன்னரைச்
சார்ந்தென்ன நீங்கிலென்ன

பெருமையுடன் ஆண்மையில் லாதவொரு பிள்ளையைப்
பெற்றென பெறாமலென்ன
பிரியமாய் உள்ளன்பி லாதவர்கள் நேசம்
பிடித்தென விடுக்கிலென்ன

தெருளாக மானமில் லாததொரு சீவனஞ்
செய்தென செயாமலென்ன
தேகியென வருபவர்க் கீயாத செல்வம்
சிறந்தென முறிந்துமென்ன

மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வந்தென வராமலென்ன
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

இடருற்ற போதுதவி செய்யாத பேர்நட்
பிருந்தென்ன போயுமென்ன ?

—திருவேங்கட சதகம் 20

27. உபகாரம் இல்லாதவை

கடல்நீர் மிகுந்தென்ன ஓதிதான் பெருத்தென்ன
காட்டிலவு மலரிலென்ன
கருவேல் பழுத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்ன
கானில்மழை பெய்துமென்ன

அடர்கழுதை லத்திநில மெல்லாங் குவிந்தென்ன
அரியகுண மில்லாதபெண்
அழகா யிருந்தென்ன ஆஸ்தான கோழைபல
அரியநூல் ஓதியென்ன

திடமினிய பூதம்வெகு பொன்காத் திருந்தென்ன
திறல்மிகுங் கரடிமயிர்தான்
செறிவாகி நீண்டென்ன வஸ்த்ரபூ ஷணமெலாம்
சித்திரத் துற்றுமென்ன

மடமிகுந் தெவருக்கும் உபகார மில்லாத
வம்பர்வாழ் வுக்குநிகராம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது
கொஞ்சமாய்ப் போகிலென்ன?

—அறப்பளீசுர சதகம் 22

நீட்டமொடு கரடிக்கு மயிர்வளர்ந் தாலென்ன?

—திருவேங்கட சதகம் 26

நாணற்பூ, நாயின்பால், நற்குணமில் லாள்வடிவு,
வீணர்க்குச் செய்தநன்றி, வேசையர்க்குப்—பேணிக்
கொடுத்த பொருள், அவைக்குக் கோழைகற்ற கல்வி, 40
மடுத்துக்கான் பெய்த மழை.

காட்டார் நிலாப், பேடி கைவாள், மின் சித்திரத்தில்
தீட்டாடை, பேய்காத்த செம்பொன், அற்பர்—மாட்டிலதி
காரமிவை ஈயாக் கயவர்பெரு வாழ்க்கைக்கு
நேரலவோ வேலிறைவ னே.

—*நீதிபோதவெண்பா 41*

28. பதர் எனப்படுவோர்

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
சமர்கண் டொளிக்கும்பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்
தம்மொடு சலிக்கும்பதர்

பின்புகா ணாவிடந் தன்னிலே புறணிபல
பேசிக் களிக்கும்பதர்
பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
பெண்புத்தி கேட்கும்பதர்

பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர்
பொய்சாட்சி சொல்லும்பதர்
புவியோர் நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி
புணர்தல்வெளி யாக்கும்பதர்

மன்புணரும் வேசையுடன் விபசரிக் கின்றபதர்
மனிதரிற் பதரென்பர்காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை:

வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
வீண்பேசு வான்ஒருபதர்.

—அறப்பளீசுர சதகம் 12

காணா இடத்திினிற் பழிகூறி யவரையெதிர்
கண்டுபுகழ் கின்றபதரும்

—திருவேங்கட சதகம் 48

(இத்'திருவேங்கட சதகப்' பாடலிலும் அதிவீரராம பாண்டியரின் 'வெற்றி வேற்கை'யிலும் (பா. எண். 65—71) 'இவரிவர் பதர்' என நிரல்படச் சொல்லும் இக் குமரேச சதகப் பாடலின் உத்தி பயின் றுள்ளமை குறிப்பிடத்தக்கது)

தன்னைத்தான் புகழ்வோருந் தன்குலமே
பெரிதெனவே தான்சொல் வோரும்
பொன்னைத்தான் தேடியறம் புரியாமல்
அவைகாத்துப் பொன்றி னோரும்
மின்னலைப்போல் மனையாளை வீட்டில்வைத்து
வேசைசுகம் விரும்பு வோரும்
அன்னைபிதா பாவலரைப் பகைப்போரும்
அறிவிலாக் கசட ராமே.

—*விவேகசிந்தாமணி 97*

தாசி சதமென்பான், தற்புகழ்வான், தன்மனைவி
மாசுரைப் பான்,பயனில் வார்த்தையவை—பேசுவான்,
பொய்க்கரி சொல்வான், பெண்புத்திகேட் பான்முருகா!
மக்கட் பதரிவரா மால்.

—*நீதிபோதவெண்பா 68*

29. தமக்குரியவற்றைக் காணாவிடில் துயரப்படுபவை

இரவிகா ணாவனசம் மாரிகா ணாதபயிர்
இந்துகா ணாதகுமுதம்
ஏந்தல்கா ணாநாடு கரைகள்கா ணாஓடம்
இன்சொல்கா ணாவிருந்து

சுரபிகா ணாதகன்(று) அன்னைகா ணாமதலை
சோலைகா ணாதவண்டு
தோழர்கா ணாநேயர் கலைகள்கா ணாதமான்
சோடுகா ணாதபேடு

குரவர்கா ணாதசபை தியாகிகா ணாவறிஞர்
கொழுநர்கா ணாதபெண்கள்
கொண்டல்கா ணாதமயில் சிறுவர்கா ணாவாழ்வு
கோடைகா ணாதகுயில்கள்

வரவுகா ணாதசெல(வு) இவையெலாம் புவிமீதில்
வாழ்வுகா ணாஇளமையாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை:

வான்காணாப் பைங்கூழ்; மதிகாணாச் செங்குமுதம்;
ஆண்காணாக் கன்று;கலை யைக்காணா—மான்;கனிவு
கொண்டதாய் காணாக் குழவி; பொழில்நறவு
மண்டுமலர் காணாத வண்டு, 82

தோழரைக்கா ணாநேயர்; சோடுகா ணாப்பேடு;
வாழரசு காணா மணிநகரம்;—கேள்வர்புயம்
காணாமின்; ஈவோரைக் காணா மிடியன்;நின்தாள்
காணார்ஒப் பாம்சண்முகா!

—நீதிபோதவெண்பா 83

30. வியாதிக்கு மூலங்கள்

கல்லினால் மயிரினால் மீதூண் விரும்பலால்
கருதிய விசாரத்தினால்
கடுவழி நடக்கையால் மலசலம் அடக்கையால்
கனிபழங் கறியுண்ணலால்

நெல்லினால் உமியினால் உண்டபின் மூழ்கலால்
நித்திரைக ளில்லாமையால்
நீர்ப்பகையி னாற்பனிக் காற்றிலுடல் நோதலால்
நீடுசரு கிலையூறலால்

மெல்லிநல் லார்கலவி யதிகமுள் விரும்பலால்
வீழ்மலம் சிக்குகையினால்
மிகுசுமை யெடுத்தலால் இளவெயிற் காய்தலால்
மெய்வாட வேலைசெயலால்

வல்லிரவி லேதயிர்கள் சாகாதி யுண்ணலால்
வன்பிணிக் கிடமென்பர்காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை:

மீதூண் விரும்பேல்

—ஆத்திசூடி 91

மயிரினால் உமியினால் கடுவழி நடக்கையால்
மலசலம் அடக்கையாலும்
மனதுதுய ரத்தினால் கல்லினால் நெல்லினால்
மாதர்கள் புணர்ச்சியாலும்

தயிரிரவில் உண்ணலால் கனிபல அருந்தலால்
சருகூறல் நீரினாலும்
தயிலமது மூழ்கிமட மங்கையொடு சேர்தலால்
தண்பனியி னாற்காலையில்

வெயில்காய்தல் கண்விழிப்(பு) அகாலபோ சனமதால்
வெகுநித்தி ரைசெய்தலாலும்
விளம்பிடும் பத்தியத் தாழ்வினால் வினையினால்
வியாதிவரு மூலமென்பார்.

—கயிலாசநாதர் சதகம் 25

அளவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய் என்(று)—உளமுதுநூல்
வாக்கியத்தால் ... ...

-- ஆத்திசூடி வெண்பா

தன்னைத்தான் பேணா தாலும்
சரீரத்தின் தண்டிப் பாலும்
பின்னுற்ற விசாரத் தாலும்
பின்சல மலத்தி னாலும்
அன்னத்தை யொறுப்ப தாலும்
அரையுடல் முழுக லாலும்
தன்மத்தை யிகழ்வ தாலும்
சரீரத்தில் வியாதி தோன்றும்.

பல வித்துவான்கள் பாடியவற்றுள் ஒன்று 36
தனிப்பாடற்றிரட்டு--இரண்டாம் பாகம்

தூங்காமை, நாடோறும் தோய்தல்,உண்ட பின்மூழ்கல்,
நீங்கா விசாரம், நெடுங்காற்றோ(டு)—ஓங்கும்இள
வெய்யில் பனிவிரும்பல், மென்கனிமிக் குண்ணல்,முரு
கையா!வியா திக்குவழி யாம்.

--நீதிபோத வெண்பா 53

வடமொழியில் இடம்பெற்றுள்ளவை.

बालार्कः प्रेतधूमश्च वृद्धस्त्री पल्वलोदकम् ।

रात्रौ दध्यन्नभुक्तिश्च आयुः क्षीणं दिनेदिने ।

(இதன் பொருள் :

உதய காலத்தில் ஸூர்யனைக் காணுவதும், பிணப் புகை பிடிக்கையும், தன்னிற் பெரியாளோடு புணர்தலும், குட்டையாய்த் தேங்கும் அழுக்கு நீரைக் குடித்தலும், இரவில் தயிர் சாதம் உண்ணுதலும் ஆகிய இவைகள் நாளுக்கு நாள் ஆயுளைக் குறைக்கும்.)

நீதிசாஸ்திரம் 24

31. செத்தும் சாகாதவர்

அனைவர்க்கும் உபகார மாம்வாவி கூவமுண்
டாக்கினோர் நீதிமன்னர்
அழியாத தேவால யங்கட்டி வைத்துளோர்
அகரங்கள் செய்தபெரியோர்

தனையொப்பி லாப்புதல்வ னைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்தவீரர்
தரணிதனில் நிலைநிற்க எந்நாளும் மாறாத
தருமங்கள் செய்தபேர்கள்

கனவித்தை கொண்டவர்கள் ஓயாத கொடையாளர்
காவியஞ் செய்தகவிஞர்
கற்பினில் மிகுந்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர்கள்இம்

மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராவரன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

தேவால யங்கோ புரங்கல்வி பயிலிடந்
தேர்முதல வுண்டாக்கினோர்
செகமெலாங் கீர்த்திபெறும் ஓயாத கொடையுளோர்
தேசத்தில் நீதிமன்னர்

காவியஞ் செய்கவிஞர் சுத்தரண வீரரொடு
கனவித்தை கற்றபெரியர்
கதிர்மதியு முள்ளளவு மாறாத அறனெலாங்
காதல்கொடு செய்தபேர்கள்

வாவிகூ டஞ்சோலை தருமசத் திரமடம்
வண்மைபெற வேசெய்தபேர்
வானகத் துயிர்அகன் றேகினும் புவியதனில்
மாளாத பேர்களிவர்காண்.

—கயிலாசநாதர் சதகம் 12

பாலனஞ் செய்துளோர் ஆலயம் அமைத்துளோர்
பகர்கோ புரங்கட்டினோர்
பத்திமணி மண்டபந் தேர்விமா னம்பொன்
பதித்தவா கனம்அமைத்தோர்

சாலையன சத்திரம் விக்கிரக ரூபஞ்
சமைத்துளோ ரன்னதானந்
தடமேரி யக்ரார நிலமானி யங்கோட்டை
தண்சாலை யுண்டாக்கினோர்

வேலையாய் ஓயா தளித்தவர்கள் பொய்சொலா
விரதியர்கள் கவிவாணரால்
மேலாங் கவித்தொங்கல் பெற்றுளோர் இவர்களே
வியாத புகழ்படைத்தோர்.

—அண்ணாமலைச் சதகம் 31

ஓயாத ஈகையன், பாவாணன்,
பாக்கொண்டு உலகில்நிற்போன்,
மாயாத சூரன், மநுநீதி
வேந்தன், மறலிகையில்
போய்ஆவி புக்கும் உடம்பினை
நீத்தும் புகழுடம்பு
வியார் இவர்ஐவர் காண்;செழி
யா! திரு வேங்கடமே!

—செழியதரையன் நன்னெறி 18

ஓயாமல் ஈவோர், உயர்கவிஞர், நீதிமன்னர்,
மாயாத வீரர்,கவி மாலைபெற்றோர்,—தூயமகப்
பெற்றோர்,நல் வாய்மை பிறழார், உயிர்க்குறுகண்
உற்றோர்க் குதவிபுரி வோர், 54

சோலை,அன்ன சாலை,மடம், தூயநதி, வாவி,பிர
மாலயம்,தே வாலயம் உண் டாக்குமிவர்—ஞாலத்(து)
இறந்தும்இற வாரே! குகேச!நின் தாட் கன்பர்
மறந்தும் பிறவா தவர்.

—நீதிபோத வெண்பா 55

32. சாகாதிருந்துஞ் செத்தவர்

மாறாத வறுமையோர் தீராத பிணியாளர்
வருவேட் டகத்திலுண்போர்
மனைவியை வழங்கியே சீவனம் செய்குவோர்
மன்னுமொரு ராசசபையில்

தூறாக நிந்தைசெய் துய்குவோர் சிவிகைகள்
சுமந்தே பிழைக்கின்றபேர்
தொலையா விசாரத் தழுந்துவோர் வார்த்தையிற்
சோர்வுபட லுற்றபெரியோர்

வீறாக மனையாள் தனக்கஞ்சி வந்திடு
விருந்தினை யொழித்துவிடுவோர்
வீம்புடன் செல்லாத விவகார மதுகொண்டு
மிக்கசபை யேறும்அசடர்

மாறாக இவரெலாம் உயிருடன் செத்தசவ
மாகியொளி மாய்வர்கண்டாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

வெகுசன விரோதியர்கள் பழிமிகக் கொண்டபேர்
விதரணர்க் கீயாதபேர்
வேட்டகந் தன்னிலே மருவுண் டிருந்தபேர்
வெகுகடன் பட்டபேர்கள்

செகமதனி லேவழக் கோரமது சொல்லுவோர்
செப்புமொழி தப்புநடையோர்
தினந்தினம் பொய்யுரை புகன்றுபா வலர்தமைத்
திருப்படிக் கின்றதீயோர்

மகதமுத லாம்பாஷை யாவையுங் கற்றவையில்
வாய்மூடி நின்றபேர்கள்
மாறாத வறுமையோர் தீராத பிணியாளர்
மனைவியை வழங்கியுண்போர்

ககமென அலைந்துதிரி யினுமாண்ட பிணமென்பர்.

—*கயிலாசநாதர் சதகம் 13*

நீந்தா வறிஞர், பிணியாளர், ஒத்த நெறிஅறியார்,
பூந்தாரம் அஞ்சி விருந்துஒழிப் பார்,பொருட் கேசிவிகை
ஊர்ந்தார் முதுகில் சுமந்தும்உண் பார்தம் உடல்இருந்தும்
வீந்தார் இவர்ஐவர் காண்;செழி யா!திரு வேங்கடமே!

—*செழியதரையன் நன்னெறி 19*

வித்தை நயமறியார்; வேடகத்துண் பார்;என்றும்
சத்துருவைச் சேவிப்பார்; தன்மனைக்கு—மெத்தமனம்
அஞ்சிவிருந் துக்கொளிப்பார்; அன்னவளை முன்னிட்டுத்
தஞ்சம் எனவாழ்ந் தவர், 56

தீரா வறுமைபிணி தீராக் கவலையுடை
யாரார் அவருமுரு கைய!நின்சீர்—ஓரா(து)
இருந்தவரும் மெய்யில் இலங்கும் உயிரோ(டு)
இருந்தும் இறந்தார்க ளே.

—*நீதிபோதவெண்பா 57*

33. சிறிதும் பயன்படாதவர்

பதராகி லுங்கன விபூதிவிளை விக்கும்
பழமைபெறு சுவராகிலும்
பலருக்கும் மறைவாகும் மாடுரிஞ் சிடும்மலம்
பன்றிகட் குபயோகமாம்

கதமிகு கடாவென்னில் உழுதுபுவி காக்கும்வன்
கழுதையும் பொதிசுமக்கும்
கல்லெனில் தேவர்களும் ஆலயமு மாம்பெருங்
கான்புற்றும் அரவமனையாம்

இதமிலாச் சவமாகி லுஞ்சிலர்க் குதவிசெயும்
இழிவுறு குரங்காயினும்
இரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருகோல்
ஏற்றமா ளிகைவிளக்கும்

மதமது மிகும்பரம லோபரால் உபகாரம்
மற்றொருவ ருக்குமுண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை:

கல்லா லயமாம் தேவருமாம் கழுதை கசடர் பொதிசுமக்கும்
கடாவோ உழுது பயிரிடற்காம் கட்டம் பன்றிக் கிரையாகும்
புல்லே றிசர் வாகனமாம் பொதியுஞ் சுமக்கும் பிணமெனிலோ
பூசி முடித்து மறையோர்க்குப் பொருளை ஈந்து புகழெய்தும்.
மல்லார் குட்டிச் சுவரெனிலோ மாடு முறைஞ்சு மறைவாகும்.
மதியாத் துடைப்பந் தானெனிலோ மாட கூடந்
தனைவிளக்கும்
அல்லா துலுத்தன் றனக்கிணையா யாரை யுரைப்பேன்
புவிமீதில்
அவனைக் குறித்துக் கூறுமிடத்(து) அவனுக் கவனே
சரிதானே.

—இராமச்சந்திரக் கவிராயரின் தனிப்பாடல் 24
தனிப்பாடற்றிரட்டு—முதற்பாகம்

34. உலுத்தர் இயல்பு

திரவியங் காக்குமொரு பூதங்கள் போற்பணந்
தேடிப் புதைத்துவைப்பார்
சீலைநல மாகவுங் கட்டார்கள் நல்லமுது
செய்துணார் அறமுஞ்செயார்

புரவலர்செய் தண்டந் தனக்கும் வலுவாகப்
புகுந்திருட ருக்குமீவார்
புலவரைக் கண்டவுடன் ஓடிப் பதுங்குவார்
புராணிகர்க் கொன்றும்உதவார்

விரகறிந் தேபிள்ளை சோறுகறி தினுமளவில்
வெகுபணஞ் செலவாகலால்
விளையாடு கிழவனாம் பிள்ளையே பிள்ளையென
மிகுசெட்டி சொன்னகதைபோல்

வரவுபார்க் கின்றதே யல்லாது லோபியர்கள்
மற்றொருவ ருக்கீவரோ?
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்...

—திரிகடுகம் 89

வறிதிற் புதைத்துவைத்து ஈயாத பேர்களே
மார்க்கம்அறி யாக்குருடராம்.

—அறப்பளீசுர சதகம் 7

தெள்ளுதமிழ் வாணரைக் கண்டுடல் நடுங்கித்
திடுக்கிட் டுளம்பதைத்துத்
திகைத்துமுகம் வேறாகி வாயடைத் துக்கண்
சிவந்துபெரு மூச்செறிந்து

மெள்ளவே யோடிப் பதுங்கிப் பணப்பெட்டி
மீதிற் கவிழ்ந்துகாக்கும்
வீண்லோப ரைச்செத்த சவமெனவும் ஆகாது.

—கயிலாசநாதர் சதகம் 8

கன்னமிடு கள்வருக் காடையும் பணிகளுங்
காணாம லேகொடுப்பார்;
....
....
சவுக்கிட் டடிக்கின்ற மன்னர்க்கு வீட்டுத்
தனங்களெல் லாங்கொடுப்பார்
....
....
அவனிமிசை யிப்படிக் கொடுக்கின்ற பேர்கள்தமை
அதிலோப ரென்பதென்னோ!

—திருவேங்கட சதகம் 46

நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகும் காண்.

ஔவையார் தனிப்பாடல்
தனிப்பாடற்றிரட்டு—முதற்பாகம்

தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

—உலகநீதி 3

நேசிக்கும் வேந்தர்க்கும், கள்ளர்க்கும், பேய்க்கும் நெருப்பினுக்கும்
தாசிக்கும் ஈவர் பணத்தையெல்லாம், நல்ல தர்மஞ்செய்யார்;
ஆசிக்கும் புண்டி நிறைத்து முண்ணார், அவர் அம்ம, அம்மா
வாசிக்கும் உண்டறி யாரோ, குறுங்கை மலைநம்பியே?

—நம்பி சதகம் 46

ஊனமே எவருக் குஞ்செய்
துறுபொருள் தேடி நல்ல
தானமும் தவமும் இன்றித்
தான்புசிப் பதுவும் இன்றி
ஈனமாய்ப் புதைத்து வைத்தால்
எரிமன்னன் சோரன் தண்ணீர்
ஆனநால் வகையி னாலும்
அழிந்திடும் என்பர் மேலோர்.

—நீதிசாரம் 50

வடமொழியில் இடம்பெற்றுள்ளவை.

चत्वारो वित्तदायादा धर्माग्निनृपतस्करा ।
ज्येष्ठपुत्रावमानेन त्रयः कुप्यन्ति सोदराः ॥

(இதன் பொருள்:

ஒருவன் சம்பாதித்த பொருளைத் தர்மம், அக்னி, ராஜா, திருடன் இவர்கள் நான்குபேர் புத்ரர் அனுபவிக்கத் தக்கவர்கள். அவர்களில் மூத்த குமாரனாகிய தர்மத்துக்கு நாலிலொருபங்கு சிலவழியாதனிட பொருளை மற்ற மூன்று பிள்ளைகளாகிய அக்னி, அரசன், கள்ளன் இவர்கள் அபகரிப்பார்கள்.)

—நீதி சாஸ்திரம் 170

35. திரு வாழும் இடங்கள்

கடவா ரணத்திலும் கங்கா சலத்திலும்
கமலா சனந்தன்னிலும்
காகுத்தன் மார்பிலும் கொற்றவ ரிடத்திலும்
காலியின் கூட்டத்திலும்

நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
நல்லோ ரிட ந்தன்னிலும்
நல்லசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும்
ரணசுத்த வீரர்பாலும்

அடர்கே தனத்திலும் சுயவரந் தன்னிலும்
அருந்துளசி வில்வத்திலும்
அலர்தரு கடப்பமலர் தனிலும்இர தத்திலும்
அதிகுண மானரூப

மடவா ரிடத்திலும் குடிகொண்டு திருமாது
மாறா திருப்பளன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
நாகரிகர் மாமனையிலே
நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே
நறைகொண்ட பைந்துளவிலே

கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயில்தனிலே
கடிநக ரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக்கதனிலே

பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாத பேர்பாலிலே
பூந்தடந் தன்னிலே பாற்குடத் திடையிலே
போதகத் தின்சிரசிலே
அற்பெருங் கோதைமலர் மங்கைவாழ் இடமென்பர்.

—அறப்பளீசுர சதகம் 20

கொற்றவர் இடத்தினும் கோக்களின் வாலினும்
குணவான்கள் வதனத்தினும்
குடத்தினுறு பாலினும் கடல்வார ணத்தினும்
கொடியினும் துரகத்தினும்

சுற்றநீங் காதமனை தன்னினும் கற்புமிகு
தோகைய ரிடந்தன்னினும்
சொல்லரிய சிவிகைபே ரிகைதணங் களினுமது
சூதனன் திருமார்பினும்

சற்றாயி னும்வாய்மை தவறா ரிடத்தும்
சலத்தினும் தானியத்தும்
சாதிமல ரதனினும் புண்ணிய ரிடத்தினும்
தங்கநவ ரத்தினத்தும்
கற்றவ ரிடத்தினும் திருமகள் இருப்பிடம்.

—கயிலாசநாதர் சதகம் 26

வேந்தர் புயம்துளசி வில்வமரை நீபமலர்
வாய்ந்தகடல் சங்கக்கரி மாக்கழுத்து—வாய்ந்தபசுக்
கொட்டில் இரதம் கொடிசா மரம்சங்கம்
மட்டில்பரி சுத்த மண்ண. 22

வாய்மையறம் ஈகையுள்ளார் மால்மார்பு வீரர்நன்மை
ஆய்குணப் பெண்உருத்தி ராக்கம்இவை—தூய
இலக்குமிக்கு நல்இருப்பாம்; என்றுமன்பர் உள்ளத்(து)
இலக்காம் குணநிற் கிருப்பு.

—நீதிபோதவெண்பா 23

36. மூதேவி வாழும் இடங்கள்

சோரமங் கையர்கள்நிசம் உரையார்கள் வாயினில்
சூதகப் பெண்கள்நிழலில்
சூளையிற் சூழ்தலுறு புகையில் களேபரஞ்
சுடுபுகையில் நீசர்நிழலில்

காரிரவில் அரசுநிழ லில்கடா நிழலினொடு
கருதிய விளக்குநிழலில்
காமுகரில் நிட்டையில் லாதவர் முகத்தில்
கடுஞ்சினத் தோர்சபையினில்

ஈரமில் லாக்களர் நிலத்தினில் இராத்தயிரில்
இழியும்மது பானர்பாலில்
இலைவேல் விளாநிழலில் நிதமழுக் கடைமனையில்
ஏனம்நாய் அசகரத்தூள்

வாரிய முறத்தூள் பெருக்குதூள் மூதேவி
மாறா திருப்பள்என்பர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை:

மிதமின்றி அன்னம் புசிப்போ ரிடத்திலும்
மிகுபாஷை யோரிடத்தும்
மெய்யொன் றிலாமலே பொய்பேசி யேதிரியும்
மிக்கபா தகரிடத்தும்

சுதியொன் றுமிலர்போல மலினங் கொளும்பழைய
சுந்தையணி வோரிடத்தும்
கடிநா யெனச்சீறி யெவரையுஞ் சேர்க்காத
கன்னிவாழ் மனையகத்தும்

ததிசேர் கடத்திலும் கர்த்தபத் திடையிலும்
சார்ந்தஆட் டின்திரளிலும்
சாம்பிண முகத்திலும் இவைபெலாம் கவலைபுரி
தௌவைவாழ் இடமென்பர்காண்.

—அறப்பளீசுர சதகம் 21

வருகின்ற யாசக ரிடத்துநோ யினருளும்
வர்கின்மட மங்கைபாலும்
வன்கூகை முகமதில் தீபத்தின் நிழலிலும்
மட்சூளை யின்புகையினும்

குருதிமட வரல்நீழ லூடுதூட் புகையினும்
கொட்டிடு முறத்தூளினும்
குருவரசு நிழல்விளாத் தாணிமர நிழலினும்
குழைக்குநாய்க் காற்றூளினும்

பெருகுதுரை தன்னைப் பெருக்கிடுந் தூளினும்
பிணமயா னப்புகையுளும்
பிறலாம் கந்தையினும் அதிகபோ சனரினும்
பேசுபொய் யினரிடத்தும்

கருதரிய மூத்தாள் இருக்குமிடம் இவையென்பர்.

—கயிலாசநாதர் சதகம் 27

நாட்டரசு நீழலும் விளாமரத் தடிநிழலும்
நன்மனை விளக்குநிழலும்
நடமாடு மனிதர்நிழல் இரவினுடன் மேற்படியி
ணலமிலாச் சேட்டைமருவும்

பூட்டுநூன் மற்றையவர்கள் தந்நிழல் மிதித்திடற்
புனிதமா யொருவனுண்ட
புன்றசேட் மொருவனுண லாடைதோய்த் திட்டநீர்
பொருந்தவிட் கொள்ளலாகா

வீட்டிடை பெருக்கிய விளக்குமாற் றுப்புழுதி
மென்மயி ருகுத்தபுழுதி
வீறிடுங் கழுதைநாய்ப் புழுதிவெந் திடுசாம்பல்
வேகாக் கரிப்புழுதியும்
ஆட்டிடைப் புழுதிபட லாகாது மேலென்பர்

—அண்ணாமலை சதகம் 68

விளக்குநிழல் ஆட்டுத்தூள் குயவன் சூளை
விளவின்நிழல் கங்குலின்வா யரசு நீழல்
முளைக்கரிய தாணிநிழல் கருவேல் நீழல்
முறம்புடைக்கை பெருக்குந்தூள் மூளுந் தூளும்
களிக்கரிய சுணங்கன்தூள் கழுதைத் தூளும்
களேபரத்தின் புகைமுதிர்ந்த கன்னி நீழல்
குளிக்குமவ ராக்கைநீர் புலையர் நீழல்
குருதிமட வார்நீழல் குறுகொ ணாதே.

--தனிப்பாடற்றிரட்டு 631

வேறாகிப் பூத்த பெண்ணாரையும், மூத்தமின்
னார்தமையும்
பேறான சூதகம் நீங்கா திருக்கின்ற பெண்டிரையும்,
தேறா விதவையையும், சேருவோ ரைமூ தேவியென்றும்,
மாறா தடைந்து கொள்வாளே, குறுங்கை
மலைநம்பியே.

—நம்பி சதகம் 75

நிட்டையிலார், நீசர் நிழல், விதவை, கள்ளிநிழல்
கொட்டைநூற் போர்.பேடி, கோபி,உமி—சுட்டகரி,
சூழை,மயா னப்புகைய சுத்தமனை, சூதகப்பெண்
நீழல்,விளா, வேலா நிழல். 24

மேதிக் கடாப்,பல் விளக்கார்,மிக் குண்பார்,கைமை
மாதைத்தோய் வோர்கழுதை வால்,விடியற்-போதுதுயில்
மாக்களுங்,கூந் தல்!நின் மலரடிஉன் னார்மனமும்.
காக்கைக் கொடியாள்வாழ்க் கை.

—நீதிபோத வெண்பா 25

37. திருத்தினும் திருந்தாதவை

கட்டிஎரு விட்டுச் செழுந்தேனை வார்க்கினும் ...
காஞ்சிரம் கைப்புவிடுமோ
கழுதையைக் கட்டிவைத் தோமம் வளர்க்கினும்
கதிபெறுங் குதிரையாமோ

குட்டிஅர வுக்கமு தளித்தே வளர்க்கினும்
கொடுவிட மலாதுதருமோ
குக்கல்நெடு வாலுக்கே மட்டையைக் கட்டினும்
கோணாம லேநிமிருமோ.

ஒட்டியே குறுணிமை இட்டாலும் நயமிலா
யோனிகண் ணாகிவிடுமோ
உலவுகன கர்ப்பூர வாடைபல கூட்டினும்
உள்ளியின் குணமாறுமோ

மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலுமதின்
மார்க்கமறி யாதைவருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

காஞ்சிரங் கனியதைத் தேன்குடந் தனில்வெகு
காலம திருத்தியென்ன
....
ஞானநெறி இன்றியே கோடிநூல் ஓதினும்
நயப்பென்ன அதுபோலவாம். 32

வெண்மைதரு சீனி சொரிந்துபயிர் செய்யினும்
வெள்ளுள்ளி குணமாறுமோ
....

கோடிமாத் திரையிலே கியம்பல அளிக்கினும்
குக்கலின் வால்நிமிருமோ
....
சற்குணமி லாதவர்க் கெத்தனை யுரைக்கினும்
சண்டிக் குணம்போகுமோ.

—கயிலாசநாதர் சதகம் 37

மிகவுஞ் செழுந்தேன் சொரிந்தே வளர்க்கினும்
வெள்ளுள்ளி நாற்றமாறா.
....
ஆர்சொல்லி னும்தங்கள் சுயகுணம் விடாமலே
அமைவுற்று வாழ்வர்சிலபேர்.

—திருவேங்கட சதகம் 91

சிறியவரா முழுமூடர் துரைத்தனமா
யுலகாளத் திறம்பெற் றாலும்
அறிவுடையார் தங்களைப்போற் சற்குணமு
முடையோர்க ளாக மாட்டார்
மறிதருமான் மழுவேந்துந் தண்டலையா
ரேசொன்னேன் வாரி வாரிக்
குறுணிமைதான் இட்டாலுங் குறிவடிவம்
கண்ணாகிக் குணங்கொ டாதே.

—தண்டலையார் சதகம் 59

...... புல்லர் மாறுபடும்
பிணக்கார் தடுப்பவர் நாய்வாலை
நீளப் பிடித்திழுத்துக்
குணக்கா ரெடுக்கவல் லாரச்சு
தாநந்த கோவிந்தனே.

—கோவிந்த சதகம் 17

பொய்யிட்ட கூடெனும் துர்ச்சனர்க்கே நல்லபுத்தி
சொன்னால்,
கையிட்டுத் தூக்கணத்தின் கூடு பிய்த்த கருங்குரங்காம்:

நெய்யிட்டு வேகினும், பேய்ச்சுரைக்காய் கைப்பு
நீங்குவதோ;
மையிட்டும் உந்தி கண்ணாமோ, குறுங்கை
மலைநம்பியே?

—நம்பி சதகம் 36

பாம்பு,பால் பெய்திட் டாலும்,
குச்சித விடத்தை நல்கும்;
குவித்தசர்க் கரைமேல் நட்டு
மிச்சமாத் தேன்பெய் தாலும்,
வேம்புதன் சுசப்பு மாறா. 110

இன்னவை போலும் துட்டர்க்(கு)
இதம்பல விதம்செய் தாலும்,
பின்னும்அங் கவர்துன் மார்க்கம்
பெருகும்;நற் குணத்தர் ஆகார்.

—பஞ்சதந்திரப்பாடல்-மித்திர பேதம் 111

ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ.

ஔவையார் தனிப்பாடல் 60
தனிப்பாடற்றிரட்டு—முதற்பாகம்

ஊட்டினும் புல்விரை உள்ளி கமழாதே.
பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

—வெற்றிவேற்கை 29 30,

அவ்விய நெஞ்சத் தறிவில்லாத் துர்ச்சனரைச்
செவ்விய ராக்குஞ் செயலுண்டோ—திவ்வியநற்
கந்தம் பலவுங் கலந்தாலும் உள்ளியது
கந்தங் கெடுமோ கரை.

—நீதிவெண்பா 21

கண்ணூறு கற்பூ ரத்தால்,
புனுகுகத் தூரி யாலே
பண்ணிடு சேறு செய்தே,
உள்ளியைப் பதித்துப், பன்னீர்த்
தண்ணீராற் பயிர்செய் தாலும்
தன்நாற்றம் நீங்கா தேபோல்
நண்ணிஎத் தனைசொன் னாலும்
துர்ச்சனன் நல்லன் ஆகான்.

—நீதிசாரம் 96

பாம்புக்குப் பால்வார்த் தென்றும்
பழகினும் நன்மை தாரா
... ...
தாம்பல நூல்கற் றாலும்
துர்ச்சனர் தக்கோ ராகார்.

—விவேகசிந்தாமணி 61

கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி எருப்போட்டுக்
கமழ்நீர் பாய்ச்சிப்
பொற்பூர உள்ளியினை விதைத்தாலும் அதன்குணத்
தைப்
பொருந்தக் காட்டும்
சொற்பேதை யருக்கறிவிங் கினிதாக வருமெனவே
சொல்லி னாலும்
நற்போதும் வாராதங் கவர்குணமே மேலாக
நடக்குந் தானே.

—விவேகசிந்தாமணி 88

38. குறிப்பறிதல்

மனதிற் கடும்பகை முகத்தினால் அறியலாம்
மாநிலப் பூடுகளெலாம்
மழையினால் அறியலாம் நல்லார் பொலார்தமை
மக்களால் அறியலாகும்

கனமருவு சூரரைச் சமரினால் அறியலாம்
கற்றவொரு வித்துவானைக்
கல்விப்ர சங்கத்தி னாலறிய லாம்குணங்
களைநடையி னாலறியலாம்

தனதகம் அடுத்தது பளிங்கினா லறியலாம்
சாதிசொல் லாலறியலாம்
தருநீதி கேள்வியா லறியலாம் பிணிகளைத்
தாதுக்க ளாலறியலாம்

வனசவிக சிதவதன பரிபூர ணானந்த
வாலவடி வானவேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

—திருக்குறள் 114

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்.

—திருக்குறள் 706

39. குணம் மாறாமை

குணமிலாத் துஷ்டமிரு கங்களையும் நயகுணம்
கொண்டுட் படுத்திவிடலாம்
கொடியபல விடநோய்கள் யாவும்ஔ ஷதமது
கொடுத்துத் திருப்பிவிடலாம்

உணர்விலாப் பிரமராட் சசிமுதற் பேய்களை
உகந்துகூத் தாட்டிவிடலாம்
உபாயத்தி னாற்பெரும் பறவைக்கு நற்புத்தி
உண்டாக்க லாம்உயிர்பெறப்

பிணமதை எழுப்பலாம் அக்கினி சுடாமல்
பெரும்புன லெனச்செய்யலாம்
பிணியையும் அகற்றலாம் காலதூ துவரையும்
பின்புவரு கென்றுசொலலாம்

மணலையும் கயிறாகத் திரிக்கலாம் கயவர்குணம்
மட்டும் திருப்பவசமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

நெருப்பைநீர் போற்செய்யலாம்
நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலாம்
நீள்அர வினைப்பூணலாம்
பார்மீது மணலைச் சமைக்கலாம் சோறெனப்
பட்சமுட னேயுண்ணலாம்
....
புத்திசற்றும்
இல்லாத மூடர்தம் மனத்தைத் திருப்பவே
எவருக்கும் முடியாதுகாண்.

—அறப்பளீசுர சதகம் 15

40. இத் தீக்குணத்தோர் இவ்விலங்கு போல்வர் எனல்

தான்பிடித் ததுபிடிப் பென்றுமே லவர்புத்தி
தள்ளிச்செய் வோர்குரங்கு
சபையிற் குறிப்பறிய மாட்டாமல் நின்றவர்
தர்ம்பய னிலாதமரமாம்

வீம்பினால் எளியவரை எதிர்பண்ணி நிற்குமொரு
வெறியர்குரை ஞமலியாவார்
மிகநாடி வருவோர் முகம்பார்த் திடாலோபர்
மேன்மையில் லாதகழுதை

சோம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடும்
தூங்கலே சண்டிக்கடா
சூதுடன் அடுத்தோர்க் கிடுக்கணே செய்திடும்
துஷ்டனே கொட்டுதேளாம்

மாம்பழந் தனைவேண்டி யந்நாளில் ஈசனை
வலமாக வந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நல் மரம்.

—வாக்குண்டாம் 13

சற்றெனினு மொருகல்வி யறியாத கயவனே
தாங்குமுயிர் கொண்டமரமாம்

—திருவேங்கட சதகம் 54

பாவத்திற் கஞ்சான் பசாசு;பிடி வாதிமந்தி;
மாவவையிற் றூங்கிஎரு மைக்கடா;—மேவும்எளி
யோரைஎதிர்ப் பான்கடிநாய்; ஓவியமன் றோகதிர்வேல்
வீர! நினைப்பணியான் மெய்.

—நீதிபோதவெண்பா 75

41. அற்பருக்கு வாழ்வுவரில் குணம் வேறுபடும் எனல்

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னால்விழிக்(கு)
யாவருரு வுந்தோன் றிடா(து)
அண்டிநின் றேநல்ல வார்த்தைக ளுரைத்தாலும்
அவர்செவிக் கேறிடாது

முற்பட்ச மானபேர் வருகினும் வாருமென
மொழியவும் வாய்வராது
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலை யகலவைப்பார்

விற்பன மிகுத்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
வெடுவெடுத் தேசிநிற்பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீருமென்பார்

மற்புயந் தனில்நீப மாலையணி லோலனே
மார்பனே வடிவேலவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

விற்பனர்க்கு வாழ்வுவந்தால் மிகவணங்கிக்
கண்ணோட்ட மிகவுஞ் செய்வார்
சொற்பருக்கு வாழ்வுவந்தால் கண்தெரியா
திறுமாந்து துன்பஞ் செய்வார்
பற்பலர்க்கு வாழ்வுதருந் தண்டலையா
ரேசொன்னேன் பண்பில் லாத
அற்பருக்கு வாழ்வுவந்தா லர்த்தராத்
திரிகுடைமே லாகுந் தானே.

—*தண்டலையார் சதகம் 57*

42. இன்ன தீங்குள்ளோர் இன்ன கிரகம் போல்வர் எனல்

அன்னைதந் தையர்புத்தி கேளாத பிள்ளையோ
அஷ்டமச் சனியாகுவான்
அஞ்சாம லெதிர்பேசி நிற்குமனை யாள்வாக்கில்
அங்கார கச்சன்மமாம்

தன்னைமிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாஅடிமை
சந்திராட் டகமென்னலாம்
தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ
சார்ந்தசன் மச்சூரியன்

நன்னயமி லாதவஞ் சனைசெய்த தமையன்மூன்
றாமிடத் தில்வியாழன்
நாடொறும் விரோதமிடு கொண்டோன் கொடுத்துளோன்
ராகுகே துக்களெனலாம்

மன்னயனை யன்றுசிறை தனிலிட்டு நம்பற்கு
மந்திரம் உரைத்தகுருவே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

தகப்பன்சொல் மந்திரமென் னக்கொள் ளாத
தனையரையும்,
சுகப்பதி யோடெதிர்த் துத்தரம் சொல்லிய
தோகையையும்,
இகழ்த்திமுன் னோனை வழக்குக் கிழுக்கும்
இளவலையும்,
மகச்சனி யென்றெண்ண வேண்டும் குறுங்கை
மலைநம்பியே!

—நம்பி சதகம் 74

தந்தைதாய் சொற்கேளா தானும், ...
.... கடுஞ்சொல்
மங்கையும், ... 28

தமையனைமன் றிற்கேற்றும் தம்பியும், அத் தம்பிக்
கமையவஞ்சம் செய்யும் அவனும், — ....
.... அட்ட
மச்சனியன் றோவேல வா!

—*நீதிபோதவெண்பா 29*

43. நல்வினஞ் சேர் பயன்

சந்தன விருக்ஷத்தை அண்டிநிற் கின்றபல
தருவுமவ் வாசனைதரும்
தங்கமக மேருவை அடுத்திடுங் காக்கையும்
சாயல்பொன் மயமேதரும்

பந்தமிகு பாலுடன் விளாவிய தணீரெலாம்
பால்போல் நிறங்கொடுக்கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமுமப்
படியே குணங்கொடுக்கும்

அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடின்
அடுத்ததும் பசுமையாகும்
ஆனபெரி யோர்களொடு சகவாச மதுசெயின்
அவர்கள்குணம் வருமென்பர்காண்

மந்தர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தஅரி
மருகமெய்ஞ் ஞானமுருகா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும்
பொன்னிறமாய்
இருக்குமென்று ………

—யாப்பருங்கலக்காரிகை 3

வைகலும்
பொற்குன் றஞ்சேர்ந்த தோர்காக்கை பொன்னாம்

—சுந்தரர் தேவாரம், திருப்புனவாயில்

கனக மலையருகே
போயின காக்கையும் அன்றே படைத்தது
பொன்வண்ணம்

—சேரமான் பெருமாள் நாயனாரின்
பொன்வண்ணத்தந்தாதி 100

சந்தனத்தைச் சேர்தருவும் தக்க மணங்கமழும்

—நீதிவெண்பா 99

சந்தனஞ்சார் தாருவுக்குத் தன்மணமும், மேருவின்பால்
வந்தகொடிக் கந்நிறமும் வாய்ந்தாங்கு—முந்துபெரி
யோருடனே சேர்ந்தசிறி யோர்க்குமவர் நற்குணமே
சேருமென்பர் தோகையர சே!

—நீதிபோத வெண்பா 34

44. வலியோரையும் ஊழ் விடாது எனல்

அன்றுமுடி சூடுவ திருக்கரகு ராமன்முன்
அருங்கா டுறைந்ததென்ன
அண்டரெல் லாமமிர்த முண்டிடப் பரமனுக்(கு)
ஆலம் லபித்ததென்ன

வென்றிவரு தேவர்சிறை மீட்ட நீ களவில்வே
டிச்சியைச் சேர்ந்ததென்ன
மேதினி படைக்குமய னுக்கொரு சிரம்போகி
வெஞ்சிறையி லுற்றதென்ன

என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன
தென்னகாண் வல்லமையினால்
எண்ணத்தி னால்ஒன்றும் வாராது பரமசிவன்
எத்தனப் படிமுடியுமாம்

மன்றுதனில் நடனமிடு கங்கா தரன்பெற்ற
வரபுத்ர வடிவேலவா !
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே !

45. பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்தோர்

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
தசரத குமாரராமன்
தமையனருள் வாக்யபரி பாலனஞ் செய்தோர்கள்
தருமனுக் கிளையநால்வர்

சிந்தையில் உணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ்
செய்தவன் அரிச்சந்திரன்
தேகியென் றோர்க்கிலை யெனாவாக்ய பாலனஞ்
செய்தவன் தானகன்னன்

நிந்தைதவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
நீள்பெல மிகுத்தஅநுமான்
நிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலனம்
நிலத்தில் நளாகினிசெய்தாள்

மந்தைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர வுகந்ததுணைவா !
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே !

ஒப்புமை :

தந்தைதாய் வாக்யபரி பாலனம் புரிவதும்
தான்சொன்ன படிசெய்வதும்
தவறாத விரதமும் பொய்யாத வசனமும்
தானமுங் கனபொறுமையும்

சிந்தைமகிழ் மரபினோர் செய்தொழில் முடிப்பதும்
தேவதா விசுவாசமும்

செய்தபேர் பரசுரா மன்கவச குண்டலன்
செயராம னொடுவீடுமன்

அந்தமிகு சொல்லரிச் சந்திரன் மாபலி
அடல்தரும னொடுபகிரதன்
அருள்பிரக லாதன்இவர் போற்பெருங் கீர்த்தியொடு
அவனிமிசை நீடுவாழ்வார்.

—திருவேங்கட சதகம் 11

46. முயற்சியின் மிக்கது ஊழ் எனல்

வங்காளம் ஏறுகினும் வாருகோல் ஒருகாசு
    மட்டன்றி அதிகமாமோ
  வானேறி உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி
    வண்ணப் பருந்தாகுமோ

கங்கா சலந்தன்னில் மூழ்கினும் பேய்ச்சுரைக்
    காய்நல்ல சுரையாகுமோ
  கடலுக்குள் நாழியை அமுக்கியே மொண்டிடிற்
    காணுமோ நானாழிதான்

ஐங்காதம் ஓடினுந் தன்வினைகள் தன்னோடே
    அடையாமல் நீங்கிவிடுமோ
  யாரிடஞ் சென்றாலும் வெகுதொலைகள் சுற்றினும்
    அமைத்தபடி யன்றிவருமோ

மங்காத செந்தமிழ் கொண்டுநக் கீரர்க்கு
    வந்ததுயர் தீர்த்தமுருகா
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
    மலைமேவு குமரேசனே.

ஒப்புமை

தருவையொப் பாமைந் தருவென்ப
    ரோவுத் தமபுருஷன்
உருவையொப் பாருத் தமராவு
    ரோகுண மொப்பதல்லால்
கருவியொப் பாயுய ரப்பறந்
    தாலுங் கருடனுக்கூர்க்
குருவியொப் பாமென்ப ரோவச்சு
    தாநந்த கோவிந்தனே.

—கோவிந்த சதகம் 79

கயிலைத்தா ருவைப்போல் அறுசிவனை
    யுண்டுபண்ணக் கருதித் தக்கன்

செயலற்றே செயவேள்வி யுங்குலைந்து
　　வேற்றுமுகம் சேர்ந்தா னன்றே
அயிலைப்போல் விழித்துசவுந் தரியுமையாள்
　　பாகர்செயங் கொண்டார் பார்மேல்
உயரத்தான் பறந்தாலும் ஊர்க்குருவி
　　பருந்தாமோ உலகுள் ளோரே.

—செயங்கொண்டார் வழக்கம் 40

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும்
　　பிறர்க்குறுதி தனைச்சொன் னாலும்
அங்கணுல கிற்சிறியோர் தாமடங்கி
　　நடந்துகதி யடைய மாட்டார்
திங்களணி சடையாரே தண்டலையா
　　ரேசொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
　　நல்லசுரைக் காயா காதே.

—தண்டலையார் சதகம் 14

செங்காவி மலர்த்தடஞ்சூழ் தண்டலைநீள்
　　நெறியேநின் செயலுண் டாகில்
எங்காகி லென்னவவர் எண்ணியதெல்
　　லாமுடியும் இல்லை யாகில்
பொங்காழி சூழுலகில் உள்ளங்கால்
　　வெள்ளெலும்பாய்ப் போக ஓடி
ஐங்காதம் போனாலுந் தன்பாவந்
　　தன்னுடனே யாகுந் தானே.

--தண்டலையார் சதகம் 25

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியுங் கணவனும் நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

—மூதுரை 19

47. இடும்பால் அழிவு நேரும் எனல்

சூரபத் மன்பெலமும் ராவணன் தீரமும்
துடுக்கான கஞ்சன்வலியும்
துடியான இரணியன் வரப்ரசா தங்களும்
தொலையாத வாலிதிடமும்

பாரமிகு துரியோத னாதிநூற் றுவரது
பராக்ரமமு மதுகைடவர்
பாரிப்பும் மாவலிதன் ஆண்மையும் சோமுகன்
பாங்கிலுறு வல்லமைகளும்

ஏரணவு கீசகன் கனதையும் திரிபுரரின்
எண்ணமும் தக்கன்எழிலும்
இவர்களது சம்பத்தும் நின்றவோ? அவரவர்
இடும்பால் அழிந்தவன்றோ?

மாரனைக் கண்ணால் எரித்தருள் சிவன்தந்த
வரபுத்ர வடிவேலவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

48. நல்லோர் நட்புநிலை

மாமதியின் முயலான ததுதேய் வுழித்தேய்ந்து
வளருமப் போதுவளரும்
வாவிதனில் ஆம்பல்கொட் டிகளதனில் நீர்வற்றின்
வற்றிடும் பெருகிலுயரும்

பூமருவு புதல்பூடு கோடையில் தீய்ந்திடும்
பொங்குகா லந்தழைக்கும்
புண்டரிகம் இரவிபோ மளவிற் குவிந்திடும்
போதுதய மாகில்மலரும்

தேமுடல் இளைக்கிலுயிர் கூடவும் இளைக்குமது
தேறிலுயி ருஞ்சிறக்கும்
சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலும் நல்லோர்
சிநேகமிப் படியாகுமே

வாமனசொ ரூபமத யானைமுக னுக்கிளைய
வாலகுரு பரவேலவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

—மூதுரை 17

49. கைப்பலனாமவை

பருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
பாதிசம் பாநடுகையும்
பலமினிய ஆடிதனில் ஆனைவால் போலவே
பயிர்கொண்டு வருகரும்பும்

கருணையொடு மிக்கநா ணயமுளோர் கையினில்
கடனிட்டு வைத்தமுதலும்
காலமது நேரில் தனக்குறுதி யாகமுன்
கற்றுணர்ந் திடுகல்வியும்

விருதரச ரைக்கண்டு பழகிய சிநேகமும்
விவேகிகட் குபகாரமும்
வீணல்ல இவையெலாங் கைப்பலன தாகஅபி
விர்த்தியாய் வருமென்பர்காண்

மருவுலா வியநீப மாலையும் தண்டரள
மாலையும் புனைமார்பனே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

மன்னர்பழக் கம்,பக்கு வத்திற் படித்தவித்தை,
பின்னும் பருவத்திற் பெற்றபிள்ளை,—துன்படையும்
நாளொருவற்(கு) ஆற்றுதவி நான்கும் குகா!தருண
வேளைக் குதவுமென்ப வே.

—நீதிபோதவெண்பா 46

50. சமயத்துக்கு உதவாதவை

கல்லாது புத்தகந் தனில்எழுதி வீட்டினிற்
கட்டிவைத் திடுவித்தையும்
காலங்க ளுக்குதவ வேண்டுமென் றன்னியன்
கையிற் கொடுத்தபொருளும்

இல்லாளை நீங்கியே பிறர்பாரி சதமென்(று)
இருக்கின்ற குடிவாழ்க்கையும்
ஏறுமா றாகவே தேசாந் தரம்போய்
இருக்கின்ற பிள்ளைவாழ்வும்

சொல்லான தோன்றுமவர் மனமான தொன்றுமாச்
சொல்லுவஞ் சகர்நேசமும்
சுகியமா யுண்டென் றிருப்பதெல் லாம்தருண
துரிதத்தில் உதவாதுகாண்

வல்லான கொங்கைமட மாதுதெய் வானைகுற
வள்ளிபங் காளநேயா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

தன்னுடன் பிறவாத் தம்பி
தனைப்பெறாத் தாயார் தந்தை
அன்னிய ரிடத்துச் செல்வம்
அரும்பொருள் வேசி யாசை
மன்னிய ஏட்டின் கல்வி
மறுமனை யாட்டி வாழ்க்கை
இன்னவாங் கருமம் எட்டும்
இடுக்கத்துக் குதவா தன்றே.

—விவேகசிந்தாமணி 17

புத்தகத் தெழுதி வைத்துப்
    பொருந்திய வித்தை தானும்
அத்தமா பத்துச் கா'மென்(று)
    அயலவர் தமது கையில்
சித்தமாய்க் கொடுத்த பொன்னும்
    தேசசஞ் சாரச் சேயும்
உற்றவிப் பொருள்கள் மூன்றும்
    உண்டென்ப உதவா அன்றே.

—நீதிசாரம் 22

அன்பின்மனை வேசையுற(வு) அன்னியர்பால்
வைத்தபொருள்
தன்பிறவி யில்லாச் சகோதரமுன்—பின்பறியார்
தன்னைப் பெறாத்தந்தை தாய்தான் பெறாப்பிள்ளை
கன்மனத்து வஞ்சர்சிநே கம். 38

கல்லாமல் ஏட்டில் எழுதிவைத்த கல்வியிவை
எல்லாம் தருணத்திற்(கு) ஏலாவே—வில்லாரும்
வேலா! நினைக்கருதா வீணாள்நிற் போற்றியநாள்
போலாமோ காலன்வரும் போது?

—நீதிபோத வெண்பா 39

வடமொழியில் இடம்பெற்றுள்ளவை.

पुस्तकेषु च या विद्या परहस्ते च यद्धनम् ।
समयेतु परिप्राप्ते न सा विद्या न तद्धनम् ॥

இதன் பொருள்:

(புஸ்தகத்துப் படிப்பும் பிறர்கைப் பொருளும் வேளைக்குதவாததனால் அப்படிப்பட்ட படிப்பும் படிப்பல்ல பிறர்கைப் பொருளும் பொருளல்ல.)

—நீதி சாஸ்திரம் 69

பூண்டு மனம்வைத்துப் போற்றாது புத்தகத்திற்
காண்டலுற விட்ட கலையுணர்வும்—வேண்டலின்றி
மற்றொருவன் கைப்புகுந்த வான்பொருளுங் காரியங்கள்
உற்றபொழு தத்துதவா வுற்று.

—சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்
மொழிபெயர்த்தியற்றிய
சாணக்கிய நீதிவெண்பாப் பாடல்

51. திரும்பமாட்டாதவை

ஆடரவின் வாயினில் அகப்பட்ட தவளையும்
ஆனைவா யிற்கரும்பும்
அரிதான கப்பலிற் பாய்மரக் காற்றினில்
அகப்பட்டு மெலிகாக்கையும்

நாடறிய வேதாரை வார்த்துக் கொடுத்ததும்
நமன்கைக்கு ளானஉயிரும்
நலமாக வேயணை கடந்திட்ட வெள்ளமும்
நாய்வேட்டை பட்டமுசலும்

தேடியுண் பார்கைக்கு ளானபல உடைமையும்
தீவாதை யானமனையும்
திரள்கொடுங் கோலரசர் கைக்கேறு பொருளும்
திரும்பிவா ராவென்பர்காண்

மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
வாழவந் திடுமுதல்வனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

வெவ்வரவின் வாய்த்தேரை; வேந்தர் கவர்ந்தபொருள்,
கௌவுகரி வாய்க்கரும்பு, காலனார்—வௌவுமுயிர்,
மேவி யணைகடந்த வெள்ளமல்குல் விற்கும்வஞ்சப்
பூவையருக் கீந்த பொருள். 47

ஒருங்கழலின் வாய்க்கவிழ்த்த நெய்யும், உலைவாய்
நெருங்கும் இரும்புண்ட நீரும்,—திரும்பிலும்உன்
செந்தாளில் வைத்திடும்என் சிந்தை திரும்பாதே
கந்தா! கடம்பா!குகா!

—நீதிபாதவெண்பா 48

52. இதனினும் இதுநன்று என்பவை

கடுகடுத் தாயிரஞ் செய்குவதில் இன்சொலாற்
களிகொண் டழைத்தல்நன்று
கனவேள்வி ஆயிரஞ் செய்வதில் பொய்யுரை
கருத்தொடு சொலாமைநன்று

வெடுவெடுக் கின்றவோ ரவிவேகி யுறவினில்
விவேகியொடு பகைமைநன்று
வெகுமதிக ளாயிரஞ் செய்வதின் அரைக்காசு
வேளைகண் டுதவல்நன்று

சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
சற்றுமிலை யென்னல்நன்று
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதின் நோயற்ற
தாரித்தி ரியம்நன்றுகாண்

மடுவினிற் கரிஓலம் என்னவந் தருள்செய்த
மால்மருக னானமுதல்வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

தெளிவிலார் நட்பிற் பகைநன்று; சாதல்
விளியா அருநோயின் நன்றால்:—அளிய
இகழ்தலிற் கோறல் இனிதே; மற்றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

நாலடியார் 219

செல்வமிருந் தும்பிணியால் தேங்கியுயிர் வாழ்வதிலும்
நல்லதுநோய் இன்றிஐயம் நாடியுணல்—பல்காற்
புணைநினது வேடம்பொய் பூண்டவரின் வேலா!
நினைநினைப்போர் மேலென்ப னே. 71

மூடர்நே யத்திற் பகைநன்று; மொய்நோயால்
வாடுவதில் சாதல்நன்று; வாய்த்திட்டால்—சாடுவதில்
கொல்லல்நன்று; நின்புகழைக் கூறார்வாய் பேசாமை
நல்லதுவாம்; பன்னிருகண் ணா!

—நீதிபோதவெண்பா 72

53. பலகூடினும் ஒன்றற்கு ஈடாகாதவை

தாரகைகள் ஒருகோடி வானத் திருக்கினுஞ்
சந்திரற் கீடாகுமோ?
தாருவிற் கொடிதொனிகள் பலகூடி னாலுமொரு
தம்பட்ட ஓசையாமோ?

கோரமிகு பன்றியின் குட்டிபல கூடினொரு
குஞ்சரக் கன்றாகுமோ?
கொட்டிமலர் வாவியிற் பலகூடி னாலுமொரு
கோகனக மலராகுமோ?

பாரமிகு மகமலைகள் பலகூடி னாலுமொரு
பைம்பொன்மக மேருவாமோ?
பலனிலாப் பிள்ளைகள் அனேகம் பிறந்தும்விற்
பனனொருவ னுக்குநிகரோ?

வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொன்றில்
வடிவே லணிந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை:

ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார்;
பாயிருள் நீக்கும் மதியம்போல் பன்மீனும்
காய்கலா வாகும் நிலா.

—பழமொழி நானூறு 47

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனா லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கன் றோது.

—நீதிவெண்பா 54

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்கினும்நூல்
வல்லா னொருவனையே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ விளம்பு.

—நீதிவெண்பா 98

குலத்தையிங்(கு) ஆத ரிக்கக்
குணமக வொன்றே போதும்
நலத்தையிங் கிதத்தைச் சற்றும்
நண்ணிடாச் சேய்கள் நூறு
பெலத்துடன் இருக்கின் என்னாம்
பெருக்கிடும் அநேக மீன்விண்
தலத்திடை இருக்கின் என்னாம்
விளங்குதல் மதிதா னொன்றே.

—நீதிசாரம் 11

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலுங்
குலமுழுது நன்மை யுண்டாம்
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறுபெற்று மாவ துண்டோ
மன்றினடம் புரிவாரே தண்டலையா
ரேசொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல ஈன்றுமென்ன குஞ்சரமொன்
றீன்றதனாற் பயனுண் டாமே.

--தண்டலையார் சதகம் 7

வெஞ்சரக் குப்பை தொடுத்தெய்ய வேவெற்றி
ராகவன்கைச்
செஞ்சரத் துக்கிணை யாமென்ப ரோவிட்ட
தீனிதின்று
சஞ்சரிக் கும்பன்றிக் குட்டிக டாமதத்
தாரைபொங்கும்
குஞ்சரக் கன்றுக்கொவ் வாவச்சு தாநந்த
கோவிந்தனே.

—கோவிந்த சதகம் 87

ஊர்க்கண்ட பாலரைப் பெற்றதனால், பயனொன்
றுமில்லை;
பார்க்கண்டலைப் பன்றி குட்டியிட்டே நொந்த
பான்மைகண்டாய்;
கார்க்கண்டன் அன்று மிருகண்டனுக்குக் கருணை
செய்த
மார்க்கண் டன்போற் பெறவேண்டும், குறுங்கை
மலைநம்பியே!

—நம்பி சதகம் 26

செகமீதில் மூடர் ஒருகோடி கூடினும், சீர்த்தகல்வி
மிகமேவு மோர்புலவோருக் கொவ்வார்; மின்மினி
அனந்தம்
தொகவா தவனுக் கிணையோ;கல் மாமலை
சூழ்ந்திருந்தும்
மகமேரு வுக்குச் சமமோ, குறுங்கை மலைநம்பியே?

—நம்பி சதகம் 52

54. அருமையறிதல்

மணமாலை யருமையைப் புனைபவர்க ளேயறிவர்
 மட்டிக் குரங்கறியுமோ?
மக்களுடை யருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
 மலடிதா னறிவதுண்டோ?

கணவருடை யருமையைக் கற்பான மாதறிவள்
 கணிகையா னவள்அறிவளோ?
கருதுமொரு சந்தியின் பாண்டமென் பதைவருங்
 களவான நாயறியுமோ?

குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர்
 கொடியபூ னையும்அறியுமோ?
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
 கொடுமூடர் தாமறிவரோ?

மணவாளன் நீயென்று குறவள்ளி பின்தொடர
 வனமூடு தழுவுமழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரேசனே!

ஒப்புமை :

மற்கடந் தன்கை மாலை
 தான்படும் வண்ணம் போலும்.

—*நீதி சாரம் 19*

கோத்தமணி மாலையை மங்கையர்க ளல்லாற்
 குரங்குகண் டாலறியு மோ?

—*திருவேங்கட சதகம் 30*

குரங்கினது கையினறும் பூமாலை
 தனைகொடுத்த கொள்கை தானே!

—*தண்டலையார் சதகம் 61*

கற்றோர் கனமறிவர் கற்றோரே கற்றறியா
மற்றோர் அறியார் வருத்தமுறப்—பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெருந்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல்.

—**நீதி வெண்பா** *15*

விஞ்சையர் அருமை தன்னை
விஞ்சையர் அறிய வேண்டும்
புன்செயல் அறிவில் ஈனர்
புகழ்ந்ததை அறியார் என்போல்
விஞ்சிய மகப்பே றான
வேதனை மலடி தானும்
கிஞ்சிதம் அறியாள் போல
இருந்திடுங் கேள்வி தானே.

—***நீதிசாரம் 21***

55. தீச்சார்பாற் பயன்படாதவை

மடுவினில் கஞ்சமலர் உண்டொருவர் அணுகாமல்
வன்முதலை அங்கிருக்கும்
மலையினில் தேனுண்டு சென்றொருவர் கிட்டாமல்
மருவியதில் வண்டிருக்கும்

நெடுமைதிகழ் தாழைமலர் உண்டொருவர் அணுகாமல்
நீங்காத முள்ளிருக்கும்
நீடுபல சந்தன விருக்ஷமுண் டணுகாது
நீளரவு சூழ்ந்திருக்கும்

குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்கள் அங்கிருக்கும்
கொடுக்குந் தியாகியுண் டிடையூறு பேசுங்
கொடும்பாவி யுண்டுகண்டாய்

வடுவையும் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற
வள்ளிக் குகந்தகணவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஓப்புமை :

சந்தன மரங்களைச் சலச வாவியைப்
பந்திகொள் தாழையைப் பாம்பு வெங்கரா
நந்துமுள் சூழ்வபோல் நாட்டு வேந்தரைத்
தொந்தமாய் விடாமலே துட்டர் சூழ்வரே.

—பஞ்சதந்திரச்செய்யுள்
மித்திரபேதம் 142

தாமுங்கொ டார்கொடுப்போர் தம்மையும்ஈ யாதவகை
சேமஞ்செய் வாருஞ் சிலருண்டே—ஏமநிழல்
இட்டுமலர் காய்கனிகள் ஈந்துதவும் நன்மரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண்.

— நீதிவெண்பா 59

56. வேசையர் இழிவு

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
புனைமலர் படுக்கைவீடு
பொன்வாசல் கட்டில்பொது வம்பலம் உடுத்ததுகில்
பொருவில்சூ தாடுசாலை

மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்து
விழிமனங் கவர்தூண்டிலாம்
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு
மின்னல்இரு தொடைசர்ப்பமாம்

ஆவலா கியவல்கு லோதண்டம் வாங்குமிடம்
அதிகபட மாம்மனதுகல்
அமிர்தவா யிதழ்சித்ர சாலையெச் சிற்குழி
அவர்க்காசை வைக்கலாமோ

மாவடிவு கொண்டே யொளித்தவொரு சூரனை
வதைத்தவடி வேலாயுதா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

விலைமாதர் வீடுசவு ளிக்கடை படுக்கையது
மேவுமனை பொதுவம்பலம்
மெத்தையது சந்தியிற் பாறையவ ரங்கமோ
மேவிய படித்துறையதாம்

கலைமருவும் அவரல்குல் ஓடமாம் இருகொங்கை
கடையிலெலு மிச்சம்பழம்
கனிவாய் படிக்கம்இரு துடைகள்தண் ணீர்ப்பந்தல்
கட்டுகத லிக்கம்பமாம்

முலைமார்பு வாடகைக் குதிரைஇடை ஏணிஅவர்
மோகமெனில் எட்டிக்கனி
மொழிமுயற் கொம்புசே ரின்புவெந் நீராமை
முறைமையிவை கண்டிருந்தும்

மலைவுபெறு வார்கள்ரச வாதிக்கு நேயனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே!

—திருவேங்கட சதகம் 85

57. கலிகாலக் கொடுமை

தாய்புத்தி சொன்னால் மறுத்திடுங் காலம்உயர்
தந்தையைச் சீறுகாலம்
சற்குருவை நிந்தைசெய் காலம்மெய்க் கடவுளைச்
சற்றுமெண் ணாதகாலம்

பேய்தெய்வ மென்றுபச ரித்திடுங் காலம்
புரட்டருக் கேற்றகாலம்
பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலம்நல்
பெரியர்சொல் கொளாதகாலம்

தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலம்மிகு
சிறியவன் பெருகுகாலம்
செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம்வசை
செப்புவோர்க் குதவுகாலம்

வாய்மதம் பேசிவிடும் அநியாய காரர்க்கு
வாய்த்தகலி காலமையா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

58. அவரவர்க்கு உரியவை

கல்வியொடு கனமுறச் சபையின்மேல் வட்டமாக்
காணவைப் போன்பிதாவாம்
கற்றுணர்ந் தேதனது புகழாற் பிதாவைப்ர
காசஞ்செய் வோன்புத்திரன்

செல்வமிகு கணவனே தெய்வமென் றனுதினம்
சிந்தைசெய் பவள்மனைவியாம்
சிநேகிதன் போலவே அன்புவைத் துண்மைமொழி
செப்புமவ னேசோதரன்

தொல்வளமி குந்தநூற் கரைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவ னேகுரவனாம்
சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு
துய்யனே இனியசீஷன்

வல்விரக மிஞ்சுசூர குஞ்சரி யுடன்குறவர்
வஞ்சியை மணந்தகணவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். 67
மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனுஞ் சொல்.

—திருக்குறள் 70

காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாம்
கணவனே மிக்கதெய்வம்.

—குமரேச சதகம் 8

தங்கள்நா யகரினில் தெய்வம்வே றிலையெனச்
சந்ததம் நினைந்து

—கயிலாசநாதர் சதகம் 49

நாரியர் தமக்கு நாதன் தெய்வமாம்

—திருவேங்கட சதகம் 24

—o—

59. சிறுமையிற் பெருமை

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும்
திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக்கும்

போற்றியிடு பூச்சியின் வாயினூல் பட்டென்று
பூசைக்கு நேசமாகும்
புகலரிப வண்டெச்சி லானதேன் தேவர்கொள்
புனிதவபி டேகமாகும்

சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு கனைவர்க்குமாம்
சாதியீ னத்திற் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின்மேல் வட்டமன்றோ

மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞானமுதலே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோர் ஆயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

—நாலடியார் 133

கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும்: மான்வயிற்று
ஒள்ளரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்ஆள் பிறக்கும் குடி?

—நான்மணிக்கடிகை 4

தாமரைபொன் முத்து சமரங்கோ ரோசினைபால்
பூமருதேன் பட்டு புனுகுசவ்வா—தாமழல்மற்(று)
எங்கே பிறந்தாலும் எள்ளாரே! நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்.

—நீதிவெண்பா 1

உன்னடியார் தாழ்குலத்தா ரேனுமுயர்ந் தோராவர்
மின்னுமுத் துக்கவரி, வெண்பட்டுத்,—துன்னுமலர்ப்
பங்கயம்,கோ ரோசனை,ச பாது, புழுகிவைகள்
எங்குப் பிறந்தாலும் என்?

—நீதிபாதவெண்பா 49

60. செய்யத் தகாதவை

தானா சரித்துவரு தெய்வமிது வென்றுபொய்ச்
சத்தியம் செயில்விடாது
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தாலதுசுடும்

ஆனாலு மேலவர்கள் மெத்தவுந் தனதென்
றடாதது செயிற்கெடுதியாம்
ஆனைதான் மெத்தப் பழக்கமா னாலுஞ்செ
யாதுசெய் தாற்கொன்றிடும்

தீனான தினிதென்று மீதூண் விரும்பினால்
தேகபீ டைகளேதரும்
செகராசர் சனுவென்ன ஏலாத காரியம்
செய்தால் மனம்பொறார்காண்

வானாடு புகழுமொரு சோணாடு தழையவிவண்
வந்தவ தரித்தமுதலே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

'மீதூண் விரும்பேல்

—ஔவையாரின் ஆத்திசூடி 90

'தன்வீட்டு விளக்கென்று முத்தமிடுவார் உண்டோ
தகுதி அல்லவே அது'

—'ஆரணிய காண்டம்'—திபதை 4
இராமநாடகக் கீர்த்தனை

61. நடுவு நிலைமை

வந்தவிவ காரத்தில் இனியபரி தானங்கள்
வருமென்றும் நேசரென்றும்
வன்பகைரு ரென்றும்அய லோரென்றும் மிக்கதன
வானென்றும் ஏழையென்றும்

இந்தவகை யைக்குறித் தொருபக்ஷ பாதமோர்
எள்ளள வுரைத்திடாமல்
எண்ணமுட னேலிகித புத்தியொடு சாக்ஷிக்கும்
ஏற்கச் சபாசமதமாம்

முந்தவிரு தலையுஞ் சமன்செய்த கோல்போல்
மொழிந்திடில் தர்மமதுகாண்
முனைவீம னுடல்பாதி மிருகந் தனக்கென்று
முன்தருமர் சொன்னதலவோ

மைந்தனென அன்றுமை முலைப்பால் கொடுத்திட
வளர்ந்தருள் குழந்தைவடிவே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

—திருக்குறள் *118*

ஆளைப்போல் வருமிருகந் தனக்கும்
வீமனுக்கும் வழக்கான நியாயம்
ஏழைக்கா தரவுதருமர் வீமனுடல்
பாதிமிரு கத்துக் கென்றார்

வேழப்போர் வையைத்தரித்த செயங்கொண்டா
ரேசீனி வெல்லம் போட்டு
நாழிப்பால் வார்த்தாலும் நடுச்சொல்வா
ரறிவுடைய நியாயத் தாரே.

—*செயங்கொண்டார் வழக்கம் 18*

வீமனுட லிற்பாதி மெய்வழக்கிற் றேய்ந்தபுரு
டாமிருகத் தின்பங்கென் றார்தருமர்—ஆமவர்போற்
பூமியெலாங் கொண்டாடும் பொய்யாத புன்னைவன
மேமொ ழிவதறமொ ழி.

—**ஆத்திசூடி வெண்பா**

62. பட்சபாதத்தால் வருபயன்

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த்
துரைப்போர் மலைக்குரங்கே
உயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடு மவரில்லம்
உறையுமூர் பாழ்நத்தமாம்

தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலை போலுகும்
சமானமா எழுபிறப்பும்
சந்ததியி லாதுழல்வர் அவர்முகத் தினில்மூத்த
தையலே குடியிருப்பாள்

பாரமிவ ரென்றுபுவி மங்கையும் நடுங்குவள்
பழித்ததுர் மரணமாவார்
பகர்முடிவி லேரவுர வாதிநர கத்தனு
பவிப்பரெப் போதுமென்பார்

வாரமுடன் அருணகிரி நாதருக் கனுபூதி
வைத்தெழுதி யருள்குருபரா !
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

ஓரஞ் சொல்லேல்

—ஆத்திசூடி 108

மண்ணி னின்று மண்ணோரஞ் சொல்ல வேண்டாம்

—உலகநீதி 9 : 1

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை.

—நல்வழி 23

63. ஒன்றில்லாமையாற் சிறவாதவை

கொங்கையில் லாதவட் கெத்தனை பணியுடைமை
    கூடினும் பெண்மையில்லை
  கூறுநிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை
    கூறினும் புலமையில்லை

சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந்
    தரிக்கினுங் கனதையில்லை
  சட்சுவை பதார்த்தவகை யுற்றாலும் நெய்யிலாச்
    சாதமும் திருத்தியில்லை

பங்கயமி லாமலெத் தனைமலர்கள் வாவியிற்
    பாரித்தும் மேன்மையில்லை
  பத்தியில் லாமல்வெகு நியமமா யர்ச்சனைகள்
    பண்ணினும் பூசையில்லை

மங்கைய ரிலாமனைக் கெத்தனை யருஞ்செல்வம்
    வரினுமில் வாழ்க்கையில்லை
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
    மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

பாழே
மடக்கொடி யில்லா மனை.

—நல்வழி 24

பணமற்ற மானிடர் வாழ்வும், நதியற்ற பட்டணமும்,
குணமற்ற நாரியும், நெய்யற்ற உண்டியும், கூடவொரு
துணையற்ற மெய்யும், மனதற்றுச் செய்யுந்
தொழிலெவையும்,
மணமற்ற பூவென்ன லாமே, குறுங்கை மலைநம்பியே.

—நம்பி சதகம் 72

64. அளவுபடாதவை

வாரியா ழத்தையும் புனலெறியும் அலைகளையும்
மானிடர்கள் சனனத்தையும்
மன்னவர்கள் நினைவையும் புருஷர்யோ கங்களையும்
வானினுயர் நீளத்தையும்

பாரிலெழு மணலையும் பலப்ரா ணிகளையும்
படியாண்ட மன்னவரையும்
பருப்பதத் தின்னிறையும் ஈசுரச் செயலையும்
பனிமாரி பொழிதுளியையும்

சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையும்
சித்தர்தம துள்ளத்தையும்
தெரிவையர்கள் சிந்தையையும் இவ்வள வெனும்படி
தெரிந்தள விடக்கூடுமோ

வாரிச மடந்தைகுடி கொண்டநெடு மாலுக்கு
மருகனென வந்தமுருகா !
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

பொங்குநதி மணலுமா காயத்தி னெல்லையும்
பொழியமழை யின்றிவலையும்
புடவிமிசை வருசனமு மடவிமிசை வளர்மரமும்
பொருப்பின்மிசை யுற்றசிலையும்

திங்களுட னுற்றதா ரகைகணமு முன்பாத
சேவைசெய் வோர்பெருமையுந்
தெரிவையர்கள் மனமுமுனை நினையாத பலமூடர்
சென்மமும் கடலாழமும்

அங்கசன் கணைபுரியு மோகமுங் கவிராசர்
அருள்பெற்ற புத்திநலமும்
அளவுகண் டாலுமோ மனிதருறும் ஆசைதனை
அளவிடக் கூடாதுகாண்

மங்கைமிதி லாபுரி மடந்தைமகிழ் நேசனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே.

—திருவேங்கட சதகம் 21

பரவையை அளவிட் டாலும்,
பாரெலாம் அளவிட் டாலும்,
வரைமுழு தளவிட் டாலும்,
மாதர்நெஞ் சளவிட் டாலும்,
இரைதனைக் கருதித் தன்பால்
எய்தினர் தம்மைக் கொல்லும்
அரசன்நெஞ் சொருவ ராலும்
அளவிட முடியாது.

—பஞ்சதந்திரப்பாடல்-மித்திர பேதம் 134

65. பிறர்மனை நயப்பார்க்கு உறுபயன்

தந்தார மன்றியே பரதார மேல்நினைவு
தனைவைத்த காமுகர்க்குத்
தயையில்லை நிசமில்லை வெட்கமிலை சமரினில்
தைரியஞ் சற்றுமில்லை

அந்தார மில்லைதொடர் முறையில்லை நிலையில்லை
அறிவில்லை மரபுமில்லை
அறமில்லை நிதியில்லை இரவினிற் றனிவழிக்
கச்சமோ மனதிலில்லை

நந்தாத சனமில்லை இனமில்லை எவருக்கும்
நட்பில்லை கனதையில்லை
நயமில்லை இளமைதனில் வலிமையிலை முத்திபெறு
ஞானமிலை யென்பர்கண்டாய்

மந்தார பரிமள சுகந்தாதி புனையுமணி
மார்பனே அருளாளனே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

66. மானம் விடாமை

கனபாரம் ஏறிற் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந்திடாது
கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரளவிலே
கனசூரன் அமரில்முறியான்

தினமோர் இடுக்கண்வந் துற்றாலும் வேங்கைதோல்
சீவனள விற்கொடாது
திறமான பெரியோர் சரீரங்கள் போகினும்
செப்புமுறை தவறிடார்கள்

வனமேறு கவரிமா உயிர்போகும் அளவுந்தன்
மயிரினொன் றுங்கொடாது
வாராத ஆபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறிநடவாள்

மனதார உனதடைக் கலமென்ற கீரற்கு
வண்சிறை தவிர்த்தமுருகா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

—திருக்குறள் 969

உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

—மூதுரை 6

புலியுயிர் போகு மட்டும் பொருந்திய வதனை ஈயா !
வலியுறு வீரன் தானும் மரிப்பனன்றிப் புறம்வ ழங்கான்;
பொலிவுறு கற்பள் ஆவி பொன்றிடத் தனங்கள் ஈயான்
நலிவுறு லோப சீவன் ஒழிவின்றி ஒன்றும் நல்கான்.

—நீதிசாரம் 27

தன்னுயிர்போங் காறுமற்றோர் தன்தனந்தீண் டக்கொடாள்
மின்னாள், நகங்கொடா வெல்வேங்கை,— துன்னுமயிர்
ஈயாது மான்,மற் றெவர்க்கும்வென்கொ டான்வீரன்
காயாமே னிக்குமரு கா !

—நீதிபோதவெண்பா 31

67. திருவருட் சிறப்பு

திருமகள் கடாக்ஷமுண் டானால் எவர்க்கும்
சிறப்புண்டு கனதையுண்டு
சென்றவழி யெல்லாம் பெரும்பாதை யாய்விடும்
செல்லாத வார்த்தைசெல்லும்

பொருளொரு துரும்புமரி யாதையாம் செல்வமோ
புகல்பெருக் காறுபோலாம்
புவியில்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர்
போலவே நேசமாவர்

பெருமையொடு சாதியி லுயர்ச்சிதரும் அனுதினம்
பேரும்ப்ர திஷ்டையுண்டாம்
பிரியமொடு பகையாளி கூடஉற வாகுவான்
பேச்சினிற் பிழைவராது

வருமென நினைத்தபொருள் கைகூடி வரும்அதிக
வல்லமைகள் மிகவுமுண்டாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

यत्कटाक्ष-समुपासना-विधिः
सेवकस्य सकलार्थ-संपदः ।

தாயே, (இலக்குமியே) உனது கடைக்கண் பார்வையைத் தியானம் செய்வதால், ஒருவன் எல்லாச் செல்வங்களையும் பெறுகிறான்.

—ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்திரம் 18

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம்—திருமடந்தை
ஆம்போ(து) அவளோடும் ஆகும்.

—மூதுரை 29

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வரும்திருவும் வாழ்நாளும் வஞ்சம்இல் லார்க்கென்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான்.

—நல்வழி 21

68. நட்பு நிலை

கதிரவன் உதிப்பதெங் கேநளின மெங்கே
களித்துளம் மலர்ந்ததென்ன
கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே
கருத்தில்நட் பானதென்ன

மதியமெங் கேபெருங் குமுதமெங் கேமுகம்
மலர்ந்துமகிழ் கொண்டதென்ன
வல்லிரவு விடிவதெங் கேகோழி யெங்கே
மகிழ்ந்துகூ விடுதலென்ன

நிதியரச ரெங்கே யிருந்தாலும் அவர்களொடு
நேசமொன் றாயிருக்கும்
நீதிமிகு நல்லோர்கள் எங்கிருந் தாலுமவர்
நிறைபக்ஷ மறவார்கள்காண்

மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணாட்டதிபனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை:

மங்கு லம்பதி னாயிரம்
யோசனை மயில்கண்டு நடமாடும்
தங்கும் ஆதவன் நூறாயிரம்
யோசனை தாமரை முகம்விள்ளும்
திங்க ளாதவற் கிரட்டியோ
சனைபுறச் சிறந்திடும் அரக்காம்பல்
எங்க ணாயினும் அன்பராய்
இருப்பவர் இதயம்விட் டகலாரே.

—விவேகசிந்தாமணி 56

69. காலம் அறிதல்

காகம் பகற்காலம் வென்றிடும் கூகையைக்
கனகமுடி யரசர்தாமும்
கருதுசய காலமது கண்டந்த வேளையில்
காரிய முடித்துவிடுவார்

மேகமும் கார்கால மதுகண்டு பயிர்விளைய
மேன்மேலும் மாரிபொழியும்
மிக்கான அறிவுளோர் வருதருண காலத்தில்
மிடியாள ருக்குதவுவார்

நாகரிக முறுகுயில் வசந்தகா லத்திலே
நலமென் றுகந்துகூவும்
நல்லோர் குறித்ததைப் புதறாம லந்தந்த
நாளையில் முடிப்பர்கண்டாய்

வாகினிய காலைகல் மாலைபுல் லெனுமுலக
வாடிக்கை நிசமல்லவோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

—திருக்குறள் 481

70. இடம் அறிதல்

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ
சலதிமிசை யோடுகப்பல்
தரைமிதி லோடுயோ தண்ணீரி லுறுமுதலை
தன்முனே கரிநிற்குமோ

விரைமலர் முடிப்பரமர் வேணியர வினைவெல்ல
மிகுகருட னர்லாகுமோ
வேங்கைகள் இருக்கின்ற காடுதனில் அஞ்சாமல்
வேறொருவர் செல்லவசமோ

துரைகளைப் பெரியோரை அண்டிவாழ் வோர்தமைத்
துஷ்டர்பகை யென்னசெய்யும்
துணைகண்டு 'சேரிடம் அறிந்துசேர்'* என்றவ்வை
சொன்னமொழி பொய்யல்லவே

வரையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள்
வன்போர் செயித்ததன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 495

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. 496

காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு.

—திருக்குறள் 500

---

* 'சேரிடம் அறிந்துசேர்' — ஆத்திசூடி 50

ஆம்பிள்ளா யெனக்கொடுக்கும் பெரியோரை
　　யடுத்தவரை யவனிக் கெல்லாம்
நாம்பிள்ளாய் அதிகமென்பார் நண்ணாரும்
　　ஏவல்செய நாளும் வாழ்வார்
வான்பிள்ளாய் எனும்மேனித் தண்டலையார்
　　பூஷணமாய் வளர்த்த நாகம்
ஏன்பிள்ளாய் கருடாநீ சுகமோவென்
　　றுரைத்தவித மென்ன லாமே.

--தண்டலையார் சதகம் 44

கடலின்மேல் ஓடும் கப்பல்
　　கரையின்மேல் ஓட்டல் ஆகா;
புடவிமேல் ஓடும் தேரைப்
　　புணரிமேல் ஓட்டல் ஆகா;
திடமுடன் கூடா தென்றும்
　　சேர்வதும் இல்லை; சேர்ந்தால்
கெடுவதே உறுதி அல்லால்
　　தேண்மையா தொன்றும் இல்லை.

பஞ்சதந்திரச் செய்யுள்
சுகிர்லாபம் 59

யானையைச் சலந்தனில் இழுத்த அக்கரா
பூனையைக் கரைதனிற் பிடிக்கப் போகுமோ
தானையுந் தலைவரும் தலம்விட் டேகினால்
சேனையுஞ் செல்வமுந் தியங்கு வார்களே.

—விவேகசிந்தாமணி 52

பாவுகல மேற்சகடம் பண்டியின்மேல் அந்நாவாய்
மேவுதலும் உண்டிதனை விள்ளுங்கால்—வீவில்
கலையார்ந்த நன்மதியே கைத்துடைமை யின்மை
நிலையாவென் றின்றே நினை.

—நன்மதி வெண்பா 24
(சுமதி சதகம் எனும் தெலுங்கு
நீதி நூலின் தமிழாக்க நூல்)

நீடிலோன நோடநிகடி தின்னகப்பிராகு
பைடமு ரடைனப் பிராகலேது
நெலவுதப்பு சோடநேர் பரிகொரகாடு
விஸ்வதாபிராம வினரவேமா.

தண்ணீரில் ஓடம் நன்றாக நகரும். ஆனால் அதே ஓடம் நிலத்தில் ஒரு அடி கூட நகராது. அதேபோல் ஒரு மனிதன் எவ்வளவு சாமர்த்தியசாலியாயிருந்தாலும் இடம் தப்பும்போது அவனது சாமர்த்தியம் ஒன்றும் பயன்படாது.

நீள்ளலோனிமுஸலி நிகுடியேனுக தீசு
பைட்டகுக்க சேதபங்க படுனு
ஸ்தானபல்மிகானி தனபல்மி கர்தயா
விஸ்வதா பிராம வினர வேமா

தண்ணீருக்குள் வசிக்கும் முதலையானது தன்னருகில் வந்த யானையைப் பிடித்து உள்ளுக்கிழுத்துப் போகும். அப்படிப்பட்ட முதலை தண்ணீரைவிட்டு வெளியில்வந்த நாயினிடம் அகப்பட்டுப்பங்கம்படும். இதற்குக் காரணம் ஸ்தானத்தின் வல்லமையேயன்றி அவரவர்கள் வல்லமை யல்ல.

—வேமன்ன பத்தியம் 16, 154

71. யாக்கை நிலையாமை

மனுநன்மாந் தாதாமுன் ஆனவர்கள் எல்லாரும்
மண்மே லிருந்துவாழ்ந்து
மடியா திருந்தபே ரில்லையவர் தேடியதை
வாரிவைத் தவருமில்லை

பனியதனை நம்பியே ஏர்பூட்டு கதையெனப்
பாழான உடலைநம்பிப்
பார்மீதி லின்னம்வெகு நாளிருப் போமென்று
பல்கோடி நினைவையெண்ணி

அனிதமாய் விருதாவில் மாய்வதே யல்லாமல்
அன்பாக நின்பதத்தை
அர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணார்கள்
ஆசைவலை யிற்சுழலுவார்

வனிதையர்கள் காம விகாரமே பகையாகும்
மற்றுமொரு பகைமையுண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

—*திருக்குறள் 337*

72. வேட்டகத்து இகழ்ச்சி

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவில்
மேன்மேலும் உபசரித்து
விருந்துகள் சமைத்துநெய் பால்தயிர் பதார்த்தவகை
வேண்டுவ வெலாம்அமைப்பார்

ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் தைலமிட்
டுறுதியாய் முழுகுவிப்பார்
ஓயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவர்
உற்றநாள் நாலாகிலோ

நாட்டமொரு படியிறங் குவதுபோல் மரியாதை
நாளுக்கு நாள்குறைவுறும்
நகைசெய்வர் மைத்துனர்கள் அலுவல்பார் போவென்று
நாணாமல் மாமிசொல்வாள்

வாட்டமனை யாளொரு துரும்பாய் மதிப்பளவன்
மட்டியினும் மட்டியுன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

காரிகை தனைத்தந்த மாமனார் மனைதனிற்
கருணைமரு மகன்வந்திடிற்
கண்டவுட னாசார உபசார மாகவே
கனவிருந் துகள்சமைப்பார்

சேருநாள் மூன்றாகில் அபரபட் சத்திற்
செனித்தசந்த் ரோதயம்போல்
தினந்தினம் பெருமைகுறை யுங்காரி யங்களுந்
செய்யன்ப ரத்தைமுதலோர்

123

ஆருமெண் ணார்கள்மைத் துனர்சரச பரிகாசம்
அதிகமாம் மனைவியெனிலோ
அன்புடன் சொன்னபடி கேளாளி தாகையா
லாதியொரு கதையல்லவோ

வாருமென் றவரேக வசனமுஞ் சொல்வர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே.

—திருவேங்கட சதகம் 78

73. செல்வம் நிலையாமை

ஓடமிடும் இடமது மணற்சுடும் சுடுமிடமும்
ஓடமிக வேநடக்கும்
உற்றதோ ராற்றின்மடு மேடாகும் மேடெலாம்
உறுபுனல்கொள் மடுவாயிடும்

நாடுகா டாகும்உயர் காடுநா டாகிவிடும்
நவில்சகடு மேல்கீழதாய்
நடையுறும் சந்தைபல கூடும்உட னேகலையும்
நன்னிலவும் இருளாய்விடும்

நீடுபகல் போயபின் பிரவாகும் இரவுபோய்
நிறைபகற் போதாய்விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வுகண் டாய்

மாடுமனை பாரிசனம் மக்கள்நிதி பூஷணமும்
மருவுகன வாகுமன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

ஆறிடு மேடும் மடுவும்போ லாஞ்செல்வம்

—நல்வழி 32

வெற்றி வந்தாற், பின்பு தோல்வியும் எய்தும்; மிகுந்த செல்வம்
பெற்றிடில், சூழும் பிறகே வறுமை; பெருகுகலை
பற்றிய திங்கள் குறையும்: நதிவெள்ளம் பாய்ந்துடனே
வற்றும்; பகல்சென் றிராவாம், குறுங்கை மலைநம்பியே.

—நம்பி சதகம் 13

74. பிறந்தார் பெறும்பேறு

சடமொன் றெடுத்தாற் புவிக்குநல் லவனென்று
தன்பேர் விளங்கவேண்டும்
சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்றவ
தரிக்கவே வேண்டுமல்லால்

திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
திசைமெச்ச வேண்டும்அல்லால்
தேகியென வருபவர்க் கில்லையென் னாமலே
செய்யவே வேண்டும்அல்லால்

அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவான்
ஆகவே வேண்டும்அல்லால்
அறிவான துரைமக்க ளாகவே வேண்டுமிவர்
அதிகபூ பாலராவார்

வடகுவடு கிடுகிடென எழுகடலும் அலையெறிய
மணியுரகன் முடிகள்நெரிய
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராதல் அரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

ஔவையார் பாடல் — தனிப்பாடற்றிரட்டு

75. வேசை நிந்தை

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடில்
        தேகசீ வன்போலவே
    சினேகித்த உம்மையொரு பொழுதுகா ணாவிடிற்
        செல்லுறா தன்னமென்றே

கூடிச் சுகிப்பர்என் னாசையுன் மேலென்று
        கூசாம லாணையிடுவர்
    கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்திதழ்
        கொடுப்பர்சும் பனமுகப்பர்

வேடிக்கை பேசியே கைமுதல் பறித்தபின்
        வேறுபட நிந்தைசெய்து
    விடவிடப் பேசுவார் தாய்கலக மூட்டியே
        விட்டுத் துரத்திவிடுவர்

வாடிக்கை யாயிந்த வண்டப் பரத்தையர்
        மயக்கத்தை நம்பலாமோ
    மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
        மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

புருடனைக் கண்டவுட னேகத விடுக்கினிற்
        போயொளித் திடுவர்பின்பு
    பொல்லாத தாய்க்கிழவி தன்னையவர் பாலினிற்
        போக்கிவச னிக்கவிடுவார்

மருடருங் கண்ணினார் சற்றருகி லேவந்து
        மயல்விளைத் துறவுசெய்வார்
    மன்னநின் னடிகளிச் சிறுகுடிலில் வைத்ததெம்
        மாதவம் எனச்சொல்லுவார்

அருள்நிறைந் தவர்போல இருகையி னாற்றழுவி
    ஆவலொடு முத்தமிடுவார்
  ஐயநீ பிரியலெம துயிர்பிரியும் என்றவர்கள்
    ஆவிமுழு தும்பறிப்பார்

ருமையணி வேசையர்கள் முறைமையிது காணென்பர்
    கற்பக விராசமேவுங்
  கங்கைபுனை ஈசனே மங்கைமகிழ் நேசனே
    யிலையங் கிரிவாசனே.

—கயிலாசநாதர் சதகம் 50

76. இதற்கு இது உறுதியெனல்

கைக்குறுதி வேல்வில் மனைக்குறுதி மனையாள்
கவிக்குறுதி பொருளடக்கம்
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி
கண்டிடிற் சத்யவசனம்

மெய்க்குறுதி முன்பின் சபைக்குறுதி வித்வசனம்
வேசையர்க் குறுதிதேடல்
விரகருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதியூண்
வீரருக் குறுதிதீரம்

செய்க்குறுதி நீரரும் போர்க்குறுதி செங்கோல்
செழும்படைக் குறுதிவேழம்
செல்வந் தனக்குறுதி பிள்ளைகள் நகர்க்குறுதி
சேர்ந்திடுஞ் சர்ச்சனர்களே

மைக்குறுதி யாகிய விழிக்குற மடந்தைசுர
மங்கைமரு வுந்தலைவனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

77. வறுமையிற் சிறுமை

வறுமைதான் வந்திடில் தாய்பழுது சொல்லுவாள்
மனையாட்டி சற்றுமெண்ணாள்
வாக்கிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத
வசனமாய் வந்துவிளையும்

சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது
சிந்தையில் தைரியமில்லை
செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கமாம்
செல்வரைக் காணில்நாணும்

உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்துவரில்
உயிருடன் செத்தபிணமாம்
உலகம் பழித்திடும் பெருமையோர் முன்புசென்
றொருவரொடு செய்திசொன்னால்

மறுவசன முஞ்சொலார் துன்பினிற் றுன்பமிது
வந்தணுகி டாதருளுவாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

மேலான சாதியில் உதித்தாலும் அதிலென்ன
வெகுவித்தை கற்றும்என்ன
மிக்கஅதி ரூபமொடு சற்குணம் இருந்தென்ன
மிகுமானி யாகியென்ன

பாலான மொழியுடைய னாயென்ன ஆசார
பரனா யிருந்தும்என்ன
பார்மீது வீரமொடு ஞானவா னாயென்ன
பூாக்கியம் இலாதபோது

வாலாய மாய்ப்பெற்ற தாயும் சலித்திடுவள்
வந்தசுற் றமும்இகழுமே
மரியாதை யில்லாமல் அனைவரும் பேசுவார்
மனைவியும் தூறுசொல்வாள்

ஆலாலம் உண்டகனி வாயனே நேயனே
அனகனே அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே.

—அறப்பளீசுர சதகம் 37

துதிக்கின்ற மனைவியுங் குறைசொல்வள் தந்தைதாய்
சோகமுற வசைகூறுவார்
துன்பமொடு மனமெலியு மேனிவேற் றுருவமாந்
தொலையாத கவலைவளரும்

உதிக்கின்ற புத்தியும் மழுங்கிடும் கல்விபோம்
உதரத்தில் அதிகபசியாம்
உறவின்முறை யாருமொரு வார்த்தைசொல் லார்சொன்ன
உத்தரமு மொருவர்கேளார்

விதிக்கின்ற உலகத்தில் எல்லாரும் இகழுவார்
மிடிவந்து சேர்ந்ததென்றால்
மேன்மையே தறிவேது குலமேது நலமேது
வித்தையே தெவரறிவர்காண்

மதிக்கின்ற உன்பதம் போற்றிலவை சேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே.

—திருவேங்கட சதகம் 15

கல்லானே ஆனாலும் கைப்பொருள்ஒன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்;மற்(று) ஈன்றெடுத்த
தாய்வேண்டாள்;
செல்லா(து) அவன்வாயில் சொல்.

—*நல்வழி 34*

தாங்கொணா வறுமை வந்தால்
சபைதனில் செல்ல நாணும்
வேங்கைபோல் வீரங் குன்றும்
விருந்தினர் காண நாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும்
புல்லருக் கிணங்கச் செய்யும்
ஓங்கிய அறிவு குன்றும்
உலகெலாம் பழிக்குந் தானே.

—*விவேகசிந்தாமணி 21*

78. தீச்சார்பால் நன்மை இழப்பு

ஆனைதண் ணீரில்நிழல் பார்த்திடத் தவளைசென்
றங்கே கலக்கியுலவும்
ஆயிரம் பேர்கூடி வீடுகட் டிடில்ஏதம்
அறைகுறளும் உடனேவரும்

ஏனைநற் பெரியோர்கள் போசனஞ் செயுமளவில்
ஈக்கிடந் திசைகேடதாம்
இன்பமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற்
கினியகோன் அதுதடுக்கும்

சேனைமன் னவரென்ன கருமம்நிய மிக்கினும்
சிறியோர்க ளாற்குறைபடும்
சிங்கத்தை யும்பெரிய ருஷபத்தை யும்பகைமை
செய்ததொரு நரியல்லவோ ✱

மானையும் திகழ்தெய்வ யானையும் தழுவுமணி
மார்பனே அருளாளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

பானுகுல ராமனுக்குப் பட்டாபி
ஷேகமெனப் பகர்ந்த போது
கூனியொரு மித்திரத்தைக் கெடுத்துவன
முறையவிட்ட கொள்கை போலே
மானணியுங் கரத்தாரே செயங்கொண்டார்
புவியில் மகிமை சேர்ந்த
ஆனைநிழல் பார்க்கையிலே தவளைவந்து
கலக்கிவிடு மதுமெய் தானே.

—செயங்கொண்டார் வழக்கம்

திறமுளசஞ் சீஷகனைத் தமரகன்கண்
டழைத்துவந்து சிங்கத் திற்கு
நிறையுள்ள மந்திரியாய் வைத்தபின்சிங்
கந்தனக்கும் ரிஷபத் திற்கும்
சறுவபகை யுண்டுபண்ணி விட்டதன்றே
செயங்கொண்டார் தமிழ்சேர் நாட்டில்
உறவுதனைப் போலிருந்து குளவியைப்போல்
கொட்டுவதில் உவமை தானே.

—செயங்கொண்டார் வழக்கம் 49

✳ சிங்கத்தையும் எருதையும் நரி பகைமையுறச் செய்த கதையைப் பஞ்சதந்திரச் செய்யுள், மித்திரப்பேதப் பகுதியில் காண்க.

79. இடையூறு உற்றும் பயன்படுபவை

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலும் ஊற்றுநீர்
அமுதபா னங்கொடுக்கும்
ஆதவனை யொருபாதி கட்செவி மறைத்தாலும்
அப்போதும் உதவிசெய்வன்

கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினும்
குவலயத் திருள்சிதைக்கும்
கொல்லைதான் சாவிபோய் விட்டாலும் அங்குவரு
குருவிக்கு மேய்ச்சலுண்டு

வீறுடன் உதாரிதான் மிடியான போதிலும்
மிகநாடி வருபவர்க்கு
வேறுவகை யில்லையென் றுரையா தியன்றளவு
வியந்துள மகிழ்ந்துதவுவான்

மாறுபடு சூரசங் காரகம் பீரனே
வடிவே லணிந்தபுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

தருவிற் பனமன்னர் கையிளைத்
தாலென்ன தம்மைநம்பி
மருவித் திரியுஞ் சனங்கள்
பசிகொண்டு வாட்டமெய்தார்

பருவக் குறிப்பின் றிச் சாவிபட்
டாலும் பயிர்க்கொல்லையிற்
குருவிக் கிரைபஞ்ச மோவச்சு
தாநந்த கோவிந்தனே.

—கோவிந்த சதகம் 35

சீதமதி யுட்களங்கம் தீர்க்கஅறி யாதுலகின்
மோதிருளை நீக்க முயல்வதுபோல்—கோதகன்ற
நெஞ்சினர்தம் துன்பம் நினையார்; பிறர்துன்பம்
பஞ்சழல்ஒப் பார்,குகஅப் பா!

—நீதிபோதவெண்பா 35

80. ஈது இல்லாதவர்க்கு ஈது இல்லையெனல்

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக் கிலாபமேது
தயையிலா தவர்தமக் குறவேது பணமிலா
தார்க்கேது வேசையுறவு

ஊரிலா தவர்தமக் கரசேது பசிவேளை
உண்டிடார்க் குறுதிநிலையே(து)
உண்மையில் லாதவர்க் கறமேது முயல்விலார்க்(கு)
உறுவதொரு செல்வமேது

சோர்விலா தவர்க்கு மற்றுமொரு பயமேது
சுகமிலார்க் காசையேது
துர்க்குணமி லாதவர்க் கெதிராளி யேதிடர்செய்
துஷ்டர்க் கிரக்கமேது

மார்புருவ வாலிமேல் அஸ்திரம் விடுத்தநெடு
மால்மருக னானமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு :

இப்பாடலின் உத்திக்கு எதிர்நிலையாக 'இதனை யுடையவர்க்கு இது வில்லையெனல்' எனும் தலைப்பில் ஒரு பாடல் அறப்பளீசுர சதகத்தில் (பாடல் எண்: 78) உள்ளது.

81. இதனினும் இது நன்று எனல்

பஞ்சரித் தருமையறி யார்பொருளை எய்தலின்
பலர்மனைப் பிச்சைநன்று
பரிவாக உபசார மில்லா விருந்தினின்
பட்டினி யிருக்கைநன்று

தஞ்சவொரு முயலையடு வென்றிதனின் யானையொடு
சமர்செய்து தோற்றல்நன்று
சரசகுண மில்லாத பெண்களைச் சேர்தலின்
சன்னியா சித்தல்நன்று

அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனின்
அரவினொடு பழகுவதுநன்று
அந்தணர்க் காபத்தில் உதவா திருப்பதனின்
ஆருயிர் விடுத்தல்நன்று

வஞ்சக ருடன்கூடி வாழ்தலின் தனியே
வருந்திடுஞ் சிறுமைநன்று
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவே லேந்தல் இனிது.

—திருக்குறள் 772

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலுங் கூடி இருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பளே யாமாயிற்
கூறாமற் சந்நியாசங் கொள்.

ஔவையார் பாடல் — தனிப்பாடற்றிரட்டு 14

82. நிலையாதவை

கொற்றவர்கள் ராணுவமும் யாறுநே ராகிய
குளங்களும் வேசையுறவும்
குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமும்
குலவுநீர் விளையாடலும்

பற்றலார் தமதிடை வருந்துவிசு வாசமும்
பழையதா யாதிநிணறும்
பரதார மாதரது போகமும் பெருகிவரு
பாங்கான ஆற்றுவரவும்

நத்துமொரு துர்ப்புத்தி கேட்கின்ற பேருறவும்
நல்லமத யானைநட்பும்
நாவிநல் லுறவும்ஒரு நாள்போல் இராஇவைகள்
நம்பப் படாதுகணடாய்

மற்றுமொரு துணையில்லை நீதுணையெ னப்பரவும்
வானவர்கள் சிறைமீட்டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

கன்னியருள் அன்பும் கடுக்கட் செவிநட்பும்
அந்நியவில் லக்கிழத்தி ஆசையும்—துன்னரையன்
நம்ப மனங்கொளலு நன்மதியே யின்னிரத
நிம்பமும்பொய் யென்றே நினை.

—நன்மதி வெண்பா 42
(தெலுங்கு-சுமதி சதகத்தின்
மொழிபெயர்ப்பு நூல்)

83. நற்புலவர் தீப்புலவர் செயல்

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடிநாடும்
மிடைகருங் காகங்கள் எக்கனி யிருந்தாலும்
வேப்பங் கனிக்குநாடும்

எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினில்
இருக்கின்ற தேனைநாடும்
எத்தனை சுகந்தவகை யுற்றாலும் உருள்வண்(டு)
இனந்துர் மலத்தைநாடும்

தக்கோர் பொருட்சுவை நயங்களெங் கேயென்று
தாம்பார்த் துகந்துகொள்வார்
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயென்று
தமிழிலா ராய்வர்கண்டாய்

மைக்காவி விழிமாது தெய்வானை யும்குறவர்
வள்ளியும் தழுவுதலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

இலக்கணக் கவிஞர்சொ லின்பந் தேடுவர்
மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறுங் கமலத்தை நேடும் வண்டதுஈ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்.

—தனிப்பாடற்றிரட்டு,
ஔவையார் பாடல் 31

84. தாழ்தற் பெருமை

வேங்கைகள் பதுங்குதலும் மாமுகில் ஒதுங்குதலும்
விரிசிலை குனிந்திடுதலும்
மேடம தகன்றிடலும் யானைகள் ஒடுங்குதலும்
வெள்விடைகள் துள்ளிவிழலும்

மூங்கில்கள் வணங்குதலும் மேலவர் இணங்குதலும்
முனிவர்கள் நயந்துகொளலும்
முதிர்படை ஒதுங்குதலும் வினைஞர்க ளடங்குதலும்
முதலினர் பயந்திடுதலும்

ஆங்கரவு சாய்குதலும் மகிழ்மலர் உதிர்ந்திடலும்
ஆயர்குழல் சூடுபடலும்
அம்புவியில் இவைகாரி யங்களுக் கல்லாமல்
அதனால் இளைப்புவருமோ

மாங்கனிக் காஅரனை வலமதுபு ரிந்துவளர்
மதகரிக் கிளையமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

வில்லது வளைந்த தென்றும்
வேழம துறங்கிற் றென்றும்
வல்லியம் பதுங்கிற் றென்றும்
வளர்கடா பிந்திற் றென்றும்

புல்லர்தம் சொல்லுக் கஞ்சிப்
பொறுத்தனர் பெரியோ ரென்றும்
நல்லதென் றிருக்க வேண்டாம்
நஞ்செனக் கருத லாமே.

—விவேகசிந்தாமணி *110*

வலிமை யுடையார்பின் வாங்கினுநம் பொண்ணா
புலிபதுங்க லுந்,தகர்ப்பின் போக்கும்,-சிலைவளைவும்,
நாகம்சாய்ந் தாடலுங்,கை நாகம் துயிலலும்பின்
ஆகும்வினைக் கன்றோவே லா!

—நீதிபோதவெண்பா 30

85. தெய்வச் செயல்

சோடாய் மரத்திற் புறவிரண் டிருந்திடத்
துருவுகண் டேவேடுவன்
தோலாமல் அவையெய்ய வேண்டுமென் றொருகணை
தொடுத்துவில் வாங்கிநிற்க

ஊடாடி மேலே பொழும்பிடில் அடிப்பதற்(கு)
உலவுரா சாளிகூட
உயரப் பறந்துகொண் டேதிரிய அப்போது
உதைத்தசிலை வேடனடியில்

சேடாக வல்விடந் தீண்டவே அவன்விழச்
சிலையிற் றொடுத்தவாளி
சென்றிரா சாளிமெய் தைத்துவிழ அவ்விரு
சிறைப்புறா வாழ்ந்தவன்றோ

வாடாமல் இவையெலாம் சிவன்செயல்க ளல்லால்
மனச்செயலி னாலும்வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

கரந்தொருவன் கணைதொடுக்க மேற்பறக்கும்
ராசாளி கருத்துங் கண்டே
உரைந்துசிறு கானகத்தில் உயிர்ப்புறா
பேடுதனக் குரைக்குங் காலை
விரைந்துவிடம் தீண்டஉயிர் விடும்வேடன்
கணையால்வல் லூறும் வீழ்ந்த
தரன்செயலே யாவதல்லாற் றன்செயலால்
ஆவதுண்டோ அறிவுள் ளோரே.

—விவேகசிந்தாமணி 101

86 பாடல் இயல்பு

எழுத்தசைகள் சீர்தளைகள் அடிதொடைகள் சிதையா(து)
இருக்கவே வேண்டும்அப்பால்
ஈரைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
பினியசொற் கமையவேண்டும்

அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொருள்
அடக்கமும் இருக்கவேண்டும்
அன்பான பாவினம் இசைந்துவரல் வேண்டும்முன்
அலங்காரம் உற்றதுறையில்

பழுத்துளம் உவந்தோசை யுற்றுவரல் வேண்டும்
படிக்குமிசை கூடல்வேண்டும்
பாங்காக இன்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர்காண்

மழுத்தினஞ் செங்கைதனில் வைத்தகங் காளனருள்
மைந்தனென வந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

உரைகொண்டு சொல்வரிசை சேர்ந்துபொரு ளின்பவகை
ஓசைபெற் றேமதுரமாய்
உற்றநவ ரசமுடன் கற்பனை அலங்காரம்
உண்டாகி யேகவுடமாய்

நிரைகொண்டு சீர்தளை விகற்பம் பொருந்திநன்
 னீதியாய்க் கடை துடிப்பாய்
 நிறைகின்ற சபைதனில் உதாரணம தாகிநிலை
 நின்றபழு தென்றிடாமல்
திரைகொண்ட தண்கடலில் வருமமுத பாகமாய்த்
 தேசப்ர சித்தியாகச்
 செப்புமொரு கவிகொண்டு குலமெலாம் வந்தடிமை
 செயினுமது நிகராதுகாண்
வரைகொண்டு பொழியுமழை காத்தருளு மையனே
 மணவாள நாராயணன்
 மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
 வரதவேங் கடராயனே.

—திருவேங்கட சதகம் 56

87. விபூதி வாங்கும் முறைமை

பரிதனி லிருந்தும்இயல் சிவிகையி லிருந்தும்உயர்
பலகையி லிருந்தும்மிகவே
பாங்கான அம்பலந் தனிலே யிருந்தும்
பருத்ததிண் ணையிலிருந்தும்

தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேல்நின்று
திருநீறு வாங்கியிடினும்
செங்கையொன் றாலும்விரல் மூன்றாலும் வாங்கினுட
திகழ்தம் பலத்தினோடும்

அரியதொரு பாதையில் நடக்கின்ற போதிலும்
அசுத்தநில மானவதிலும்
அங்கே தரிக்கிலும் தந்திடில் தள்ளினும்
அவர்க்குநர கென்பர்கண்டாய்

வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனை
மணந்துமகிழ் சகநாதனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

88. விபூதி தரிக்கும் முறைமை

பத்தியொடு சிவசிவா என்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத்துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதிலொழுக

நித்தமு விரல்களால் நெற்றியின் அழுந்தலுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினை அணுகாது தேகபரி சுத்தராய்
நீங்காமல் நிமலனங்கே

சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யும்திரு
சஞ்சலம் வராதுபர கதியுதவும் இவரையே
சத்தியும் சிவனும்எனலாம்

மத்தினிய மேருவென வைத்தமு தினைக்கடையும்
மால்மருக னானமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

நித்தலும் வைதீக ராதிமறை யோர்கட்கு
நீர்கொடு குழைக்குநீற்றை
நெற்றியிற் பன்னிரண் டங்குலத் தளவதாய்
நேராய்த் தரித்தல்நெறியாம்

சித்திரமி ழைத்தசிங் காதனத் தரசு புரி
செங்கைவே லரசருக்குத்
திருநீற்றை யொன்பதங் குலநீள மாய்நுதற்
சேர்த்தணித லேவிதியதாம்

சுத்தவை சியருக்கு நாலிரண் டங்குலஞ்
சூத்திரற் கேழங்குலந்
தோகையர் தமக்குநா லங்குலத் தளவெனச்
சொன்னதே மகுடாகமம்

அத்ததே வாங்குலந் திரிசூல வடிவணிதல்
அருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே.

—அண்ணாமலை சதகம் 8

குழைத்திடு விபூதிமுன் றங்குலத் தளவதாக்
கொண்டுதலை மேலிடநலங்
கூறுநெற் றியினிலிரு நான்கங் குலத்தளவு
கோணாது நெல்லெள்ளைவை

தழைத்தளவை யிடைவிட்டுத் திரிசூல வடிவாய்த்
தரித்திடுத றிரிபுண்டரந்
தனிமார்பி லும்புயத் தூறங்கு லம்முந்தி
தன்னிலோ ரங்குலமிடல்

கழைநிகர் புழுங்கையின் மணிக்கட்டி லேநீறு
கனமிலா தேதொட்டிடல்
கழுத்திடுப் பினிலுமூன் றங்குலக் குறியிடல்
கணித்தமகு டாகமவிதி

அழைத்தன்ன முதவுபார்க் கவகோத்தி ரத்தில்வரும்
அருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே.

—அண்ணாமலை சதகம் 43

ஒருகரந் தனைநீட்டி மூன்றுவிர லால்வாங்கி
ஒளிவிரலி னாற்பூமிமேல்
உதிரும் படிக்குநீ றிடுவோ ரகோரநர(கு)
ஒருகோடி கற்பமாழ்வார்

இருகரங் கொடுதொழுது வலதுளங் கையிலேற்(று)
இறைவனெதிர் குருவினெதிரே
எரியினெதிர் வழிநடுவி லாசூச மேவுழி
இடாமலெள் ளளவாயினும்

பெருநிலந் தன்னிலே விழாம லண்ணாந்து
பேசுபஞ் சாக்கரத்தைப்
பேரன்பி னாலுன்னி வெண்ணிற விபூதியைப்
பெட்புடன் பூசுவோர்கள்

அருணிதியும் உயர்கதியும் ஆயுளும் பெருகுவார்
அருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெய் உண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே.

—அண்ணாமலை சதகம் 54

89. இன்ன உறுப்புகளாற் பயனில்லையெனல்

தேவாலயஞ்சுற்றிடாதகால் என்னகால்
தெரிசியாக் கண்ணென்னகண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
சிந்தைதான் என்னசிந்தை

மேவாகமம்சிவ புராணமவை கேளாமல்
விட்டசெவி என்னசெவிகள்
விமலனை வணங்காத சென்னிஎன் சென்னிபணி
விடைசெயாக் கைஎன்னகை

நாவார நினையேத் திடாதவாய் என்னவாய்
நற்றீர்த்தம் மூழ்கா உடல்
நானிலத் தென்ன உடல் பாவியா கியசனனம்
நண்ணினாற் பலனேதுகாண்

மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ
வடிவேலை விட்டமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

துதியாத நாவும், தொழாமுடியும், கையும்,
பதியாத நெஞ்சு,முன்னைப் பாராக்—கதிர்விழியும்,
நின்புகழ்கே ளாச்செவியும், நின்வலம்செ யாப்பதமும்,
என்பயனாம் வேலிறைவ னே.

—நீதிபோதவெண்பா 98

90. நற்பொருளொடு தீப்பொருள் பிறத்தல்

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன
குலவும்ஆட் டின்கண் அதர்தான்
கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே
கொடும்பாசி யுற்றுமென்ன

மாகருணும் அமுதினொடு நஞ்சம் பிறந்தென்ன
வல்லிரும் பில்துருத்தான்
வந்தே பிறந்தெனன நெடுமரந் தனில்மொக்குள்
வளமொடு பிறந்தென்னஉண்

பாகமிகு நெல்லினொடு பதர்தான் பிறந்தென்ன
பன்னுமொரு தாய்வயிற்றில்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன
பலனேதும் இல்லையன்றோ

மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன்
மைந்தனென வந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

செல்லோடே யிணங்குகடல் திருவுடன்மூத்
தாள்பிறந்த செயலும் பாரில்
நல்லோடைச் சலத்திலுசிலம் பாசி
பிறந்திருக்கும் நடத்தை பார்த்தேன்

வில்லோடே மோதியதோள் செயங்கொண்டார்
வயலில் விளைவுண் டான
நெல்லோடே பதருமசத் தினிலதரும்
பிறந்திருக்கும் நேர்மைதானே.

—செயங்கொண்டார் வழக்கம் 10

ஆட்டின் கழுத்திலதர் நீண்டென்ன நீர்ப்பாசி
யதுபச்சை யாகி லென்ன

—திருவேங்கட சதகம் 26

91. இடத்தை அழிப்பவை

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
கூரிரும் புகளைவெல்லும்
கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன்
கோத்திரம் எலாம்அழிக்கும்

நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து
நண்ணுபற வைகளையார்க்கும்
நட்புடன் வளர்த்தகலை மானொன்று சென்றுதன்
நவில்சாதி தனையிழுக்கும்

உலவுநற் குடிதனிற் கோளர்கள் இருந்துகொண்டு
உற்றாரை ஈடழிப்பர்
உளவனில் லாமலூர் அழியா தெனச்சொல்லும்
உலகமொழி நிசமல்லவோ

வலமாக வந்தர னிடத்தினிற் கனிகொண்ட
மதயானை தன்சோதரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

கோடாமற் பெரியவர்பால் நடப்பதன்றிக்
குற்றமுடன் குறைசெய் தோர்கள்
ஆடாகிக் கிடந்தவிடத் ததன்மயிருங்
கிடவாமல் அழிந்து போவார்
வீடாநற் கதியுதவுந் தண்டலையா
ரேசொன்னேன் மெய்யோ பொய்யோ
கோடாலிக் காம்பேதன் குலத்திதினுக்குக்
கேடான கொள்கை தானே.

—*தண்டலையார் சதகம் 33*

பீடார் குலத்தினில் ஆகாத
பிள்ளைதற் பெற்றெடுத்தோர்
வாடாது வாடக் குலநாச
மாக்கிடு மற்றதுதான்
தாடாண்மை யாளர்கைக் குள்ளாய்த்
தருக்குலஞ் சாயவெட்டும்
கோடாலிக் காம்பல்ல வோவச்சு
தா நந்த கோவிந்தனே.

—**கோவிந்த சதகம் *10***

92. வினைக்கு உழைத்தல்

குயில்முட்டை தனதென்று காக்கையடை காக்கும்
 குணம்போலும் ஈக்களெல்லாம்
கூடியே தாமுண்ண வேண்டுமென் றேதினம்
 கூடுய்த்த நறவுபோலும்

பயில்சோர ருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற
 பாலனென் றுட்கருதியே
பாராட்டி முத்தமிட் டன்பாய் வளர்த்திடும்
 பண்பிலாப் புருடர்போலும்

துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பால்
 தொட்டுத் தெரித்திடாமல்
தொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டு போகவரு
 சொந்தமா னவர்வேறுகாண்

வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து
 வானவர்க் குதவுதலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

பொருளைப் பொசியாது போந்தொருவற் கீயா(து)
இருளறையில் வைப்போர்க் கிணையா;—ஒருகுயிலின்
அண்டத்தால், தேனால்,சோ ரத்தின்மக வாற்பயன்சற்
றுண்டுகொடி ஈமாந் தருக்கு.

—நீதிபோதவெண்பா 73

93. இது சேரின் இது பயன்படாது எனல்

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கான
ஆற்றிற் கரைத்தபுளியும்
அரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும்வரும்
அலகைகட் கிடுபூசையும்

சுழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும்மணற்
சொரிதரும் பனிநீரும்நீள்
சொல்லரிய காட்டுக் கெரித்தநில வும்கடற்
சுழிக்குளே விடுகப்பலும்

விழலுக் கிறைத்திட்ட தண்ணீரும் முகமாய
வேசைக் களித்தபொருளும்
வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை
விருதாவி தென்பர்கண்டாய்

மழலைப் பசுங்கிள்ளை முன்கைமலை மங்கைதரும்
வண்ணக் குழந்தைமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

மேட்டுக்கே விரைத்தவிரை வீணருக்கே
செய்தநன்றி மேயும் பட்டி
மாட்டுக்கே கொடுத்தவிலை பரத்தையர்க்கே
தேடியிட்ட வண்மை யெல்லாம்
பாட்டுக்கே யருள்புரியுந் தண்டலையார்
வீதிதொறும் பரப்பி டாமல்
காட்டுக்கே யெறித்தநிலாக் கானலுக்கே
பெய்தமழை கடுக்குங் காணே.

—*தண்டலையார் சதகம் 13*

மோட்டுக் குலாமக் கயவர்க்கு நூலை மொழிவ
தெல்லாம்,
மேட்டுக் கிறைத்த புனலோ, உவரில் விதைத்த
வித்தோ,
காட்டுக் கெறித்த நிலவோ, கமருக்குங் காரெருமை
மாட்டுக்கும் பெய்த மழையோ, குறுங்கை
மலைநம்பியே?

—நம்பி சதகம் 44

ஊமைக்குச் சொல்மதி,உ லோபிக் குரைத்தகவி,
காமிக்குச் சொல்ஞானம், கல்லார்க்குத்—தாமுரைத்த
சீலம்துட் டர்க்குநன்றி செய்தல்,கம ரிற்கவிழ்த்த
பாலன்றி இன்றுகடம் பா!

—நீதிபோத வெண்பா 17

94. கைவிடத் தகாதவர்

அன்னைசுற் றங்களையும் அற்றைநாள் முதலாய்
அடுத்துவரு பழையோரையும்
அடுபகைவ ரிற்றப்பி வந்தவொரு வேந்தனையும்
அன்பான பெரியோரையும்

தன்னைநம் பினரையும் ஏழையா னவரையும்
சார்ந்தமறை யோர்தம்மையும்
தருணமிது என்றுநல் லாபத்து வேளையில்
சரணம் புகுந்தோரையும்

நன்னயம தாகமுன் உதவிசெய் தோரையும்
நாளுந் தனக்குறுதியாய்
நத்துசே வகனையும் காப்பதல் லாதுகை
நழுவவிட லாகாதுகாண்

மன்னயிலும் இனியசெஞ் சேவலும் செங்கைமலர்
வைத்தசர வணபூபனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

95. தகாச் செயல்கள்

அண்டிவரும் உற்றார் பசித்தங் கிருக்கவே
அன்னியர்க் குதவுவோரும்
ஆசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பின்
அற்பரை யடுத்தபேரும்

கொண்டவொரு மனையா ளிருக்கப் பரத்தையைக்
கொண்டாடி மருவுவோரும்
கூறுசற் பாத்திரம் இருக்கமிகு தானமது
குணமிலார்க் கீந்தபேரும்

கண்டுவரு புதியோரை நம்பியே பழையரைக்
கைவிட் டிருந்தபேரும்
கரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
கடக்கின்ற மரியாதைகாண்

வண்டடர் கடப்பமலர் மாலிகா பரணமணி
மார்பனே அருளாளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

திண்டாட வெட்டும் ரணகளத்
திற்செயங் கொள்ளும்வலி
கண்டா லெதிர்நிற்பர் கூளப்
படையைக்கைக் கொண்டுபுகார்
அண்டாத வெள்ளத்தி லோடங்கொ
ளாமல் அடுநரிவால்
கொண்டாறு தாண்டுவ ரோவச்சு
தாநந்த கோவிந்தனே.

—கோவிந்த சதகம் 82

மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்

—குமரேச சதகம் 23

96. நல்லோர் முறைமை

கூடியே சோதரர்கள் வாழ்தலா லும்தகு
குழந்தைபல பெறுதலாலும்
குணமாக வேபிச்சை யிட்டுண்கை யாலும்
கொளும்பிதிர்க் கிடுதலாலும்

தேடியே தெய்வங் களுக்கீத லாலும்
தியாகங் கொடுத்தலாலும்
சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்தலாலும்

நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலும்மிக
நல்வார்த்தை சொல்லலாலும்
நன்மையே தருமலால் தாழ்ச்சிகள் வராஇவை
நல்லோர்கள் செயும்முறைமைகாண்

வாடிமனம் நொந்துதமிழ் சொன்னநக் கீரன்முன்
வந்துதவி செய்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

97. அடைக்கலங் காத்தல்

அஞ்சலெனும் நாயினுடல் தருமன் சுமந்துமுன்
ஆற்றைக் கடத்துவித்தான்
அடைக்கல மெனுங்கயற் காகநெடு மாலுடன்
அருச்சுனன் சமர்புரிந்தான்

தஞ்சமென வந்திடு புறாவுக்கு முன்சிபி
சரீரந் தனைக்கொடுத்தான்
தடமலைச் சிறகரிந் தவனைமுன் காக்கத்
ததீசிமுது கென்பளித்தான்

இன்சொலுட னேபூத தயவுடைய ராயினோர்
எவருக்கும் ஆபத்திலே
இனியதம் சீவனை விடுத்தாகி லும்காத்
திரங்கிரட் சிப்பரன்றோ

வஞ்சகிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன்
வளர்சூரன் உடல்கீண்டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ஒப்புமை :

அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக்காக்கு
மவனே மகாபுருடனாம்

—அறப்பளீசுர சதகம் 17

98. யோக்கியா யோக்கியம்

பாலினொடு தேன்வந்து சேரில்ருசி அதிகமாம்
பருகுநீர் சேரில்என்னாம்
பவளத்தி னிடைமுத் தமைத்திடிற் சோபிதம்
படிகமணி கோக்கில்என்னாம்

மேலினிய மன்னர்பால் யானைசேர் வதுகனதை
மேடமது சேரில்என்னாம்
மிக்கான தங்கத்தில் நவமணி யுறிற்பெருமை
வெண்கல் அழுத்தில்என்னாம்

வாலிப மினார்களுடன் இளையோர்கள் சேரின்நலம்
வளைகிழவர் சேரில்என்னாம்
மருவுநல் லோரிடம் பெரியோர் வசிற்பிரியம்
வருகயவர் சேரில்என்னாம்

மாலிகை தரித்தமணி மார்பனே தெய்வானை
வள்ளிக்கு வாய்த்தகணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

99. பெரியோர் இயல்பு

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்றல்
ஆபத்தின் வந்தபேருக்(கு)
அபயங் கொடுத்திடுதல் நல்லினஞ் சேர்ந்திடுதல்
ஆசிரியன் வழிநின்றவன்

சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை
துணையடி அருச்சனைசெயல்
சோம்பலில் லாமலுயிர் போகினும் வாய்மைமொழி
தொல்புவியில் நாட்டியிடுதல்

மன்னரைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு
வைகினும் தாமரையிலை
மருவுநீ ரெனவுறுதல் இவையெலாம் மேலவர்தம்
மாண்பென் றுரைப்பரன்றோ

வன்னமயில் மேலிவர்ந் திவ்வுலகை யொருநொடியில்
வலமாக வந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

100. நூலின் பயன்

வன்னமயி லேறிவரு வேலா யுதக்கடவுள்
மலைமேல் உகந்தமுருகன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமர மாயினோன்
வானவர்கள் சேனாபதி

கன்னல்மொழி யுமையாள் திருப்புதல்வன் அரன்மகன்
கங்கைபெற் றருள்புத்திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகன்
கடவுள் ஆவிநன்குடியினன்

பன்னரிய புல்வயலில் வாலகும ரேசர்மேல்
பரிந்துகுரு பாததாசன்
பாங்கான தமிழாசி ரியவிருத் தத்தின்அறை
பாடலொரு நூறும்நாடி

நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
நாடொறுங் கற்றபேர்கள்
ஞானயோ கம்பெறுவர் பதவியா வும்பெறுவர்
நன்முத்தி யும்பெறுவரே.

அருஞ்சொற் குறிப்புரை

காப்பு

பூ—பூமி. புல்லை—திருப்புல்வயல் எனும் தலம். புல்லை—புல்வயல் என்பதன் மரூஉ. மேவிய—இனிமை பொருந்திய. கோ—தலைமை. சரவணத்தான்—சரவணப் பொய்கையில் (நாணற்காடு) அவதரித்த முருகப்பெருமான். கந்தப்பெருமான், சிவபெருமான் நெற்றிக்கண்ணினின்றும் ஆறு தீப்பொறிகளாகத் தோன்றி, ஆறு குழந்தைகளாகச் சரவணப் பொய்கையில் தவழ்ந்துகொண்டிருந்தனர் என்பது புராணம். கம்பம்—அசையும் இயல்புடையது. கும்பம்—குடம் போன்ற மத்தகம். கா—கற்பகத்தரு; சோலை. குஞ்சர வணத்தான்—குஞ்சர வண்ணத்தான்—அசைதலை யுடையதும், மத்தகத்தையுடையதும் ஆகிய யானை வடிவத் தானாகிய விநாயகப்பெருமான்.

காக்குஞ் சரவணத்தான்—காக்கும் சரவணத்தான்

காக்குஞ் சரவணத்தான்—கா குஞ்சர வணத்தான்

இக்காப்பு வெண்பாவின் இறுதி இரண்டடிகளும், அடி முதலிருசீர் மடக்கு (யமகம்) பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

அவையடக்கம்

மாரி—மழை. மனை—வீடு. மருவு—சேர்கின்ற. பார்—பூமி. வாரி—கடல். வாவி—குளம். இன்சொல்வாணர்—புலவர். உகந்து—விரும்பி. வால—பால. வாலகுமரேசர்—பால

சுப்பிரமணியர். சதகம்—நூறு பாடல்களாலான சிற்றிலக்கியமாகிய இச் சதக நூல்.

'வான்கோழி' எனும் சொல்லாட்சி இப்பாடலில் இடம் பெற்றுள்ளமை காண்க.

நூல்

(எண்: பாடல் எண்)

1. ஆறுதலையாய்-ஆறு தலைகளை யுடையவனாய். புனிதன்-சிவன். மந்த்ர உபதேச மொழி-பிரணவமாகிய மந்திர உபதேசமொழி. போதன்-பிரமன். அரிகரன்-ஹரி ஹரன்-திருமாலும் சிவனும். செகுத்தல்-அழித்தல். தேகம்-உடல். அமரர்-வானோர், தேவர். நேமி-பூமி. மா-வண்டு. பூங்கடம்பு-அழகிய கடம்ப மலர். குகன்-முருகன்.

2. காயத்ரி-இருபத்து நான்கு அட்சரங்களாலாகிய ஒரு வேத மந்திரம். ஆதி-முதலிய. சுருதி-வேதம். கோது-குற்றம். ஆகமம்-வேத சாரமான சமய நூல்கள். யாகாதி-யாகம் முதலானவை. முளரி-நெருப்பு. தகிப்பார்-எரித்து விடுவர். சிலை-கல். பிருதிவி-மண். தெய்வ மூர்த்தம்-தெய்வத்தின் உருவம்.

3. குடிபடையில் அபிமானம்-குடிகளிடத்தும் படைகளிடத்தும் பற்று. மந்திராலோசனை-ரகசியமான ஆலோசனை. குறிப்பறிதல்-குறிப்பினால் அறிதல். சத்திய வசனம்-உண்மையே பேசுதல். கோடாத-நெறிதவறாத. சதுருபாயம்-நால்வகைச் சூழ்ச்சிகள், சாம தான பேத தண்டம். படி விசாரணை-உலக விசாரணை. பிரதானி-மந்திரிகள். தளகர்த்தர்-படைத்தலைவர். பரித்தல்-காத்தல். துடி-மேன்மை. அகமின்மை-நானெனும் அகந்தை, கருவம் இல்லாமை. சுகுணம்-நற்குணம். தோலாத-தோல்வியடையாத. 'காலம் இடம் அறிதல் வினை வலிகண்டு' எனும் தொடரில் உள்ள

திருக்குறளின் தாக்கத்தையும், 'பல்லுயிரெலாந்தம் உயிர்க்கு நிகரென்றே' என்பதில் உள்ள இலக்கியத் தாக்கத்தையும் கருதுக. துஷ்ட நிக்ரக சௌரியம்-துஷ்டர்களை அழிக்கும் வீரம். சௌரியம்-சூரத்தனம்.

4. கொண்டபடி போலும்—பொருள்களைத் தாம் விலைக்கு வாங்கிய விதமாக. முதல்-மூலதனம். வண்டப் புரட்டர்-தீயரான பொய்யர்; முறி-ஓலை, கடன் பத்திரம். மருவும்-பொருந்திய. மயிர் பிளந்தே-மயிரை இரண்டாகப் பிளந்தது போல (சரியாகப் பார்த்து). உசிதம் ஆனதில்-தகுதியான செயலில். மண்டலத்தூடு-உலகில். கனவர்த்தகம்-பெரிய வாணிகம்.

5. தேவாலயம்-கோயில். பூசனை-பூசை. தபோதனர்-முனிவர். நவில்-சொல்லப்படுகின்ற. யாகாதி கருமங்கள்-யாகம் முதலான செயல்கள். சுப சோபனங்கள்-மங்களகரமான திருமணம் முதலியவை. கொற்றவர்-அரசர். மனுநெறி முறைமை-மனுதர்ம சாத்திரத்தின் முறை. சுகிர்தம்-புண்ணியம், நல்லவழி. வர்த்தகன்-வாணிகன். வீர ரண சூரர் வலி-வீரத்தன்மை வாய்ந்த போர் வீரரின் வலிமை. மேழி-கலப்பை.

6. சற்குரு-நன்னெறியைப் போதித்த ஆசாரியன். அவம் அறுத்து-குற்றம் நீக்கி. அஞ்சல் என்று-பயப்படாதே என்று. முனோன்-முன்னோன், தமையன். கவளமிடு-உணவிடும். கலி-வறுமை. காசினி-பூமி. மவுலி-முடி. (தலை). விமலர்-மலமற்றவர், சிவபெருமான்.

7. திருமாது—இலக்குமி. சந்ததம்—எப்பொழுதும். அவிடந்தனில்-அவ்விடந்தன்னில். மெய்த்து-உண்மையாகி. விண்டுவின் களை-விஷ்ணுவின் பொலிவு. பூண்டு-சேர்ந்து. சத்துரு-பகையாளி. பலாயனத்திறல்-பகைவரைப் புறங்காட்டி ஓடச்செய்யும் வல்லமை. இசை-புகழ். மன்னுயிர்-நிலைபெற்ற உயிர்கள்.

8. ஆதுலர்-இரவலர். அன்னம்-சோறு. குரு-ஆசிரியன். உறவின்முறையார்-உறவினர்.

9. மோக்ஷம்-வீடுபேறு, முத்தி. ராச்சியம்-அரசாட்சி புரியும் நாடு. அரசாட்சி. அனுதினம்-நாள்தோறும். தனம்-செல்வம், பொன். மானபரன்-தன்மதிப்புள்ளோன். எற்கு-எனக்கு.

10. மிடியன்-வறுமையுற்றோன். வங்கணம்-நட்பு. மிலேச்சன்-கீழ்மகன், அறிவிலி. நிறை-உறுதிப்பாடு. உள்-மனத்தில். அகமில்லை-நானெனும் அகந்தையில்லை. மூர்க்கன்-பிடிவாதக்காரன். காமி-காமுகன். குணமிலோன்-நற்குணம் இல்லாதவன்.

'குணமிலோற் கழகில்லை': அழகுடையவன் நற்குணம் உடையவனாக இருப்பான் என்பது நூற்கொள்கை. 'இலங்கு எழில் அளவு குணம் என உரைப்பர். இதற்கு மேற்கோளென நின்னைத் துலங்குறக் கண்டேன்' எனும் நைடதச் செய்யுளில் (பாடல் எண்: 176) இக்கருத்து பொதிந்துள்ளமை காண்க.

சித்த சுத்தன்-மனத்தூய்மை உடையவன். நவில்-சொல்லுகின்ற. அங்க சுத்தி-உடலின் தூய்மை. அயலோர் இலை-அயலவரும் உறவினர் போலாவர் என்பதாம். புல்லன்-கீழான பண்புகளை உடையவன், அற்பன். உசிதம் அநுசிதம்-தகுதியுடைமை தகுதியின்மை. புலையர்-கீழ் மக்கள். மாசு-களங்கம். மதி-சந்திரன்.

11. பரிபாலனம்-பாதுகாத்தல். ராசயோசனை-அரசாட்சிக்குத் தேவையான ஆலோசனைக் கருத்து. சரீரம்-உடல். நிர்வாகி-தொழிலை மேற்கொண்டு நடத்துபவன், சாமர்த்தியசாலி. சூரன்-வீரன். நிபுணன்-திறமை மிக்கவன். வாகடம்-மருத்துவநூல். தாது-நாடி. நிதானம்-நிலை.

'பு திியோன் வைத்தியன்': 'பால ஜோசியன் விருத்த வைத்தியன்' எனும் வடமொழித் தொடரைக் கருதுக.

ஐம்புலன்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியன. மாயவர் சகோதரி மனோன்மணி-திருமாலின் தங்கையான பார்வதி. வரபுத்ரன்-சிறந்த புதல்வன்.

12. வாய்முந்து-முற்பட்டுப் பேசுகின்ற, வஞ்சம்-கபடம். பயிர்கொல்-பயிரை அழிக்கின்ற. அகிருத்யம்-கெட்ட செய்கை. ஆர்ப்பு-ஆரவாரம். விசாரம்-கவலை. பலிசை-பெண், வட்டி என்றும் அமையும். மெய்-உடல். அவையுதாசினம்-சபையிலுள்ளோர் செய்கின்ற அலட்சியம், நிந்தை. வினை-தீவினை. கோரம்-கொடுமை. மைக்கு இனிய கண்ணி-மைக்கு அழகு செய்யும் கண்களை யுடையவள்.

13. தியாகிகள்-கொடையாளி, வள்ளல்கள். துரும்பு-துரும்புக்குச் சமம். எண்ணாத-ஒரு பொருட்டாக மதிக்காத. எதிராளி-பகைவன், தளம்-படை. அற்பரது கையினில் பிரயோசனம்-அற்பரது கையினால் கிட்டும் உதவி. மோக்ஷ சிந்தனை-முத்தியின் மீதான ஆசை, நினைவு. போகம்-இன்பம். தீராத சகலமும்-நீங்காத பற்றுக்கள் எல்லாவற்றையும். விறல்-வெற்றி. செய்ய-செம்மையான, செய்ய கலை நாமகள்-சரசுவதி. கடாக்ஷம்-கடைக்கண் பார்வையாகிய அருள். செந்தமிழ்க்கவி-செந்தமிழில் கவிபாடுவது. வார் ஆரும்-கச்சு அணிந்த. பகல் விளக்குவது-பகலில் எல்லாப் பொருளையும் விளக்கிக் காட்டுவது.

14. இரவி-சூரியன். நிசி-இரவு, பார்-பூமி. பதி-கணவன். குடி-குடிமக்கள். பரி-குதிரை. இகல்-பகை. சண்டை. வலி-உடல் வன்மை. சுதி-இசைச்சுருதி. நிறை-நிறைகுணம். புகல்-அடைக்கலம். திரு-இலக்குமி. மகம்-யாகம். மறை-வேதம்.

15. சிங்காரவனம்-அழகிய சோலை. தீஞ்சொல்-இனிய சொல். திரையெறியும்-அலைவீசும். கொட்டி-கொட்டிப்பூ. செங்கஞ்சம்-செந்தாமரை. அங்கானகம்-அழகிய காடு. அசடர்-கீழ்மக்கள். சங்காடு-சங்கு உலவுகின்ற. சாலக்கிராமம்-சாளக்கிராமம்-திருமால் உருவமாகக் கொண்டு பூசித்தற்குரிய ஒருவகைக்கல். தடம்-அகன்ற, விசாலம். குறுமுனி-அகத்தியர்.

16. கொண்டல்-மேகம். உதார சற்குணம்-கொடையளிக்கும் நல்ல குணம். கோ-அரசன். ஊருணி-குளம், ஊரார் உண்ணப் பயன்படும் நீர்நிலை. அம்பலத்துறு தரு-பொதுவான இடத்திலுள்ள மரம். நீழல்-நிழல். தணீர்ப் பந்தல்-தண்ணீர்ப்பந்தல். விண்டலத்துறை-வானில் உறைகின்ற. சந்திராதித்த கிரணம்-சந்திர சூரியருடைய ஒளிக் கதிர்கள். மாருதம்-காற்று. சீதம்-குளிர்ச்சி. விவேகி-அறிவுள்ளவர். வெகுசனர்-பொதுமக்கள். உபகாரம்-உதவி. வண்டு இமிர்-வண்டு ஒலிக்கப்பெற்ற. செங்களபம்-சிவப்பாகிய சந்தனக் கலவை.

17. தழல்-நெருப்பு. மறுகினும்-நிலைமை கலங்கினும். சந்தனக்குறடு—சந்தனக்கட்டை. பொங்கமிகு—பொலிவுமிகு. போத-மிகவும். குறுகினாலும்-வற்றினாலும், சுண்டினாலும், குறைந்தாலும். துங்கம்-உயர்வு. நிறை-மாட்சி, நற்குணங்கள். கலியாணி-கலியாண குணமுடையவள். குறமங்கை-வள்ளி. சுரகுஞ்சரி-தெய்வயானை. புயம்-தோள்.

18. சமர்-போர். பரதாரம்-பிறர் மனைவியர். விசுவாச காதகர்-நம்பிக்கைத் துரோகஞ்செய்பவர். அருந்தவர்-அரிய தவஞ்செய்வோர். நன்றி-உதவி. முகஸ்துதி வழக்கு உரைப் போர்-முகமன் வார்த்தையாக ஓர வழக்குப் பேசுவோர். மன்-நிலையாக. அபகரித்தல்-திருடிச் சேர்த்தல். மாநரகில்—பெரிய நரகத்தில்.

19. இரண்டுவிசை-இரண்டுமுறை. புல்குவது-சேர்வது. மறு அறு-குற்றம் அற்ற. விரேசனம்-மலங்கழித்தல், பேதி. தைலம்-எண்ணெய். மூதறிவு-முதிர்ந்த அறிவு. மொய் குழல்-நெருங்கிய கூந்தலையுடைய பெண். சையோகம்-புணர்தல். எவளவு-எவ்வளவு. தயை-அன்பு. மேலவர்-பெரியோர். சரீர சுகம்-உடலுக்கு நலம், இன்பம். சாரங்கம்-மான். சரசா-இன்பமுள்ளவனே.

20. அனுபோகம்—நுகரவேண்டிய தீவினைப்பயன். தேசு-ஒளி. மேரு-மேருமலையை. ப்ரதக்ஷிணம் செய்தும்-வலம் வந்தும். வடு-தழும்பு, களங்கம். சேடன்-ஆதிசேஷன். உவணன்—கருடன். செறும்பகை — அழிக்கும்பகை. ஈசன்-சிவபெருமான். பருதி-சூரியன். ஆசிலா-ஆசு இலா-குற்றமில்லாத. அடுக்கினும்-அடுத்திருந்தாலும். அமைத்த படி-விதித்தபடி. வாசவன்-தேவேந்திரன். உம்பர்-தேவர். ஏத்து-துதிக்கின்ற. சரணா—பாதங்களை உடையவனே.

21. குஞ்சரம்-யானை. திரு-செல்வம். வெம்போர்-கொடிய சண்டை. நிஷ்டை-யோகம். மனை-வீடு. சோதரம்-சகோதரர். சேகரம்-முடி. சென்னி-தலை. உரு-அழகு. மெய்-உடம்பு. யோசனை-ஆலோசனை. மரு-வாசனை. வண்ணம்-அழகு. வையம்-பூமி. என் பயன்-என்ன பயன், பயனில்லை.

22. தபோதனர்-முனிவர். கருணீகர்-கணக்கர். விரகு-தந்திரம். விழை-விரும்புகின்ற. உரம்-அறிவு. ஆசான்-ஆசிரியன். திரவியமுளோர்-பணக்காரர், செல்வர். வரநதி-மேன்மையான நதி; கங்கை. மதலை-குழந்தை. சரவண மிசை-தருப்பைப்புல் நிறைந்த பொய்கையின் மேலிடத்தில். தருணம்-இளமை. குழவி-குழந்தை.

23. கடனுதவுபேர்—கடன் கொடுத்து உதவினோர். கனம் மருவு-பெருமை பொருந்திய. பெரிய தனம்-மிகுதி

யான செல்வம். அடைவு-முறை. சத்ரு-எதிரி. விசுவாசித்து-நம்பி. பரிதானம்-இலஞ்சம். இடுக்கண்-துன்பம். மடமனை-இளமையும் அழகும் உடைய மனைவி.

24. தாரு-மரம். சந்தானம்-சந்தன மரம். சோமவாரம்-திங்கட்கிழமை. தகை-மேன்மை. தேமலர்-தேன் பொருந்திய மலர். அம்போருகம்-தாமரை. கதித்திடு-விரைகின்ற. பெலம்-பலம். மாருதம்-காற்று. ஐராவதம்-இந்திரனது வெள்ளை யானை. பிரணவம்-ஓம் எனும் மந்திரம். வாரிதி-கடல். குவடு-மலை.

25. பெலம்-பலம். கொற்றவர்-அரசர். சௌரியம்-வீரம். சதுருபாயம்-சாம, தான, பேத, தண்டமெனும் நான்கு உபாயங்கள். நீதிமான்-நீதியாளன். நடுவு-நடுவு நிலைமை. மாதவர்-முனிவர். மடவியர்-பெண்கள். நிறைமானம்-நிறையும் மானமும். கன சேவகர்-பெரிய சேவகர். சாமி காரியம்-தலைவனது வேலை சான்றவர்-பெரியோர். வந்தனை-வழிபாடு, வணக்கம். வால வடிவு-பால வடிவு-இளைய உருவம்.

26. தருணம்-சமயம். உரிய காலம். தராதரம்-தகுதியும் தகுதியின்மையும், வரிசை. தெருள்-தெளிவு. சீவனம்-வாழ்க்கை. தேகி என-கொடு என்று. (தேகியெனல்—ஈ என இரத்தற் குறிப்பு) ஈயாத-கொடுக்காத. முறிந்துமென்ன-அழிந்தாலுமென்ன. கன்னிகை-இளம்பெண்.

27. ஓதி-ஓதியமரம். காட்டிலவு-காட்டில் உள்ள இலவ மரம். கருவேல்-கருவேலமரம். கானில்-காட்டில், பாலைவனம். கழுதை லத்தி-கழுதையின் மலம். ஆஸ்தான கோழை-சபையைக் கண்டு அஞ்சுவோன். ஓதி யென்ன-படித்துமென்ன. திடம்-வலிமை. திறல்-வலிமை. செறிவாகி-அடர்த்தியாய். வஸ்த்ர பூஷணம்-ஆடை அணிகலன். சித்திரத்துற்றும்-சித்திரப்பதுமையில் அமைந்திருந்தாலும். மடம்-அறியாமை. உபகாரம்-உதவி, பயன். வம்பர்

வாழ்வுக்கு-வீணருடைய செல்வத்திற்கு. நிகராம்-ஒப்பாகும்.

28. பதர்-உள்ளீடற்ற நெல், கருக்காய். இங்கு அறிவில்லாதவனை, பயனற்றவனைக் குறித்தது. சமர்-சண்டை. தோழர்-நண்பர். சலிக்கும்-வெறுத்துக்கொள்ளும். புறணி பல பேசி-புறங்கூறி. இரக்கின்ற-யாசிக்கின்ற. புவியோர்-பூமியிலுள்ள பெரியோர். மன்-அரசன். வேசை-விலைமாது. விபசரிக்கின்ற-ஒழுக்கம் தப்பி நடக்கின்ற, உறவு கொள்கின்ற. காண்-முன்னிலை அசை.

29. இரவி காணா வனசம் — சூரியனைக் காணாத தாமரை. இந்து-சந்திரன். குமுதம்-அல்லி மலர். ஏந்தல்-அரசன். விருந்து-விருந்தினர். சுரபி-தாய்ப்பசு. மதலை-குழந்தை. நேயர்-அன்புள்ளோர். கலை-ஆண் மான். சோடு-துணை. பேடு-பெட்டை (சேவலைக் காணாத பெட்டை). குரவர்-பெரியோா. தியாகி-வள்ளல். வறிஞர்-ஏழை. கொழுநர்-கணவர். கொண்டல்-மேகம். சிறுவர் காணா வாழ்வு-குழந்தைகளை அடையப் பெறாத வாழ்க்கை. கோடை-கோடைக்காலம்; வசந்த காலம். வரவு காணாத செலவு-வரவில்லாமல் செலவு செய்தல். வாழ்வு காணா இளமை ஆம்-செல்வத்தை அனுபவிக்காத இளமைக்குச் சமம் ஆம்.

30. மீதூண் விரும்பல்—அதிக அளவில் உணவை விரும்பிப் புசித்தல், 'மீதூண் விரும்பேல்' எனும் ஔவையாரின் ஆத்தி சூடித் தொடரை ஈண்டுக் கருதுக. கருதிய-இடைவிடாது நினைத்த. விசாரம்—கவலை. கடுவழி நடக்கை—கல்லும் முள்ளும் கூடிய கடுமையான வழியில் நடத்தல். கனி-அதிகமாகக் கனிந்த பழம். பழங்கறி-முதல் நாள் வைத்த கறி. உண்டபின் மூழ்கல்—உணவு உண்ட பிறகு குளித்தல். நீர்ப்பகை-உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாத தண்ணீர், பனிக்காற்று-குளிர் காற்று. நீடு சருகு-பழைய சருகு, உலர்ந்த இலை. மெல்லிநல்லார்-

பெண்கள். கலவி-உறவு, புணர்ச்சி. மெய்வாட-உடம்பு வருந்த. சாகாதி—காய்கறி முதலியன. சாகம்—கீரை. வன்பிணி-வலிய நோய். இடம் என்பர்-இடமாகும் என்பர்.

31. உபகாரம்-உதவி, பயன். வாவி-குளம். கூவம்-கிணறு. தேவாலயம்—கோயில். அகரங்கள்—பிராமணர் வீடுகள்; அக்கிரகாரம். செய்த-உண்டாக்கிய. பொருது-சண்டையிட்டு. தரணிதனில்-பூமியில். கனவித்தை கொண்டவர்கள்-மிக்க கல்வி கற்றவர்கள். மடந்தை-பெண். கடிமணம்-திருமணம். சரீரம்-உடல். போகினும்-அழியினும்.

32. பிணியாளர்—நோயாளிகள். வேட்டகம்—திருமணம் செய்து கொண்ட வீடு; மாமியார் வீடு. வழங்கி—பிறனொருவனுக்குச் சேர்த்து வைத்து. மன்னும்—நிலைபெற்ற. ராச சபை-அரசவை. தூறாக-பழியுண்டாக. சிவிகை-பல்லக்கு. தொலையா-நீங்காத. செல்லாத-ஜெயிக்காத. விவகாரம்-வழக்கு. அசடர்-மூடர். ஒளிமாய்வர்-புகழ்கெடுவர். கண்டாய்-முன்னிலை அசை.

33. கன விபூதி—சிறந்த திருநீறு. உரிஞ்சிடும்-உராய்ந்துகொள்ளும். கதம்-கோபம். கடா-காளை. பொதி-சுமை. கான்-காடு. அரவமனையாம்-பாம்புக்கு இடமாகும். இதம்-நன்மை. இரக்கப் பிடித்தவர்க்கு-யாசித்துப்பிழைக்கப்பிடித்த குரங்காட்டிகளுக்கு. வாருகோல்-துடைப்பம். விளக்கும்-குப்பையைத் தள்ளி அழகு விளங்கச் செய்யும். மதம்-செருக்கு. பரமலோபர்-மிகுந்த கருமிகள். உபகாரம்-உதவி, பயன்.

34. திரவியம்-பொருள், செல்வம். சீலை-ஆடை, உடை. நல்லமுது-நல்ல உணவு. செயார்-செய்யார். புரவலர்-அரசர். தண்டம்-தண்டனை. ஈவார்-கொடுப்பார். புராணிகர்-புராணம் சொல்லுவோர். விரகு அறிந்து-தந்திரம் அறிந்து, உபாயம் அறிந்து. தினும்-தின்னும்.

'பிள்ளை சோறு கறி தினுமளவில் வெகு பணம் செலவாகலால் விளையாடு கிழவனாம் பிள்ளையே பிள்ளை' என்று ஒரு செட்டி கூறியதாக வரும் கதையொன்று இப்பாடலில் மேற்கோள் காட்டப்பெற்றுள்ளது.

35. கட வாரணம்-மதயானை. கங்காசலம்-கங்கைநீர். கமலாசனம்-தாமரைப் பீடம், தாமரை இருக்கை. காகுத்தன்-திருமால். (ககுஸ்த வமிசத்திற் பிறந்த இராமன் பெயராகிய காகுத்தன் என்பது இங்குத் திருமாலைக் குறித்தது.) கொற்றவர்-அரசர். காலி-பசு. பரி-குதிரை. சுப லட்சணம்-மங்களகரமான. ரணசுத்த வீரர் பாலும்-போர்செய்ய வல்ல வீரரிடத்தும். கேதனம்-கொடி. இரதம்-தேர். ருப-உருவ அழகுள்ள. மடவார்-பெண்கள். திருமாது-இலக்குமி. மாறாது-நீங்காமல்.

36. சோர மங்கையர்-கெட்ட நடத்தையுள்ள பெண்கள். நிசம் உரையார்கள்-உண்மை பேசாதவர்கள். சூதகப் பெண்கள்-தீட்டு அடைந்துள்ள பெண்கள். களேபரம்-பிணம். அரசு நிழல்-அரச மரத்தின் நிழல், கடா நிழல்-எருமைக் கடாவின் நிழல். நிட்டை-நிஷ்டை-தியானம். களர் நிலம்-உப்பு நிலம். மதுபானர்பால்-குடிகாரரிடம். வேல்-வேலமரம். விளா-விளாமரம். அழுக்கடை மனை-அழுக்கு அடையும் மனை. ஏனம்-பன்றி. அசம்-ஆடு. கரம்-கழுதை. தூள் வாரிய-குப்பையை வாரி எடுத்த.

37. கட்டி-பாத்திகட்டி. காஞ்சிபும்—எட்டிக்காய். கைப்பு-கசப்பு. ஓமம்-யாகம். கதி-வேகம்; ஐந்து கதியுமாம். குட்டியரவு-பாம்புக்குட்டி. கொடுவிடம்-கொடிய விடம். குக்கல்-நாய். மட்டை-தென்னை முதலியவற்றின் மட்டை. கோணாமல்-வளையாமல். யோனி-பெண்குறி. கர்ப்பூரம்-பச்சைக் கர்ப்பூரம். வாடை-மணம். உள்ளி-வெள்ளைப்பூண்டு. மட்டி-அறிவில்லாதவன். மார்க்கம்-நல்வழி.

38. மாநிலம்-பூமி. பூடு-புல் பூண்டு. பொலார்-பொல்லார்-பொல்லாதவர். மக்கள்-பிள்ளைகள். கனமருவு-பெருமை பொருந்திய. சூரர்-வீரர். சமர்-போர். ப்ரசங்கம்-பேச்சு, சொற்பொழிவு நடை-ஒழுக்கம். தனதகம் அடுத்தது—தன்னிடத்தில் சார்ந்த பொருளை. பளிங்கு—கண்ணாடி. தருநீதி—நூல்களால் தரப்பட்ட நீதிகளை. கேள்வியால்—பெரியோர்களிடம் கேட்கும் அறவுரையால். வனசம்-தாமரை. தாது-நாடி. விகசிதம்-மலர்தல். வதனம்-முகம்.

39. குணமிலா-நல்லகுணமில்லாத. துஷ்டமிருகங்கள்-புலி, கரடி முதலியன. நயகுணம்-நல்லகுணம். ஔஷதம்-மருந்து. திருப்பிவிடலாம்-உயிரை மீட்டுவிடலாம். பிரமராட்சசி-துர் மரணமடைந்த பிராமணனுயிராகிய பேய். உபாயம்-தந்திரம், உரிய வழி. கால தூதுவர்-எமதூதர். கயவர்-மூடர்.

40. மேலவர்-பெரியோர். வீம்பு-ஆணவம். ஞமலி-நாய். லோபர்-கருமி. தூங்கல்-சோம்பேறி. சண்டிக்கடா-முரட்டுக்கடா. இடுக்கண்-துன்பம். துஷ்டன்-தீயவன். ஈசன்-சிவன்.

41. முற்பட்சமான பேர்-முன் பட்சமான பேர்-முன்னே அன்பாயிருந்தவர். விற்பனம்-அறிவு. விருதா-பயனில்லாத. மகத்துவம்-மேன்மை. மற்புயம்-வலிமையான தோள். நீபமாலை-கடப்ப மாலை. லோலன்-விருப்பமுள்ளவன்.

42. அஷ்டமச்சனி-எட்டாம்வீட்டிலுள்ள சனி. அங்காரகன்-செவ்வாய். அங்காரகச்சன்மம்—அங்காரகனிருக்கப் பிறத்தல். தன்னை மிஞ்சி-எசமானனை மீறி. சந்திராட்டகம்-எட்டாமிடத்துச் சந்திரன். சன்மச் சூரியன்-லக்கினத்திலுள்ள சூரியன். நன்னயம்-நல்ல நீதி. வியாழன்-குரு. கொண்டோன் கொடுத்துளோன்-பெண் கொண்டவன் பெண் கொடுத்தவன். மன்—நிலையான.

அயன்-பிரமன். நம்பன்-சிவபெருமான். மந்திரம்-பிரணவ மந்திரம்.

இவ்விடங்களில் நிற்கும் கிரகங்கள் தீங்கு செய்யும் என்பது சோதிட நூற்கருத்து.

43. விருக்ஷம்-மரம். தரு-மரம். மகமேரு-பெரிய மேரு மலை. சாயல்-உருவம். பந்தமிகு-விருப்பமிகுந்த. தணீர்-தண்ணீர். படிகமணி-படிகக்கல்லாலாகிய மணி. வடம்-கயிறு. குணம்-நிறம். அந்தமிகு-அழகுமிகு. தரித்திடின்-அணிந்தால். அடுத்தது-அடுத்துள்ள பொருள். சகவாசம்-உடன் உறைதல், பழகுதல். செயின்-செய்தால். மந்தர நெடுங்கிரி-மந்தரம் என்னும் நெடிய மலை. அரி-திருமால்.

44. ரகுராமன்—ரகு குலத்தில் தோன்றிய இராமன். அருங்காடு-வசித்தற்கு அரியகாடு, தண்டகாரண்யம். அண்டர்-தேவர், வானோர். பரமன்-சிவன். ஆலம்-விஷம். லபித்ததென்ன-கிடைத்ததென்ன. வென்றி-வெற்றி. களவில்-பிறர் அறியாமல். வேடிச்சி-வேடர் குலத்தில் வளர்ந்த வள்ளி. மேதினி-பூமி. அயன்-பிரமன். சிரம்-தலை. பொய்சொலா மன்னவன்—பொய்சொல்லா மன்னவனாகிய அரிச்சந்திரன். எத்தனப்படி-நோக்கப்படி, கருதியபடி. மன்று-பொன்னம்பலம், தில்லை. கங்காதரன்-கங்கையைத் தரித்தவன். வரபுத்ர-சிறந்த புதல்வனே.

45. வாக்யம்-சொல். பரிபாலனம் செய்தல்-காப்பாற்றுதல். தசரத குமார ராமன்-தசரதனின் மகனாகிய இராமன். தமையன்-மூத்தோன். நால்வர்-வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன். சிந்தை-மனம். குரு-வசிட்டர். தேகி-'கொடு' எனும் இரத்தற் குறிப்புச்சொல். தேகி-தியாகி-வள்ளல். தான கன்னன்-கொடையாளியாகிய கர்ணன். நிந்தை தவிர்-பழி நீங்கிய. நீள் பெலம்-மிகுந்த பலம். நிறை-கற்பு. பத்தா-கணவன். தும்பி முகன்-யானை முகக்கடவுள்; விநாயகன். துணைவா-சகோதரனாகிய முருகனே.

46. வங்காளம் ஏறுகினும்—வங்காள தேசத்திற்குக் கப்பல்மேல் ஏறிச்சென்றாலும். வாருகோல்-துடைப்பம். ஒரு காசு மட்டன்றி—ஒரு காசு அளவேயல்லாமல், அதிகம்—அதிகவிலை. கங்கா சலம்—கங்கை நீர். நாழி—நாழி அளவுள்ள பாத்திரம். ஐங்காதம்-ஐந்து காத தூரம். வெகு தொலை-வெகுதூரம். அமைத்தபடி-விதியின்படி. செந்தமிழ்-செந்தமிழ்ப்பாடல்.

47. கஞ்சன்—கம்சன். வரப்ரசாதங்கள்—கடவுளின் அருட்கொடை. பாரமிகு-பெருமைமிகு, கொடுமைமிகு என்றும் குறிக்கலாம். பாரிப்பு-வீரம். ஏர் அணவு-அழகு பொருந்திய. கனதை-பெருமை. சம்பத்து-செல்வம், பேறு. இடும்பு-தீயசெயல். மாரன்-மன்மதன்.

48. மாமதி-அழகிய மதி. முயல்-முயற்களங்கம். வாவி-குளம். புதல்-ஒரு புல்வகை; புதர். தீந்திடும்-தீய்ந்திடும். புண்டரிகம்-தாமரை. இரவி-சூரியன். போது-சூரியன் (ஆகுபெயர்). தேமுடல்-(உயிர்க்கு) இடமான உடல். சிநேகம்-நட்பு. வாமன சொருபம்-குள்ள வடிவம். யானை முகன்-விநாயகன்.

49. சேய்-பிள்ளை. புரட்டாசி பாதி சம்பா நடுகை—புரட்டாசி மாதம் பதினைந்தாம் நாளில் நட்ட சம்பா நெற்பயிர். பலம் இனிய-பலன் தருதலில் மிக்க. நாணயம்—வாக்குத்தவறாமை. விருது-வெற்றிச் சின்னம். விவேகிகள்-அறிவாளிகள். அபிவிர்த்தி-பெருகுதல், வளருதல். தரளமாலை-முத்துமாலை.

50. காலங்களுக்கு-கஷ்ட காலங்களுக்கு. பிறர் பாரி-பிறர் மனைவி. சதமென்று-நிலையென்று. குடிவாழ்க்கை-குடும்ப வாழ்க்கை. தேசாந்தரம்-பிறநாடு. சுகியம்-சொந்தமானது. தருண துரிதத்தில்-தேவையான நேரத்தில் உடனடியாக. வல் ஆன-சூதாடும்காய் போன்ற.

51. நமன்-எமன். முசல்-முயல். தீவாதையான-தீப்பட்ட. கைக்கேறு-கையில் அகப்பட்ட. மாடமிசை-வீடுகளின்மேல். அன்னக்கொடித்திரள்கொள்—அன்ன தானத்துக்காகக் கட்டிய கொடிகளின் கூட்டங்களைக் கொண்ட. சோணாடு-சோழநாடு.

52. கடுகடுத்து-சினத்தோடு, வெறுப்போடு. களி கொண்டு-மகிழ்வுற்று. வேள்வி-யாகம். சொலாமை-சொல் லாதிருத்தல். அவிவேகி—அறிவில்லாதவன். வெகுமதி—கொடை. வேளைகண்டு-தேவையான காலத்தில். சடுதி-விரைவு. பக்குவம் சொல்லுங்கொடை—பிறகு தருகிறேன் எனல். இலை யென்னல்—இல்லை என்று கூறுதல். தாரித்திரியம்-வறுமை. மடு-நீர்நிலை. கரி-கஜேந்திர யானை. ஓலமென்ன-அபயம் என்று முறையிட.

53. தாரகைகள்—நட்சத்திரங்கள். கொடி—காகம். தொனி-ஒலி. குஞ்சரம்-யானை. கோகனகம்-தாமரை. மக-பெரிய. விற்பனன்-அறிவுடையோன். வாரணக்கொடி-கோழிக்கொடி. கரம்-கை.

54. மக்கள்-பிள்ளைகள். கணிகை-விலைமகள். ஒரு சந்தி-ஒருபொழுது; விரதம். பாண்டம்-மண் பாத்திரம். களவு-திருட்டு. வனமூடு-வனத்தில்-காட்டில்.

55. மடு-குளம். கஞ்சமலர்-தாமரை மலர். மருவி-பொருந்தி. வடு-மாம்பிஞ்சின் பிளவு. கடு-விஷம். பொரு-வும்-ஒத்த.

56. பூவில்—பூமியில். சந்தைப் பெரும்பேட்டை—சந்தை கூடுகின்ற பெரிய இடம். பொது அம்பலம்-எல் லாரும் தங்குதற்குரிய இடம். மேவல்-விரும்புதல். அல்குல்-பெண்குறி. தண்டம்-அபராதம். கபடம்-வஞ்சனை. மா-மாமரம்.

57. சற்குரு-ஞானாசிரியன். நிந்தைசெய்-இகழுகின்ற; செரு-போர். வரிசை-பாராட்டு, பரிசு. வாய் மதம்-மதியாது பேசுதல், ஆணவப்பேச்சு.

58. மேல்வட்டம்-உயர்ந்த நிலை. ப்ரகாசஞ் செய்வோன்-பெருமையுறச் செய்வோன். அனுதினம்-நாள்தோறும். சிந்தை செய்பவள்-தியானஞ் செய்பவள். சிநேகிதன்-நண்பன். சோதரன்-சகோதரன். குரவன்-ஆசிரியன். துய்யன்-தூயவன். சிஷ்ன்-சிடன். விரகம்-காமநோய்.

59. கமல மலர்-தாமரை மலர். சனித்த-தோன்றிய. தேகம்-உடல். பூச்சி-பட்டுப்பூச்சி. அபிடேகம்-திருமஞ்சனம். புலால்-இறைச்சி. ஈனம்-இழிவு.

60. ஆசரித்து-வழிபட்டு. தீனானது-உணவானது. பீடை-நோய். சனு-நேசம். ஏலாத-ஏற்காத. இவண்—இவ்விடத்து.

61. விவகாரம்-வழக்கு. பரிதானம்-கைக்கூலி, இலஞ்சம். தனவான்-செல்வர். பக்ஷ பாதம்-ஒருசார்பு. லிகிதம்-எழுத்து, பத்திரம், சிட்டு முதலியன. சாக்ஷி-சாட்சி-கண்ணால் பார்த்தவன். சபா சமதம்-சபைக்குச் சம்மதமாக. இருதலையும்-இருபக்கமும். சமன்-சமம். கோல்போல்-துலாக்கோல்போல. முறை-பொருக்குரிய.

62. ஓரம்—ஒரு சார்பு. பாழ்நத்தம்—பாழ்மனை. தாரணி-பூமி. கிளை-சுற்றத்தினர். உகும்-உதிரும். சந்ததி-பிள்ளைகள். மூத்த தையல்-மூதேவி. ரவுரவ ஆதி நரகம்-ரவுரவம் முதலிய இருபத்தேழு நரகம். வாரம்-அன்பு. அனுபூதி-பட்டறிவு, ஞானம்.

63. கொங்கை-மார்பகம். பணி-நகைகள். நிறை கல்வி-நிறைந்த கல்வி. சங்கை-மரியாதை. தரிக்கினும்-மேற்கொண்டாலும். கனதை-பெருமை. சட்சுவை-ஆறு

சுவை. பதார்த்தம்-சோறு ஒழிந்த கறி முதலிய உணவுப் பொருள், திருத்தி-திருப்தி. பங்கயம்-தாமரை. பாரித்தும்-பரவியும், அதிகமாயும். நியமமாய்-விதிமுறைப்படி.

64. வாரி-கடல். சனனம்-பிறப்பு, தோற்றம். யோகம்-அதிர்ஷ்டம். பார்-பூமி. படி-உலகம். பருப்பதம்-மலை. தெரிவையர்கள்-பெண்கள். வாரிச மடந்தை-தாமரையில் திகழும் திருமகள்.

65. தந்தாரம்-தம் மனைவி. பர தாரம்-பிறருடைய மனைவி. சமர்-போர். அந்தாரம்-அம் தாரம்-அழகிய மனைவி. நிலை-ஒரு நிலை. மரபு-சந்ததி, பழைய முறைமை. தனிவழி-பிறர் மனைவியைக் கருதித் தான் தனியே செல்லும் வழி. நந்தாத-கெடாத. சனம்-சுற்றத்தினர். இனம்-உறவினர். மந்தாரம்-ஐந்து மரங்களில் ஒன்று. சுகந்தம்-நல்ல மணப்பொருள். ஆதி-முதலானவை.

66. கனபாரம்-மிகுந்த எடையுள்ள பொருள். கருதலர்கள்-பகைவர்கள். கனசூரன்-பெரிய வீரன். அமரில் முறியான்-போரில் தோற்று ஓடமாட்டான். தினம்-நாள் தோறும். வேங்கை-புலி. சிவனளவில்-தன் உயிரிருக்கும் வரை. கீரற்கு-கீரனுக்கு.

67. கடாக்ஷம்-கடைக்கண் பார்வை. பொருள் ஒரு துரும்பு-அரிய பொருள்களும் துரும்பு போல எளிதிற் கிடைக்கும். புகல்-சொல்லுகின்ற. பெருக்காறு-பெருகி வரும் ஆற்று வெள்ளம். அனுதினம்-தினந்தோறும். பிரதிஷ்டை யுண்டாம்-நிலைத்திருப்பதாகும்.

68. நளினம்-தாமரை. பசுந்தோகை-பச்சை நிறத் தோகைகளை உடைய மயில். கருத்தில்-மனத்தில். மதியம்-நிலா. குமுதம்-அல்லி. வல்லிரவு-கொடிய இரவு. பக்ஷம்-அன்பு. புடை-பக்கம். மருவு-சேர்ந்திருக்கின்ற. அதிபனே-தலைவனே.

69. கூகைக்-கோட்டான், பேராந்தை. கனகமுடியரசர்-பொன்மகுடம் சூடிய மன்னர். காருதுசய காலம்-வெற்றிக்குரிய காலம். கார்காலம்-மழைக்காலம். தருண காலத்தில்-தேவையான காலத்தில். மிடியாளர்-வறுமையடைந்தவர். நாகரிகம்-உயர்வு. வசந்த காலம்-இளவேனிற் காலம். உகந்து-விரும்பி, மகிழ்ந்து. மாகு-அழகான.

'கர்லைகல் மாலைபுல்' எனும் உலக வாடிக்கை-என்பது பழமொழி. காலையில் கல்லின்மேலும் மாலையில் புல் தரையிலும் இருக்கவேண்டும் என இதற்குப்பொருள் உரைப்பர்.

70. சலதிமிசை-கடலின்மேல். கரி-யானை. விரை-வாசனை, மணம். பரமர்-சிவபெருமான். வேணி-சடை. வேங்கை-புலி. துஷ்டர்-தீயவர். வரை-மூங்கில்; புல்லாங் குழல். மர்யன்-கண்ணன். பஞ்சவர்கள்-பஞ்சபாண்டவர் கள். வன்போர்-வலியப் பாரதப் போரில்.

71. மனு-மனுச்சக்கரவர்த்தி. மாந்தாதா-ஓர் அரசன். மடியாது-இறந்து போகாமல். வாரிவைத்தவர்-திரட்டிச் சேர்த்து வைத்தவர். 'பனியதனை நம்பியே ஏர்பூட்டு கதையென'—என்பது பழமொழி. அனிதம்-அநீதமாய், அநியாயமாய். விருதா-வீண். மாய்வது-இறப்பது. முத்தி-முக்தி, வீடுபேறு. காம விகாரம்-காமத்தால் உண்டாகும் வேறுபாடு.

72. வேட்டகம்-வேட்ட அகம்; திருமணம் செய்து கொண்ட வீடு; மாமியார் வீடு. மருகன்-மருமகன். ஊட்ட மிகு வாக்கவகை—உண்பித்தற்குரிய பலகார வகைகள். தைலம்-எண்ணெய். பாக்கிலை-வெற்றிலை, பாக்கு.

73. ஆற்றின்மடு-ஆற்றிலுள்ள பள்ளம். நவில்-சொல்லுகின்ற. சகடு-சக்கரம், வண்டியுருளை. நிதியோர்-

செல்வர். மிடித்திடுவர்-வறுமையடைவர். மிடியோர்-ஏழைகள். பாரி-மனைவி. சனம்-வேலையாட்கள். நிதி-செல்வம். பூஷணம்-ஆபரணம். மருவு கனவாகும்-தூக்கத்தில் வரும் கனவு போலாகும்.

74. சடம்-மானுட உடல். சதிர்-சதுர்-சாமர்த்தியம். ரணசூர வீரன்-போரில் வல்ல வீரன். தேகி என-கொடு என்று, வள்ளல் என்று. அடைவு-முறைமை. துரைமக்கள்-பெருஞ்செல்வர், அதிகாரிகள். பூபாலர்-பூமியைப் பரிபாலிப்பவர், அரசர். வடகோடு-வடக்கிலுள்ள மகாமேரு மலை. மணி உரகன்-தலையில் ம்ணிகளையுடைய ஆதி சேடப் பாம்பு.

75. தேகசீவன்-உடலிலுள்ள உயிர். அன்னம்-சோறு. சுகித்தல்-இன்புறுதல். ஆணை-சத்தியம். இதழ்-உதடு. சும்பனம்-இதழ் முதலியன சுவைக்கை, முத்தமிடல். உகப்பர்-விரும்புவர். கை முதல்-கையிலுள்ள பணம். தாய் கலகம் மூட்டி-தாய்க்கிழவியால் கலகத்தை அதிகப்படுத்தி. வண்டப் பரத்தையர்-தீய விலைமகளிர்.

76. உறுதி-வலிமை. சத்ய வசனம்-உண்மை பேசுதல். மெய்க்குறுதி முன் பின்-உடம்புக்கு வலிமை முன்னும் பின்னும் பிறந்தவர்களாகிய அண்ணனும் தம்பியும். வித்வசனம்-கற்றறிந்தவர்கள். விரகர்-காமுகர். மூப்பு-முதுமை. ஊண்-உணவு. தீரம்-துணிவு. செய்க்கு-வயல்களுக்கு. பார்க்கு-பூமிக்கு. வேழம்-யானை. சர்ச்சனர்-சற்சனர்-நல்ல மக்கள். சுரமங்கை-தேவயானை.

77. வசனம்—சொல், பேச்சு. சிறுமை—துன்பம். விசாரம்-கவலை. விருந்து-விருந்தினர். உலகம்-உலகில் உள்ளவர்கள். மறுவசனம்-பதில் வார்த்தை.

78. ஆனை-யானை. ஏதம்-குற்றம். அறை-சொல்லுகின்ற. குறள்-குறை சொல்பவன். போசனம்-உணவு.

இசை-சுவையமைதி. கோன்-இடையன். சேனை-படை. கருமம்-தொழில். ருஷபம்-ரிஷபம்-காளை. மான்-மான் மகளாகிய வள்ளி.

79. அமுதபானம்-இனியநீர். ஆதவன்-சூரியன். கட் செவி-பாம்பு. குவலயம்-பூமி. கொல்லை-விளைநிலம். சாவிபோய்விட்டாலும்-சாவியானாலும், விளையாமல் பதரா னாலும். உதாரி-கொடையாளி, வள்ளல். மிடி-வறுமை. சூர சங்கார கம்பீரனே-சூரபத்மனை அழித்த பெருந்தகை மையாளனே!

80. சார்பு-தெய்வபலம். முதல்-முதலீடாகும் பொருள். தயை-அன்பு. முயல்வு-முயற்சி. துர்க்குணம்-தீயகுணம். துஷ்டர்-தீயவர். வாலி-கிட்கிந்தை அரசனாகிய வாலி. அஸ்திரம்-அம்பு. நெடுமால்-திருமால்.

81. பஞ்சரித்து-தொந்தரவு செய்து, கெஞ்சிக்கேட்டு. அருமையறியார்-தமது மேன்மையை அறியாதவர்களிடம். எய்தலின்-அடைதலைக்காட்டினும். பரிவு-அன்பு. தஞ் சம்-எளிமை, தாழ்வு. வென்றி-வெற்றி. சரசம்-இனிய குணம். சந்நியாசித்தல்-துறவியாதல். அஞ்சலார்-பகைவர்.

82. கொற்றவர்-அரசர். ராணுவம்-படை. பற்றலார்-அன்பில்லாதவர், பகைவர். தாயாதி-பங்காளி. நிணறு-அன்பு. மன உருக்கம். பரதார மாதர்-பிறர் மனைவியரா கிய பெண்கள். போகம்-இன்பம். நத்தும்-விரும்பும். நாவி-கஸ்தூரி மான், ஊமத்தை.

83. மிடை-நெருங்கிய. வரி-புள்ளி. பங்கேருகம்-தாமரை. உருள் வண்டு இனம்-மலம் உருட்டும் வண்டின் கூட்டம். வன் கண்ணர்-கொடியவர். மைக்காவி விழி-மையிடப் பெற்றதும் குவளை மலரையொத்ததும் ஆகிய கண்.

84. வேங்கைகள்-புலிகள். மாமுகில்-கருமையான மேகம். விரிசிலை-பெரியவில். குனிந்திடுதல்-வளைதல். மேடம்-ஆடு. விடை-எருது. வணங்குதல்-வளைதல். வினைஞர்-தொழிற்றிறம் உடையவர். முதலினர்-செல்வம் மிகுதியாய் உள்ளவர். ஆங்கரவு-ஆங்கு அரவு எனக் கொண்டு, அரவு-பாம்பு எனப் பொருள்கூறுவாரும், ஆம் கரவு எனக்கொண்டு, கரவு-முதலை எனப் பொருள் கூறுவாரும் உண்டு. மகிழ்மலர்-மகிழம்பூ. ஆயர்-இடையர். குழல்-புல்லாங்குழல். அம்புவி-அழகிய பூமி. இளைப்பு-தாழ்ச்சி. அரன்-சிவபெருமான். வலமது வந்து-வலம் வந்து-சுற்றிவந்து. மதகரி-மதயானை; விநாயகன்.

85. சோடு-இணை (சோடியாய்). புறவு-புறா. துருவு கண்டு-ஆராய்ந்து பார்த்து. தோலாமல்-தோல்வி அடையாமல். கணை-அம்பு. வில் வாங்கி-வில்லை வளைத்து. ஊடாடி-இடையே அசைந்து. ராசாளி-வல்லூறு. உதைத்த-உதைத்து உந்திய. சிலை-வில். அடியில்-காலில். சேடு-மிகுதி. வல்விடந்தீண்ட-கொடிய விடத்தையுடைய பாம்பு கடிக்க. வாளி-அம்பு. மெய்-உடம்பு. சிறைப்புறா-சிறகுகளையுடைய புறா. வாழ்ந்த-வாழ்ந்தன.

86. எழுத்து அசை சீர் தளை அடி தொடை என்பன செய்யுள் இலக்கண உறுப்புக்கள். ஈரைம்பொருத்தம்-செய்யுளில் அமைத்தற்குரிய பத்துவகைப் பொருத்த இலக்கணம். மதுரம்-இனிமை. குறள்-திருக்குறள். பாவினம்-ஒவ்வொரு பாவிற்கும் இனமாகிய தாழிசை, துறை, விருத்தங்கள். அலங்காரம்-சொல்லணி, பொருளணி வகைகள். பழுத்து-கனிந்து. ஓசை-அவ்வப்பாவிற்குரிய ஓசை. இசை-இராகம். பாங்கு-அழகு. மழு-மழுவாயுதம். செங்கை-சிவந்தகை. கங்காளன்-எலும்பு அணிந்த சிவபெருமான்.

87. பரி-குதிரை. இயல்-செல்லுகின்ற. சிவிகை-பல்லக்கு. அம்பலம்-பொது இடம். திருநீறு-விபூதி.

தம்பலம்-மெல்லப்பட்ட வெற்றிலை பாக்கு. தரிக்கிலும்-பூசிக்கொண்டாலும். வரிவிழி-செவ்வரி பரந்த விழி. சகம்-உலகம்.

88. புயம்-தோள். வினை-பாவம், தீவினை. நிமலன்-சிவன். சத்தி-உமாதேவி. தாண்டவம்-நடனம். திரு-திருமகள். சஞ்சலம்-கவலை. பரகதி-மேலான கதி, முத்தி.

89. தேவாலயம்-கோயில். தெரிசியா-தரிசிக்காத. கமலபாதம்-தாமரைப் பூப்போன்ற பாதம். சிந்தை-மனம். ஆகமம்-சைவாகமம். சிவபுராணம் சைவபுராணங்கள். விமலன்-மலமற்றவன்; சிவன். சென்னி-தலை. ஏத்திடாத-போற்றிடாத, துதித்திடாத. நற்றீர்த்தம்-புண்ணிய தீர்த்தம், கங்கை முதலியவை. நானிலம்-பூமி. சனனம்-பிறவி. நண்ணினால்-அடைந்தால். மா ஆகி-மாமரமாகி. வேலை தனில்-கடலில். வரு-வந்த. சூரன்-சூரபத்மன்.

90 கோகனக மங்கை—தாமரைப்பூவிலிருக்கும் திருமகள். மூத்தவள்-மூதேவி. ஆட்டின் கண்-ஆட்டினிடத்து. அதர்—கழுத்தில் நீளமாகத் தொங்கும் உறுப்பு. மாகர்—தேவர், வானோர். மொக்குள்-புல்லுருவி. பன்னும்-சொல்லுகின்ற. மாகனகம்-சிறந்த பொன்.

91. குலமான-தன் இனமான. தன் கோத்திரம்-தன் இனம். பார்வைசேர் குருவி-பார்வைக் குருவி; பிற பறவைகளை ஈர்த்து வலையில் சிக்கவைக்கும் பொருட்டு வேடனால் பழக்கப்பட்ட குருவி. ஆர்க்கும்-கண்ணியில் சிக்கவைக்கும். கோளர்-கோள் சொல்லுவோர். உளவன்-உளவு சொல்லுவோன்.

92. கூடுய்த்த-கூடு உய்த்த-கூட்டில் சேர்த்த. நறவு-தேன். பயில்-பழகிய. சோரர்—கணவனல்லாத பிறர், விபசாரம் செய்பவர். பாலன்-மகன். துயில்-தூக்கம். ஒருவர்

பால்-ஒருவரிடத்து. தெரித்திடாமல்-சிதறிடாமல். வயிரம்-விரம்.

93. அழல்-நெருப்பு. பெருக்கான-வெள்ளப் பெருக்கான. கமர்-நிலவெடிப்பு. அலகை-பேய். மணற்சொரி தரும்-மணலிற்பெய்த. விழல்-பயனில்லாத ஒரு புல் வகை. நன்றி-உதவி. விருதா-வீண். கிள்ளை-கிளி.

94. அற்றைநாள் முதலாக — மிக நீண்ட காலம் முதலாக. பழையோர்—பழைய தொடர்புடையோர். அடு பகைவரில்-கொல்ல வந்த பகைவரிடத்திலிருந்து. சரணம் புகுந்தோர்-அடைக்கலமாகப் புகுந்தவர். நன்னயம்-மிக்க இனிமை. நத்து சேவகன்-விரும்பும் வேலைக்காரன். மன் அயில்-நிலைத்த வேல். சேவல்-சேவற்கொடி. சரவண பூபன் — சரவணப் பொய்கையில் உதித்த தலைவனான முருகன்.

95. ஆசுதபு-குற்றம் நீங்கிய. சற்பாத்திரம்-தானம் பெறத் தகுதியுடையவர். ஈந்த-கொடுத்த. கரிவால்-யானையின் வால். வண்டடர்-வண்டுகள் நெருங்கிய. மாலிகாபரணம்-மாலையாகிய ஆபரணம்.

96. சோதரர்-சகோதரர். பிதிர்-இறந்த பெற்றோர். முதலியோரின் ஆன்மா. தியாகம்-கொடை. தமிழ் சொன்ன-தமிழ்நூல் சொன்ன.

97. அஞ்சல்-அடைக்கலம். சமர்-போர். தஞ்சம்-அடைக்கலம். சிபி-சிபிச்சக்கரவர்த்தி. சரீரம்-உடல், உடலின் தசை. தட மலை-பெரிய மலை. தடமலைச் சிறகு அரிந்தவன்-இந்திரன். முதுகென்பு-முதுகெலும்பு. பூத தயவு-உயிர்களிடத்து அன்பு. சீவன்-உயிர். ரட்சிப்பார்-காப்பாற்றுவர். வஞ்ச கிரவுஞ்சம்-வஞ்சனையுடைய கிரவுஞ்ச மலை. கீண்டவா-பிளந்தவனே.

98. ருசி-சுவை. சோபிதம்-ஒளி, அழகு. படிகமணி-வெள்ளை மணி. கனதை-பெருமை. மேடம்-ஆடு. உறின்-பொருந்தினால். வாலிப மினார்கள்-வாலிப மின்னார்கள்-வாலிபப் பெண்கள். வளை-உடல் வளைந்த. பிரியம்-அன்பு. மாலிகை-மாலை.

99. அபயம்—அடைக்கலம். துணை அடி—இரண்டு பாதங்கள். அருச்சனை செயல்-பூசை செய்தல். வைகினும்-தங்கியிருந்தாலும். தாமரையிலை மருவுநீர் என-தாமரை யிலையைச் சேர்ந்த தண்ணீர்போல் பற்றில்லாமல். மாண்பு-குணம். வன்னம்-அழகு. மேல் இவர்ந்து-மேல் ஏறி.

100. வள்ளிக்கொடிக்கு—வள்ளியாகிய பெண்ணுக்கு. கன்னல்மொழி—கரும்புபோல் இனிக்கும் பேச்சு. ஆவிநன் குடி-திருவாவிநன்குடி—பழனி. குருபாததாசன்—இந்நூலை இயற்றிய புலவர். ஆசிரிய விருத்தத்தின்-ஆசிரிய விருத்த யாப்பு வடிவில். அறை-சொன்ன. பதவி-இந்திர பதவி முதலானவை, உயர்ந்த நிலை.

குமரேச சதகம் - பாடவேறுபாடுகள்

இங்குப் பதிப்பிக்கப்பெற்றுள்ள 'குமரேச சதகம்' நூலுக்குரியனவாக இந்நூலகத்தில் ஐந்து ஓலைச்சுவடிப் பிரதிகள் உள்ளன. அவற்றின் எண்கள் : *805, 908, 1024, 1238, 1670.*

'குமரேச சதகம்' நூலின் அச்சுப் பிரதிகளாகப் பார்வைக்குக் கிட்டிய பதிப்புக்களுள் இரத்தின நாயகர் சன்ஸ் வெளியிட்ட நூலும், 'தமிழ்க்கடல்' வெளியீடாக 1932இல் கா. நமச்சிவாய(முதலியா)ரால் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்த நூலும், வாவிள்ள இராமசாமி சாஸ்த்ருலு அண்ட் சன்ஸ் வெளியீடாக மணி. திருநாவுக்கரசு (முதலியார்) அவர்களால் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்த நூலுமாக மூன்று பதிப்புக்கள் குறிப்பிடத்தக்கன.

முற்குறித்த ஐந்து சுவடிகளும் மூன்று பதிப்பு நூல்களும் இப்பதிப்பிற்காகப் பார்வையிடப்பெற்றன. பாடல்கள் முழுமையாகவும் பெரிதும் பிழையில்லா வடிவுடனும் இருந்த 805ஆம் எண்ணிட்ட சுவடியும், திருத்தமான பதிப்பு நூலாகத் திகழும் கா. நமச்சிவாயர் பதிப்பு நூலும் ஒப்பிட்டுப் பார்க்கப்பெற்று இவையிரண்டையும் பெரிதும் அடிப்படையாகக்கொண்டு இப்பதிப்பு உருவாக்கப் பெற்றுள்ளது.

பூச்சிகள் உழுது அரித்து மிகவும் சிதைந்திருந்த *1670*ஆம் எண்ணிட்ட சுவடியைத் தவிரப் பிற சுவடிகளும்

அச்சுநூல்களும் ஒப்புநோக்கப்பெற்றுக் குறிப்பிடத்தக்கதாய் அமைந்த பாடவேறுபாடுகள் பதியப்பெற்றன.

1024ஆம் எண்ணிட்ட சுவடியில் குமரேச சதகத்தின் 49 பாடல்களும் (1—49), 1238ஆம் எண்ணிட்ட சுவடியில் 4 பாடல்களும் (18,26,27.37) மட்டுமே இடம்பெற்றுள்ளன.

908, 1024ஆம் எண்ணிட்ட சுவடிகளில் குமரேச சதகப் பதிப்புக்களில் வழக்கமாக இடம்பெறும் இருபாடல்கள் ('அன்னதா னஞ்செய்தல்', 'வன்னமயி லேறிவரு' எனத் தொடங்குவன.) இடம்பெறாமல் அவற்றுக்குப் பதிலாகப் புதிதாக இரு பாடல்கள் ('ஈவது விலக்கியே', 'நல்லோர்கள் தேடுபொருள்' எனத் தொடங்குவன.) அதே மகுட அடிகளையும் தாங்கி இடம்பெற்றுள்ளன.

சுவடிகளையும் அச்சுநூல்களையும் ஒப்பிட்டுக்கண்ட பாடவேறுபாடுகள் நிரல்படப் பின்வரும் பகுதியில் இடம் பெறுகின்றன. 'இரத்தின நாயகர் சன்ஸ் பதிப்பு' என்பது 'இரத்தின.' என்றும், 'கா. நமச்சிவாய முதலியார் பதிப்பு' என்பது 'கா. ந.' என்றும், 'மணி. திருநாவுக்கரசு முதலியார் பதிப்பு' என்பது 'மணி. திரு.' என்றும் சுருக்கக் குறியீடுகளாகப் பாடவேறுபாட்டு அட்டவணையில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

இனிக் 'குமரேச சதகச்' சுவடிப் பிரதிகளுக்கும் அச்சு நூற்பதிப்புக்களுக்கும் இடையே காணப்படும் பாடவேறு பாடுகளுள் குறிப்பிடத்தக்கனவற்றைக் காணலாம்.

பாடல் எண்	அடி, சீர் எண்	பாடவேறுபாடு	சுவடி எண்/ பதிப்புப் பெயர்
காப்பு	1 : 3, 4	பொருந்துகும ரேசர்தம்மேல்	805
		பொருந்துகும ரேசர்தன்மேல்	908
		,,	1024
		பொருந்துகும ரேசர்மேல்	இரத்தின நாயகர்
		பொருந்துகும ரேசர்தம்மேல்	கா. நமச்சிவாயர்
		,,	மணி. திருநாவுக்கரசு
	2 : 4	கோமேவுங்	908
		கோமேவிக்	1024
		,,	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
அவை யடக்கம்	4 : 12	தருள்புரியவே	805
		(பாடல் இல்லை)	908
		தருள்தாமே	1024
		தருள்புரிகவே	இரத்தின.
		,,	கா. ந.
		தருள்புரிவையே	மணி. திரு.

1	2 : 3, 4	பிரமாதி கட்குஞ்	805
		பிரமாதி முதலாய்ச்	908
		,,	1024
		பிரமாதி கட்குஞ்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	2 : 5	செகுக்கமுடி	805
		செயிக்கமுடி	908
		,,	1024
		செகுக்கமுடி	இரத்தின.
		செயிக்கமுடி	கா. ந.
		செகுக்கமுடி	மணி. திரு.
	3 : 7, 8	நிதமுமெய்த் துணையாய்	805
		நிதமுமே கெதியாய்	908
		நிதமுமெய்க் கதியாய்	1024
		நிதமுமெய்த் துணையாய்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.

	4 : 3	பூங்கடம்பு	805
		பொற்கடம்பு	908
		,,	1024
		பூங்கடம்பு	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
2	1 : 3	யாதிஜெப	805
		மந்திரசிவ	908
		,,	1024
		யாதிசெப	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	1 : 11, 12	குலவுயா காதிபலவும்	805
		குலவுயா காதிமுதலாய்	908
		குலவுவுயிர் ஆதிமுதலாய்	1024
		குலவுயா காதிபலவும்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.

	4 : 6	தெய்வமிவர்காண்	805
		தெய்வமிதுகாண்	908
		தெய்வமிவர்காண்	1024
		,,	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
3	1 : 3, 4	மந்திரா லோசனை	805
		மந்திரியா லோசனை	908
		,,	1024
		மந்திரா லோசனை	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	1 : 7	கொடைநித்தம்	805
		குடைநீதி	908
		,,	1024
		கொடைநித்தம்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.

2 : 7,8,9	பல்லுயி ரெலாந்தன் னுயிர்க்குநிக	805
	,,	908
	பல்லுயி ரெல்லாந்தன் னுயிர்க்குநிக	1024
	பல்லுயி ரெலாந்தம் முயிர்க்குநிக	இரத்தின.
	,,	கா. ந.
	பல்லுயி ரெலாந்தன் னுயிர்க்குநிக	மணி. திரு.
3 : 5	சுகுணமொடு	805
	சுகிர்த	908
	சுகிர்தமொடு	1024
	சுகுணமொடு	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
3 : 7	தோலாத	805
	தோறாத	908
	,,	1024
	தோலாத	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.

' : 9, 10	அறிதல்வினை வலிகண்டு	805
	அறிதல்வல் வினைகண்டு	908
	அறிதல்வினை வலிகண்டு	1024
	,,	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
4 : 6	முறைமையிதுகாண்	805
	முறமையிதுகாண்	908
	,,	1024
	முறைமையிவைகாண்	இரத்தின.
	,,	கா ந.
	முறைமையிதுகாண்	மணி. திரு.
4 2 : 10,11,12	புகினுமவர் வார்த்தையி லெலாங்கொடுப்பார்	805
	புகினும்ஆள் வார்த்தையளி லேகொடுப்பார்	908
	புகினும்ஆள் வார்த்தையி லெவருங்கொடுப்பார்	1024

		புகினுமவர்	
		வார்த்தையி லெலாங்கொடுப்பார்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	3 : 11, 12	கனதிரவியங் கள்விடுவார்	805
		கனதிரவியம் சிலவுசெய்வார்	908
		கனதிரவியங் கள்செய்வார்	1024
		கனதிரவி யங்கள்விடுவார்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	4 : 6	முறைமையிதுகாண்	805
		முறைமையிதுகாண்	908
		,,	1024
		முறைமையிவைகாண்	இரத்தின.
		,,	கா. ந.
		முறைமையிதுகாண்	மணி. திரு.
5	1 : 5, 6	நாடோறும் மழைபொழிவதும்	805
		நாளுமழை பொழிநீதமும்	908

	நாளுமழை பொழிநீதமும்	1024
	நாடோறும் மழைபொழிவதும்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
3 : 12	சூரவலியும்	805
	சூரர்வலுவும்	908
	சூரன்வலுவும்	1024
	சூரவலியும்	இரத்தின.
	சூரர்வலியும்	கா. ந.
	சூரவலியும்	மணி. திரு.
4 : 6	விளைவவன்றோ	805
	மேன்மையன்றோ	908
	,,	1024
	விளைவவன்றோ	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
6 2 : 1,2,3,4	அவமுறுத்தாள்கின்ற அரசொரு பிதாநல்ல	805

	அவனிதனை யாள்கின்ற அரசனும் ஓர்பிதா	908
	அவனிதனை யாள்கின்ற அரசர்ஒரு பிதாநல்ல	1024
	அவமறுத் தாள்கின்ற அரசொரு பிதாநல்ல	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
2 : 7-12	அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா அன்புளமு னோனொருபிதா	805
	அஞ்சாதே யென்றுதுயர் தீர்த்தவனும் ஓர்பிதா அண்ணனோ சகோதரபிதா	908
	அஞ்சாதே யென்றுதுயர் தீர்த்தவனும் ஒருபிதா அண்ணனோ சகோதரபிதா	1024
	அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா அன்புளமு னோனொருபிதா	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.

3 : 3	பெற்றுளோன்	805
	பெற்றவனும்	908
	,,	1024
	பெற்றுளோன்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
3 : 8,9,10	இவரை நித் தம்பிதா என்றுளங்	805
	இவர்கள் தனை நிதமும் பிதாவெனக்	908
	இவர்கள் தனை நித்தம் பிதாவெனக்	1024
	இவரை நித் தம்பிதா என்றுளங்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
3 : 12	நீதியாகும்	805
	நீதமன்றோ	908
	,,	1024
	நீதியாகும்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
7 1 : 9, 10	இருக்கும விடந்தனில்	805

2 : 3, 4	இருக்குமவ் விடத்தினில்	908
; 9, 10	,,	1024
	இருக்கும விடந்தனில்	இரத்தின.
	,,	கா. ந.
	இருக்கும் இடந்தனில்	மணி. திரு.
2 : 5, 6	விண்டுவின் களையிருக்கும்	805
	விஷ்ணுகளை பூண்டிருக்கும்	908
	விஷ்ட்டுனுவின் களையிருக்கும்	1024
	விண்டுவின் களையிருக்கும்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
2 : 12	தயையிருக்கும்	805
	தயவிருக்கும்	908
	,,	1024
	தயையிருக்கும்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.

3 : 2, 3	இனியதயை யுள்ளவ	805
	இனியதய வுள்ளவ	908
	,,	1024
	இனியதயை யுள்ளவ	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
3 : 12	திறலிருக்கும்	805
	செயமிருக்கும்	908
	,,	1024
	திறலிருக்கும்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
4 : 1, 2	வைத்திசை மிகுந்ததிறல்	805
	வர்த்தனை மிகுந்தசெயம்	908
	வைத்திசை மிகுந்தசெயம்	1024
	வைத்திசை மிகுந்ததிறல்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.

	4 : 6	சிறக்குமன்றோ	805
		சிறக்குமென்பார்	908
		,,	1024
		சிறக்குமன்றோ	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
8	1 : 6	மாணாக்கருக்கு	805
		ச்ஷருக்கு	908
		,,	1024
		மாணாக்கருக்கு	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	1 : 11, 12	அகற்றினோ னேதெய்வமாம்	805
		அகற்றினோன் பெரியதெய்வம்	908
		அகத்தினோன் பெரியதெய்வம்	1024
		அகற்றினோ னேதெய்வமாம்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.

2 : 11, 12	காக்குமன்ன வர்தெய்வமாம்	805
	காக்குமன்ன வர்கள்தெய்வம்	908
	,,	1024
	காக்குமன் னன்தெய்வமாம்	இரத்தின.
	,,	கா. ந.
	காக்குமன் னவர்தெய்வமாம்	மணி. திரு.
3 : 6	மாந்தர்யார்க்கும்	805
	மானர்தனக்கு	908
	மான்தனக்கு	1024
	மாந்தர்யார்க்கும்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
4 : 5, 6	வானவர்க்குத் தெய்வம்நீ	805
	வரமருள் மகாதெய்வம்நீ	908
	,,	1024
	வானவர்க்குத் தெய்வநீ	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.

9	2 : 9	நினைவுதன	805
		நினைவுகன	908
		,,	1024
		நினைவுதன	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	3 : 6,7,8	கற்பவர்க்குத் தருகல்வி மேனினைவு	805
		கற்றவர்க்குத் தருகல்வி மேலேநினைவு	908
		கற்றவர்க்குத் தருகல்வி மேல்நினவு	1024
		கற்பவர்க்குத் தகுகல்வி மேனினைவு	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	4 : 1-6	மானபர னுக்குமரி யாதைமேல் நினைவெற்கு மாறாதுன் மீது நினைவு	805

		மானபர னுக்கு மரியாதி மேல்நினைவு வண்டு மது மீதில்நினைவாம்	908
		மானபர னுக்கு மரியாதி மேல்நினவு வண்டுமது மலர்தன் மீதில்நினவாம்	1024
		மானபர னுக்குமரி யாதைமேல் நினைவெற்கு மாறாதுன் மீதுநினைவு	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	2 : 12, 3 : 12	மீதுநினைவு	805
		மீதில்நினைவு	908
		,,	1024
		மீதுநினைவு	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
10	1 : 5, 6	வேந்தற்கு நன்றியில்லை	805
		வேந்தருக்கு நிகருமில்லை	908
		வேந்தர்க்கு நினவுமில்லை	1024

	வேந்தற்கு நன்றியில்லை	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
2 : 6	மூர்க்கன்றனக்கு	805
	மூர்க்கருக்கு	908
	,,	1024
	மூர்க்கன்றனக்கு	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
3 : 4,5,6	யாவுமுணர் புலவனுக் கயலோரிலை	805
	யாவருக்கும் புலவர்க்கு வேற்றுமையில்லை	908
	யாமவரும் புலவர்க்கு வேத்திமையில்லை	1024
	யாவுமுணர் புலவனுக் கயலோரிலை	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.

	3 : 12	கிரக்கமில்லை	805
		கிரக்கமில்லையாம்	908
		,,	1024
		கிரக்கமில்லை	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	4 : 1-6	மாசைத் தவிர்ந்தமதி முகதெய்வ யானையொடு வள்ளிக் கிசைந்த்வழகா !	805
		மாசைத் தவிர்த்தமுழு மதிவதன தெய்வானை வள்ளிமண வாளநேயா	908
		மாசைத் தவிர்ந்தமுழு மதிவதன தெய்வானை வள்ளிமண வாளநேயா !	1024
		மாசைத் தவிர்ந்தமதி முகதெய்வ யானையொடு வள்ளிக் கிசைந்தவழகா !	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
11	1 : 3	உலகபரி	805
		ராச்சியபரி	908
		,,	1024

		உலகபரி	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	1 : 6	னேயரசனாம்	805
		னேமன்னவன்	908
		,,	1024
		னேயரசனாம்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	1 : 8	சனைதெரிந்து	805
		சனைகண்டு	908
		,,	1024
		சனைதெரிந்து	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
12	1 : 6	பயிர்கொள் களையை	805
		——	908
		——	1024

	பயிர்கொள்களையை	இரத்தின
	பயிர்கொல்களையை	கா. ந.
	பயிர்கொள்களையை	மணி. திரு.
1 : 10	முடையோரை	805
	காரை	908
	,,	1024
	முடையோரை	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
1 : 11, 12	அகிர்த்தியப் பெண்களார்ப்பை	805
	அகத்தினில் பெண்கள்மூப்பை	908
	,,	1024
	அகிர்த்தியப் பெண்களார்ப்பை	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
2 : 12	கோபந்தனை	805
	கோபங்களை	908
	,,	1024

		கோபந்தனை	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	4 : 5, 6	மணஞ்செய்த பேரழகனே	805
		மணம்புணருகின்றமுருகா	908
		,,	1024
		மணஞ்செய்த பேரழகனே	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
13	2 : 8	மோக்ஷசிந்	805
		தர்மசிந்	908
		,	1024
		மோக்ஷசிந்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	2 : 11	பெண்யோகம்	805
		பெடைமனையாள்	908
		,,	1024

பெண்போகம்	இரத்தின.
பெண்மோகம்	கா. ந.
பெண்போகம்	மணி. திரு.

3 : தீராத சகலமும் வெறுத்ததுற விக்குவிறல்
சேர்வேந்த னொருதுரும்பு
செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ்
செந்தமிழ்க் கவிதுரும்பாம் 805

தோறாத சகலமும் வெறுத்ததுற விக்குவலு
தொல்வேந்த னொருதுரும்பு
தூயகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ்
சொல்கவி துரும்புபோலாம் 908

தோறாது சகலமும் வெறுத்திடும் துறவோர்க்கு
தொல்வேந்த னொருதுரும்பு
தூயகலை ஞானமகள் கடாட்சமுள் ளோர்க்கெல்லாம்
சொல்கவி துரும்புபோலாம் 1024

தீராத சகலமும் வெறுத்ததுற விக்குவிறல்
சேர்வேந்த னொருதுரும்பு

	செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ்	
	செந்தமிழ்க் கவிதுரும்பாம்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
4 : 2	மணிகொள்முலை	805
	களபமுலை	908
	,,	1024
	மணிகொள்தன	இரத்தின.
	மணிகொள்முலை	கா. ந.
	,,	மணி. திரு.
4 : 5,6	மணம்புணரும் வடிவேலவா	805
	மணம்புணரு கின்றமுருகா	908
	,,	1024
	மணம்புணரும் வடிவேலவா	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.

14	1 : 7, 8	பதிவிளக் குவதுபெண்	805
		பதிவிளக்குவ தில்லாள்	908
		,,	1024
		பதிவிளக் குவதுபெண்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	2 : 1, 2	இகல்விளக் குவதுவலி	805
		இகல்விளக் குவதுபெலம்	908
		,,	1024
		இகல்விளக் குவதுவலி	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	2 : 3, 4	நிறைவிளக் குவதுநலம்	805
		நிறைவிளக் குவதறிஞர்	908
		,,	1024
		நிறைவிளக் குவதுநலம்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.

2 : 6	குவதுசுதி ஊர்	805
	குவதுசுதிகள்	908
	,,	1024
	குவதுசுதிஊர்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
2 : 7,8,9	இடம்விளக் குவதுகுடி உடல்விளக்	805
	ஏர்விளக் குவதுகுடி உயிர்விளக்	908
	,,	1024
	இடம்விளக் குவதுகுடி உடல்விளக்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
3 : 1	புகல்விளக்	805
	புகழ்விளக்	908
	,,	1024
	,,	இரத்தின.
	புகல்விளக்	கா. ந.
	புகழ்விளக்	மணி. திரு.

15	1 : 1-6	சிங்கார வனமதி லுதிப்பினுங் காகமது தீஞ்சொல்புகல் குயிலாகுமோ	805
		சிங்கார மானதொரு தோப்பில் கரட்டோந்தி செனித்திடுங் கிளியாகுமோ ?	908
		சிங்கார மானபூந் தோப்பினிற் கரட்டான் செனித்திடில் கிளியாகுமோ ?	1024
		சிங்கார வனமதி லுதிப்பினுங் காகமது தீஞ்சொல்புகல் குயிலாகுமோ	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	1:9,10,11	பூத்தாலு மேகொட்டி செங்கஞ்ச	805
		கொட்டிமல ரானது செழுங்கஞ்ச	908
		,,	1024
		பூத்தாலு மேகொட்டி செங்கஞ்ச	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	2 : 1-6	அங்கான கத்திற் பிறந்தாலும் முயலான தானையின் கன்றாகுமோ	805

	அங்கா்ன யானைதனி லேபிறந்திடு லத்தி யானையின் கன்றாகுமோ	908
	அங்கான யானைதனி லேபிறந்திடு லெத்திதான் யானையின் கன்றாகுமோ	1024
	அங்கான கத்திற் பிறந்தாலும் முயலான தானையின் கன்றாகுமோ	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.

* 908, 1024ஆம் எண் சுவடிகளில் மட்டும் 'அங்கான' எனத் தொடங்கும் அடி மூன்றாம் அடியாகவும் 'சங்கான' எனத் தொடங்கும் அடி இரண்டாம் அடியாகவும் காணப்படுகின்றன.

3 : 2, 3	பாற்கடல் பிறக்கினும்	805
	பாற்கடலில் வந்ததைத்தான்	908
	வரிபெத்த பாற்கடலின்	1024
	பாற்கடல் பிறந்தாலும்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
3:8,9,10,11	கடல்நீரி லேயுப்பு விளையினுஞ் சாரசர்க்	805
	கடல்நீரில் விளையு மூப்பானது சமைந்தசர்க்	908

		கடல்நீரில் விளையுமுப் பானது சமைந்தசர்க்	1024
		கடல்நீரிலேயுப்பு விளையினுஞ் சாரசர்க்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	4 : 2	செந்தமிழ்	805
		பனுவலைக்	908
		,,	1024
		செந்தமிழ்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
16	1 : 4	குணமுடைய	805
		குணமான	908
		,,	1024
		குணமுடைய	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	1 : 9	துறுதருவின்	805
		தருவிலுறை	908
		,,	1024

	துறுதருவின்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
2 : 12	போலூற்றமும்	805
	தனிலூற்றமும்	908
	போலூற்றமும்	1024
	,,	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
3 : 5, 6	வீசு மாருத சீதமும்	805
	விளங்குமா ருதஞாயமும்	908
	,,	1024
	வீசுமா ருதசீதமும்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
4 : 1	வண்டிமிர்	805
	வண்டணி	908
	,,	1024

		வண்டிமிர்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
17	1 : 2	னதுதழலில்	805
		னதுதணலில்	908
		,,	1024
		னதுதழலில்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	1 : 5	தன்னொளி	805
		தருமொளி	908
		,,	1024
		தன்னொளி	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	1:9,10	மெலிந்துதேய்ந் தாலுமோ	805
		மெலிவாகி னாலுமோ	908
		,,	1024

	மெலிந்துதேய்ந் தாலுமே	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
2 : 1-6	பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமோ பொலிவெண்மை குறைவுறாது	805
	பொங்குமிகு சங்குவெந் துருகிவிட் டாலுமோ பொருவெண்மை குறைவறாது	908
	,,	1024
	பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமே பொலிவெண்மை குறைவுறாது	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.
2 : 8	காய்ந்துநன்	805
	காச்சிவெண்	908
	காச்சுவெண்	1024
	காய்ந்துநன்	இரத்தின.
	,,	கா. ந.
	,,	மணி. திரு.

	3 : 9,10	மடிந்தாலும் அவர்களது	805
		மிடித்தாலும் அவர்களுட	908
		,,	1024
		மடிந்தாலும் அவர்களது	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
	3 : 12	தவறாகுமோ	805
		தவறுவாரோ	908
		,,	1024
		தவறாகுமோ	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.
18	1 : 5,3:4	மறந்தவர்	805
		மறந்தவர்கள்	908
		—	1024
		மறந்தவர்	இரத்தின.
		,,	கா. ந.
		,,	மணி. திரு.

1 : 6	கொலைப் பாதகர்	805
	குலைபாதகர்	908
	,,	1024
	குலபாதகர்	1238
	கொலைப்பாதகர்	இரத்தின.
